சுவாமி

# அருளுரைகள்



ராமதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T) 200/92

உ

சிவமயம்

# சுவாமி
# ராமதாஸ் அருளுரைகள்

பாகம் 1

தமிழாக்கம் :
ம. சி. சிதம்பரப்பிள்ளை
தெல்லிப்பளை.

INTERACT CLUB
of
MAHAJANA COLLEGE
TELLIPPALAI

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
வெளியீடு

1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பெயர்: சுவாமி ராமதாஸ் அருளுரைகள்
பாகம் 1
வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.
வெளியிட்ட
திகதி: ஆடி 1989
பிரதிகள்: 1000
பதிப்புரிமை: ஷெ தேவஸ்தானம்
மூலம்: ஆங்கிலம்
தமிழாக்கம்: ம. சி. சிதம்பரப்பிள்ளை
அச்சுப்பதிப்பு: மஹாத்மா அச்சகம், ஏழாலை.
இலங்கை.

விலை ரூபா: 30/-

Name of book: Swami Ramadas Aruluraikal
Part I
Publisher: Sri Durgadevi Devasthanam,
Tellippalai, Sri Lanka.
Date of publication: July 1989
No. of Copies: 1000
Copy Right: Sri Durgadevi Devasthanam,
Tellippalai, Sri Lanka.
Original: English
Translation: M. S. Sithamparappillai
Printers: Mahathma Printing Works,
Erlalai. Sri Lanka

Price Rs. 30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்

ஆசியுரை — I
சி. கணேசலிங்கக் குருக்கள்

ஆசியுரை — iii
நா. முத்தையா

நூற்றிறன் சாற்றுரை — V
நம. சிவப்பிரகாசம்

அணிந்துரை — VI
மு. கந்தையா

பாராட்டுரை — XI
தி. மாணிக்கவாசகர்

முன்னுரை — XII
ம. சி. சிதம்பரப்பிள்ளை

வெளியீட்டுரை — XXI
தங்கம்மா அப்பாக்குட்டி

ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம் — XXV

சைவப் பெரியார் செ. விசாகப்பெருமாள்
புலவர்வளவு, நயினாதீவு.

என்ன இருந்து என்னடா — XXXIII
தாராகாடு கிருஷ்ணய்யர்

இதயக் கமலத்தில் இறைவன் — XXXIV
கிருபானந்தவாரியார்

1. மாதாஜியின் மட்டற்ற தர்மசிந்தை — 1
2. நவீன துர்வாசனை நல்வழிப்படுத்தல் — 5
3. எப்போதும் பிழை பொறுக்கும் சாதுக்கள் — 9
4. அலகையும் அடிக்கோலும் — 11
5. சகல ஜீவன்களிலும் உன்னைக் காண் — 13
. மாற்றம் என்றால் இதுவன்றோ பெருமாற்றம்:— 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


7. உண்மையான யோகினி — 21
8. நீ சரீரியன்று — 28
9. பெற்றோர்களுக்குத் தொண்டு செய் — 29
10. இறை நாமத்தின் சக்தி — 30
11. சீடனாகும் இறைவன் — 32
12. சும்மா இருப்பது சுகமானதன்று — 34
13. இறைவனிடம் ஒப்படைத்துவிடு — 38
14. நிந்தித்தவனையும் நியாயமாக நடத்து — 40
15. எந்நாளும் ஏகனோடிரு — 42
16. எல்லாவற்றிலும் இறைவனைக் காண்க — 44
17. அரசனின் அந்தரங்கம் அம்பலம்! — 45
18. விவேகம்-உண்மையான ஆலோசகன் — 47
19. அடியார்களது அன்பைப் பெறுவதற்கு
இறைவன் காட்டும் தணியாத தாகம் — 49
20. அடியார் இடர் களையும் அரன் — 52
21. சகல ஜீவன்களிலும் இறைவன்
உறைந்துள்ளான் — 58
22. தொழுகையில் ஒரு கபடதாரி — 61
23. ஒரு மகாத்மாவின் பித்து — 64
24. உண்மையான செல்வமும் தருமமும் — 66
25. நடப்பது யாவும் இறைவனின்
இச்சைப்படியே — 72
26. ஆண்டவனைக் கூவு — 77
27. ஆண்டவன் நாமமே ஆபத்துக்களை
அகற்றும் — 79
28. வேண்டுவது ஒன்று உண்டானால் அதுவும்
இறைவன் ஒன்றே — 82


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. எதனை எண்ணுகின்றாயோ நீ
அதுவாகி விடுகின்றாய் — 84
30. நடப்பவை யாவும் நன்மையின் பாற்று — 86
31. எனது நெஞ்சைக் கொள்ளை கொண்ட
கிருஷ்ணா! — 90
32. கருவமும் கருணையும் — 92
33. விடுதலையே இலக்கு — 96
34. அரசனும் அடிமையும் — 98
35. சமாதி என்பது என்ன? — 101
36. பற்றற்ற தன்மையே உண்மையான
சுதந்திரம் — 104
37. உலகபந்தம் உதவாததொன்று — 106
38. யாவருக்கும் ஈசுவர கடாக்ஷம் சமம் — 109
39. உன் அகக்குகையில் உறையும்
ஆண்டவன் — 111
40. அகம்பாவம் அழிந்து போக வருவது
சுதந்திரம் — 113
41. அறிவும் உணர்வும்- எதிரும் புதிரும் — 116
42. வீழ்ச்சிக்கு முன்பு பெருமை
வழி காட்டுகின்றது — 118
43. எதனையும் தருவது எமது இறைவனே — 120
44. இறைநாமத்தை நேசிக்கப்பழகு — 121
45. கடவுள் அளிக்க மறுத்ததை
அடியார்கள் அளிப்பார்கள் — 124
46. நல்லபாடம் புகட்டப்பட்டது — 126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. இறைவனிடம் சரணாகதி — 129
48. இறை நாமத்தின் வலிமை — 131
49. உண்மை ஞானிதான் கடவுளாவான் — 133
50. மௌன சந்திப்பு — 135
51. இறைவன் ஒரு பரம ரகசியம் — 136
— God is a Mystery —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்



சின்னஞ் சிறுவய தென்னும் காலே
அன்னே அரனடி மன்னத், தந்தையும்
தாயுமாய் வளர்த்தெமை ஆய நெறியினிற்
சீரொடு கல்வி நேருற வைத்த பெருந்தகை!
சைவநற் சீலமும் தெய்வ மெய்ஞ் ஞானமும்
மன்னிய மணியர் சின்னேயா அன்பின்
நோக்காய் நூலிதை ஆக்கி அன்னவர்
நன்னினே வாக என்னுளம் பூரித்து
அர்ப்பணம் செய்தனன் சற்சனர்
கற்றோர் ஆதர வுற்றிட அமைந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# ஆசியுரை

எமது தந்தையார் அவர்கள் பாலர்களுக்குச் சமயக்கல்வியைப் புகட்டும் தனிப்பெரு நோக்குடன் ஞானோதயச்சபையை ஸ்தாபிதம் செய்தார். அஞ்ஞான்று அவருக்கு உறுதுணையாக விளங்கிய சைவப்பெரியார்கள் பலர். அத்தகைய பெரியார்களுள் முதன்மையாக விளங்கியவர் திருவாளர் ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்களாகும். ஆரம்பகாலந் தொடக்கம் இன்றுவரை அன்னார் சபையின் பணிகளுக்கு அயராது உழைத்து வருவது அனைவரும் அறிந்த பேருண்மையாகும். மேலும் பிள்ளை அவர்கள் சபையின் வெளியீடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்பெரியார் ஆத்மஜோதி மாத இதழில் எழுதிவந்த கட்டுரைகளை நூல் வடிவு செய்வது மிகமிக வரவேற்கத்தக்க ஒரு செயலாகும்.

இன்றைய விஞ்ஞான உலகில் சைவ மரபு பேணப்படவேண்டும். இதற்கு நூல்களே பெருந்துணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க வேண்டுமானால் மக்களிடையே சமயஅறிவும் சமயநம்பிக்கையும் மிளிரவேண்டும். இதனையே வள்ளுவப்பெருந்தகை "கற்றதனா லாய பயனென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல் வாலறிவன் நற்றாள் தொழா ரெனின்"
என்று கூறியுள்ளார். சைவமாணவர்கள் சமய நூல்களைக்கற்று சமய நெறிப்படி ஒழுகினால் இறைவன் திருவருள் கிட்டும். இந்நூலின் கண்ணே ஆசிரியர் சிறந்த கருத்துக்களை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக அமைந்துள்ளது. சைவப்பெரியார் ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து இதுபோன்ற சைவப்பணிகளைச் செய்வதற்கு விக்கினந் தீர்க்கும் காசி ஐங்கரன் கருணை பாலிக்குமாறு வேண்டி ஆசி கூறுகிறேன்.

சி. கணேசலிங்கக்குருக்கள்
பிரதமகுரு.

காசி விநாயக தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஆசியுரை

ஆத்மஜோதி மாதவெளியீட்டிற்கு எழுத்துப் பணி புரிந்தவர்கள் பலர். அவர்களுள் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் முக்கியமானவர்கள். சமய வழிபாட்டில் ஈடுபட்டோரும் சரி, சமயமே வேண்டாமென்று வாழ்வோருஞ்சரி கதை படிப்பதில் எல்லோருக்கும் ஆர்வம் உண்டு.

கஞ்சன்காடு ஆனந்தாச்சிரம ஸ்தாபகர் சுவாமி இராமதாசரும் ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கஸ்தாபகர் சுவாமி சிவானந்தரும் சிறுசிறு கதைகள் மூலமே உலகிற்கு ஆத்மீகத்தை ஊட்டியவர்கள்.

அன்பர் ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள் சுவாமி இராமதாசருடைய கதைகளை தமிழில் மொழிபெயர்த்து மாதம் ஒரு கதையாக ஆத்மஜோதிமூலம் வெளியிட்டார்கள். சுவாமிகளுடைய அரியகருத்துக்களை உள்ளுணர்ந்து மொழிபெயர்த்தவர்கள் அவர்கள் தற்போது அக்கதைகளை எல்லாம் ஒன்று சேர்த்து ஒருநூல் வடிவில் வெளியிட்டுள்ளார்கள். இந்தநூல் காலத்திற்கு ஏற்றவகையில் அமைந்தது. குழந்தைகளும் பெரியோரும் விரும்பிப்படிக்கும் நூல். வீட்டில் ஒரு நூல் இருந்தால் அக்கதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பதன்மூலம் வீட்டில் உள்ள எல்லோருக்கும் ஆத்மீகமும் ஒழுக்கமும் வளரும்.

இந்த முயற்சி வெற்றி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதோடு அடியேனுடைய அன்பு கலந்த ஆசியையும் மனப்பூர்வமாக அளிக்கின்றேன்.

''குருபவனம்'', நா. முத்தையா (ஆத்மஜோதி)
கண்டி வீதி,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றிறன் சாற்றுரை

## வெண்பா

சுவாமி இராமதாஸ் சூத்திர போதத்
தவாமி குமார்வத் தவற்றைத் – தவாமன்
அகத்தியனார் ஆய்ந்த அருந்தமிழில் ஆக்கம்
மிகத்தெளிவாய்த் தந்தார் விழைந்து

விழைந்த அறிஞன் விநாயக காசி
எழுந்த இறைவற் கினியன் - விளைந்தசற்
சிந்தனையாளன் சி. சிதம்பரப் பிள்ளைபேர்
சந்ததமும் ஓங்கும் தவத்து

தவச்சீர்த் தமிழுந்நற் சால்பாங் கிலமும்
சிவச்சீல மோங்கத் தெளிதத் – துவச்சால்பிற்
சேவை யரசபணி சேர்ந்துயர்ந் தோங்கினன்
யாவையும் சைவநெறி யால்

ஆலயத் தொண்டுடன் ஆத்மஜோ திக்குமிந்து
சாலணி சாதனச் சால்பிதழ்க்கும் - நூலணி
ஆர்ந்துபல் கட்டுரை ஆற்றும் அறிவினன்
தேர்ந்தசை வத்தின் திரு

நம. சிவப்பிரகாசம் (இறை ஒளி)
பத்திராதிபர்
இந்துசாதனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# அணிந்துரை

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பிற்கால இந்துசமயவானில் ஒருவிடிவெள்ளி. அவர் தோற்றத்தின் பின்பே அகிலமளாவிய அளவிற் பாமரரும் பரமார்த்த உண்மைகளை விரும்பிக்கேட்டுப் பரிமளிக்கும் பாக்கியம் உளதாயிற்று.

வேதோபநிஷதங்கள், புராணேதிகாசங்கள், தத்துவசாஸ்திரங்கள் மூலம் நாட்டில் பிரபல்யமாயிருந்த ஆத்மீக உண்மைகளை நேரடியாக அந்நூல்களிற் படித்தோ கேட்டோ விளங்குதற்கான மொழியறிவு குன்றி மனஇயல்பும் மாறிப்போயிருந்த ஒருகால கட்டத்திலே வந்து தோன்றி அந்நூல்கள் போதிக்கும் ஆத்மீக கலாசார அறிவியல் உண்மைகளைச் சின்னஞ்சிறு அநுபவக் கதைகள் மூலம் எல்லோரும் புரிந்து கொள்ளத்தக்க இலகுபாணியில் எடுத்துச் சொல்லும் வழக்கத்தைத் தொடக்கி வைத்துள்ளார் இராமகிருஷ்ணர். இம்முறை வேதசார்பான நூல்களிலும் ஓரளவுக்கு அநுசரிக்கப்பட்டிருந்தது. எனினும் அது இக்கால மனப்போக்குக்கு இதமளிப்பதாயில்லை. அதற்கெதிர் காலச்சூழ்நிலைக்கேற்ற கருத்துக்களிற் பொருத்திப் புதிய பாணியில் பரமஹம்சரின் கதைகள் அமைந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன. அவர் தமது ஆத்மீக விலாசமான முகவொளிக் கவர்ச்சியில் மற்றவர்களை அமர்த்தி வைத்துச் சொல்லிய கதைகளால் உள்நாட்டவர் மட்டுமன்றி மேல்நாட்டவர்கள் கூடப் பெருமளவில் நன்மை பெற்ற செய்தி உலகறியும். அவர் கதைகளை இராமகிருஷ்ண உபநிஷத் என உலகம் கௌரவித்திருத்தல் கண்கூடு.

பாரதநாட்டின் வட பகுதியில் இராமகிருஷ்ணர் தழுவிய இந்தமுறை அவரை முன்மாதிரியாகக் கொண்டு அமைந்த ஆச்சிரமங்கள் தோறும் பின்பற்றப்பட்டு வரலாயிற்று. ஆங்காங்குள்ள ஆச்சிரமத்தலைவர்கள் தமது ஆத்மீக ஒளியில் அநேகாநேகம்பேர்களை அமர்த்தி வைத்துக் கதைகள்மூலம் அன்பு, அருள், அடக்கம், பொறுமை நிலையாமை யுணர்வு, தர்மசிந்தனை, பரோபகாரம் அகந்தை நீக்கம் முதலிய உயர்பண்புகளைப் பதிவிக்கத் தக்க கதைகளைச் சொல்லி வந்தார்கள். அவ்வகையிற் பிரசித்தி பெற்றவருள் ஒருவர் பகவான் இராமதாசர். இவர் கதைகள் அசாதாரணமான எளிமையும் ஆழ்ந்த பொருட் பொருத்தியும் வாய்ந்தவை. ஒவ்வோர் கதையும் ஆத்மீக ஈடேற்ற அறிவாசாரச் சார்பான ஒவ்வோர் விழுப்பொருளைத்தன் உயிரூட்டமாகக் கொண்டுள்ளது. கல்லெறிபட்ட பாசிபோல் அறிவுரைகளைக் கேட்கும் போது தற்காலிகமாக விலகுவதுபோற்காட்டி அடுத்த கணம் திரும்ப மூடிக்கொள்ளும் ஆன்மவைரிகளாய தீயியல்புகளையும் அவற்றின் நெளிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிவுகளையும் தொட்டுக்காட்டுவது, எல்லாவற்றுக்குமாக இந்நூலின் முதற்கதையே போதுமே!

ஒருசாது, உலகிய லை வெறுத்து ஆச்சிரம வாழ்விற் புகுந்தவர், ஆச்சிரம வாளியைத் தனது வாளியென உலோபம் பண்ணுகிருர். தான் தொட்ட அவ்வாளியைப் பிறர் தொட்டது அபசாரம் என அடம் பிடிக்கிருர், அடங்காச்சினமும் அர்த்தமற்ற ஆவேசமுங் கொண்டு உண்ணப் படைத்த உணவைத் தூக்கிவீசி அவற்றின் மூலம் தனது தவற்றை நியாயப் படுத்தி விடச் சன்னதங் கொள்கிருர். சீ! இவற்றுக்கென்ன பெயர்? அதுதான் அறியாமைத்திமிர். மஹாமோசமான ஒரு ஆத்மீகக் குறைபாடு. இனி, இவ்வித ஆவேசத்துக் கெதிர் பேராவேசங் கிளப்பினுல் தான் அதையடக்கலாம் என்பது பொது மனிதசித்தாந்தம். ஆனுல் அங்கே நடந்ததென்ன? அந்த ஆவேசத்துக்கெதிர் ஆன்மிகக்குளிர்ச்சியொன்று துணிந்து முன் வருகின்றது. மாதாஜீயின் மஹா கருணையும் முகமலர்ச்சியும், அமைதியும், அன்புபசாரமும் அந்த ஆசாமியைப் பெட்டிப் பாம்பாக அமர்த்தி அடக்கி அந்தப் பொதுமனித சித்தாந்தத்தைப் புரட்டி யுருட்டி விடுகின்றது. அதற்கென்ன பெயர்? அதுதான் அறிவுக்காட்சி. உத்தமமான ஒரு ஆத்மீக நிறைவு அது. வாழ்க்கைக்கு இஷ்டசாதனங்கள் போலக்காட்டி முன்னிற்கும் அத்தகைய துஷ்டத்தனங்களை வெட்டியெறியும் கூர்வாளாயிற்று மாதாஜீயின் அறிவுக்காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையிலே, குறித்த குறைபாடு போன்ற பலவகைக் குறைபாடுகள் பொதுவாக பலரிடத்தில் எப்போதும் உள்ளவை. தான் பெறும் நன்மை தன்னாற்றலாற் பெறுவது; தன்னால் விளையுந் தீமைக்கு மட்டும் தான் பொறுப்பில்லை என்ற பேதைமை, காசைக் கொடுத்துக் கடவுளையும் வாங்கிக் கொள்ளலாம் என்ற நப்பாசை, தியானம் பூசையிற்குந்திக்கொண்டே சில்லறை விஷயச்சிந்தனை, தன் கடமையைத் தூக்கிவீசி விட்டுக் கடவுளைக் காணலாம் என்ற பிரமை, உள்ளன்பும் உணர்வொருக்கமும் வருவிக்கும் அநுசரணைகள் இல்லாமல் மாதிரிக்குப் பூசை செய்து தன்னைத்தான் ஏமாற்றுந் தந்திரம் என இவை போல்வன பலவகைக் குறைபாடுகளை நாசூக்காகச் சுட்டிக் காட்டுங் கதைகள் இந்நூலிற் பல. மேலும், ஒருவன் தன் ஆசங்கைக்குத் தானே விடை கண்டு கொள்ளத்தக்க வகையில் அவரை விட்டுப்பிடித்தல் போன்ற தந்திரயுக்திகளும் 38ஆம் 17ஆம் கதை முதலியவற்றிற் காணப்படுகின்றன. காகமும் அப்பத்துண்டும் என்ற சாமானிய கதையே, பற்றிய பற்றை விட்டாலல்லது நிம்மதியேற்படாது என்ற பரமார்த்தமான உண்மையைத் துலக்குவதாயிருக்கிறது. இவ்வகையிற் பல, விரிக்கச் சந்தர்ப்பமில்லை.

பகவான் இராமதாசர் அருளிய இக்கதைகளின் உபயோகத்தரத்தைக் கண்டு பம்பாயிலிருந்து வெளிவரும் "பவான்ஸ் ஜேர்ணல்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிகை இவற்றை அவர் வாயிலிருந்து தோன்றியபடியே ஆங்கிலத்தில் வெளியிட்டு வந்தது. ஆத்மஜோதி என்ற ஈழமாசிகையின் சார்பில் இவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டு வந்தவர் அன்பர் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள். அவர் தம் பண்பருமை இனிமைகளும் பயில்வருமை இனிமைகளும் பிரசித்தமானவை. பிரக்ஞா பூர்வமாகத் தம்மில் தாம் நல்லவராயிருந்துகொண்டு பிறரும் நன்மைபெற விரும்பி முயல்பவர் அவர். பிரசித்தி பெற்றுயர்ந்த தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி, நல்லொழுக்க நடையிற் சிறந்த ஆசிரியர்கள் மூலம் உருவாக்கித்தந்த அறிவாசாரப் பண்பாட்டாளரில் முக்கியமானவர் எனத்திகழ்பவர். கடமையில் நேர்மையும் கண்ணியப்போக்கும், கடவுள் விசுவாசமும் கற்றோர் பெரியோர் சகவாசமும், ஆங்கில தமிழ் மொழிகளில் வரன்முறையான தேர்ச்சியும் கல்வியபிமானமும் சைவத் தமிழ்க் கலாசாரப்பிடிப்பும் மிக்கவர். அவரின் கைவண்ணமாகிய சான்றோர் தமிழில் இந்நூல் வெளிவருதல் இதற்குப்பெருஞ் சிறப்பாகும்.

ஸ்ரீமான் சிதம்பரப்பிள்ளை அவர்கள் சர்வசன உபகாரமான இத்தகு முயற்சியில் மென்மேலும் முன்னேறவும் இந்நூற் பொருள் கற்போருளத்தைப் பண்படுத்தி அவரவர் ஆத்மீகப் பேற்றுக் குறுதுணையாய் நின்று நிலவவும் இறைவனருளை வேண்டி ஆசி கூறுகின்றோம்.

வாழ்க இவரும், இவர் நூலும்.

மு. கந்தையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பாராட்டுரை

நாவலப்பிட்டிக்கு உத்தியோக காரணமாக மாறிப் போக முன்பே, ஆத்ம ஜோதியின் அரிய பணிகளை அறிந்தவன். சைவப் பெரியார் திரு. நா. முத்தையா அவர்களை ஆசிரியராகக் கொண்டு பல்லாண்டு பணிபுரிந்து வந்த பத்திரிகையும் அச்சகமும் அழிந்த கதை வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவார்கள். இந்த, இதழில் மாதம் மாதம் அரும் பெரும் கட்டுரைகள் வருவன. அவற்றுள் சுவாமி ராமதாஸ் அருளுரைகள் என்ற தலைப்பின் கீழ் வரும் கட்டுரைகள் எம்மை அதிகம் கவர்ந்துள்ளன. ஆத்ம ஜோதி இதழ் என்னைத் தேடிவரும். நான் முன்னுரிமையுடன் முதலாவதாக வாசித்து ரசிப்பது இக்கட்டுரையே. நல்ல கன்னித்தமிழில் யாவரும் ஏற்கக் கூடிய வகையில் வருகின்றது. இது ஒரு மொழிபெயர்ப்புக் கட்டுரை தான் என்று எவராலும் எளிதில் எண்ணிக் கண்டு கொள்ளமுடியாது. இதன் ஆசிரியர் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்களை பல காலமாக எனக்கு நன்கு தெரியும். என்னுடன் கல்வி அமைச்சில் முதல் முதலாகத் தமிழ்த் துறைக்கென ஆக்கப் பெற்ற கிளையில் கடமை புரிந்தவர். அமைச்சில் நடைபெறும் நவராத்திரி விழா, மற்றும் சமய விழாக்களில் முன்னணியில் நின்று செவ்வனே பணிபுரிந்தவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் வசீகரமாக எழுதவும் பேசவும் ஆற்றல் நிரம்பியவர். இளம் வயது தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய வளர்ச்சியில் ஈடுபட்ட தன்மையினால் கொழும்பில் ஈழத்துத் திருநெறிமன்றத்தின் "மெய் கண்டார் நெறி" மாத இதழுக்கு சில காலம் ஆசிரியராக இருந்து தொண்டாற்றியவர். கொழும்பில் பல இடங்களில் சமய விடயங்களில் உரைகளாற்றிப் பாராட்டப்பட்டுள்ளார். கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் சமயப் பிரசாரராகவும் பணிபுரிந்துள்ளார். நாவலர் பெருமானது நூற்றாண்டு நிறைவையொட்டி "பவான் ஜேர்னல்" பத்திரிகையில் இவரால் நாவலர் பெருமானைப் பற்றி எழுதிய கட்டுரை வெளிவந்தது ஒரு பெருமைக்குரிய விடயமாகும். இவர் கொழும்பு செட்டித் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தானத்தில் சில காலம் முகாமைப் பணிப்பாளராகக் கடமை புரிந்து வந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு சிறந்த பண்புகளமைந்த சைவப் பெரியார் திரு. ம. சி. சிதம்பரப் பிள்ளை அவர்கள் இவை போன்ற பல மொழி பெயர்ப்புகளை அழகு தமிழில் ஆக்கியுள்ளார்கள்.

சுவாமி ராமதாஸ் அருளுரைகள் ஆங்கிலத்தில் உள்ளவையைச் சுவைபடத் தந்த அண்ணல் சிதம்பரம்பிள்ளையைப் பாராட்டாமலிருக்க முடியாதன்றோ!

சீலத்தில் சிறந்த வீர சைவர் சிதம்பரம்பிள்ளை அவர்களின் சேவை நீடிக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

தில்லைநாதன் மாணிக்கவாசகர்
*B. A., P. G. T., Dip. Ed., S. L. E. S.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கருணை நிறைந்த பார்வையில் கூடும்
மெய்த் தொண்டர் குழாத்துடன் கூடும்
தொண்டர் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை
தொகுப்பாளர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

**"உயர்ந்த கருத்துக்கள்
எல்லாப் பக்கங்களிலிருந்தும்
சேரட்டும்"**

**இருக்குவேதம் 1–89–1**

இந்த வாசகம் சுவாமி ராமதாஸ் அருளுரைகளடங்கிய 108 கதைகள் கொண்ட தொகுதி நூலின் முகவுரையில் இருக்கின்றது சிந்திக்க வேண்டிய தொருவாசகம்.

இக் கதைகளில் அதிகமானது சுவாமி ராமதாஸ் அவர்களால் கேட்டறிந்ததும் படித்ததுமாகும். மேலும் இக்கதைத் தொகுதியில் ஸ்ரீ இராமகிருஷண பரமஹம்சர், ஸ்ரீ ரமணரிஷி, இன்னும் பாரதபூமியில் உள்ள பரமஞானிகள், மற்றும் பல்வேறு நாடுகளிலுமுள்ள ஞானிகள் அருளியுள்ள அருளுரைகளடங்கியுள்ளன. இப்போது இந்நூலில் ஐம்பத்தொரு அருளுரைகள் மட்டுமே வெளிவருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புண்ணிய பலன்

"சித்த ஞானவித்தகர்" ஆத்மஜோதி ஆசிரியர், திரு. நா. முத்தையா அவர்களுடன், எமது பூர்வ புண்ணிய பலனால் தொடர்பு ஏற்பட்டிருந்தது. அது காரணமாக "சுவாமி ராமதாஸ்" அருளுரைகள் கொண்ட ஆங்கிலநூலினை எம்மிடம் தந்து அதிலுள்ள கதைகளைத் தமிழாக்கம் செய்து ஆத்மஜோதி நிலையத்துக்கு அனுப்பிவைக்கும்படி பணித்தனர். யாமும் அதன் பிரகாரம் 1976ம் ஆண்டு முதல் 1983 யூலாய் மாத வரையில் எழுதி இக்கதைகள் ஆத்மஜோதி சஞ்சிகையில் பிரசுரமாகி வந்துள்ளன.

ஆத்மஜோதி நிலையமும், அச்சகமும் நூல்நிலையமும் அழிந்த சரித்திரம் யாவரும் தெரிந்த தொன்றே!

## தேவசித்தம்

உங்கள் அன்புக்கரத்தில் மிளிரும் இந் நூல் உருவாகுவதற்கு தோன்றாத்துணையாக இருந்தவர்:

- உலகம் உய்ய உழு கொடைப்பதியில் வீற்றிருந்து அருள் பாலித்தருளும் உலக மாதாவாம் எங்கள் அன்னை அருள்மிகு துர்க்காதேவியின் அருட்கடாட்சம் பெற்றவரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஷேத்தேவஸ்தான நிர்வாக சபைத்தலைவரும்,

● தேவஸ்தானச் சூழலை சர்வமசக்தி மயமாக மாற்றியவரும்,

● பசித்து வருவோரின் பசியைப்போக்க, அதாவது அற்ருர் அழி பசி நீக்க, தேவாலய இருமருங்கிலும் அன்னசத்திரம் கண்டவரும்,

● வாழ வகையறியாப் பெண்குழந்தைகளை வளர்த்துப் பேணி, கல்வியூட்டி நற்பிரசைகளாக வர வகுத்தவரும்,

● இப்பிறவி எடுத்தபயன் இதுவோ! என யாவரும் போற்றவும், பெருமையடையவும் – சென்னை சைவசித்தாந்த மகா சமாஜ பவள விழாவினைச் சிறப்புற அமைத்து நடாத்தியவரும்,

● தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் வேதநெறி தழைத்தோங்க சங்க நாதம் செய்து கொண்டு வருவதோடமையாது – மேலைநாடாம் லண்டன் மாநகரிலே அற்புத ஏழுவாரங்கள் திருஅருள் மழை பொழிந்தவரும்,

● பண்டிதை - சைவப்புலவர் - செஞ் சொற் செம்மணி - சிவத்தமிழ்ச் செல்வி - சித்தாந்த ஞாஞகரம் - திருமுறைச்செல்வி - திருவாசகக் கொண்டல் - சிவஞானவித்தகர் - துர்க்கா துரந்தரி என்று புகழ்மாலை சூட்டப்பட்டவருமான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், அவர்களது கண்ணியமான தலைமையில் இயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் நேர்மை நிறைந்த நிர்வாக சபையின ருமாவர்.

## நூல்கள் வெளியிடல்.

இந்நூல் தேவஸ்தான வெளியீடாக வருவது மிகவும் சாலப் பொருந்தும். எமது இதயம் நிறை ந்த நன்றியைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன். தனிப்பட்ட முறையில் இதனை - இக்கால கட்டத் தில் வெளியிடுதலின் சிரமத்தை எண்ணி, என்றும் இனிய பண்டிதை அவர்களை அணுகி என் விருப் பத்தைப் பணிவுடன் சமர்ப்பித்தேன். ஆத்ம ஜோதியில் இக்கதைகளை அவர்கள் படித்துள்ள வகையிலுல் - திருவருள் நோக்கமும் அதுவாக இருக்க, இது சம்பந்தமாக ஒரு விண்ணப்பம் தரும்படி ஆணை பிறந்தது. நிர்வாக சபையும் ஏகமனதாக ஏற்று இந்நூலை தேவஸ்தான வெளி யீடாகத் தருகின்றனர்.

எங்கள் தேவஸ்தானம் மிகவும் சிறந்தமுறை யில் சைவ சமயநூல்களை மறுபிரசுரம் செய்து வருகின்றார்கள். இவற்றுள் பெரியபுராண வசனம் சைவபோதம் மிகவும் முக்கியமானவை. நூல் வல்லோர் ஆக்கம் செய்த சமய நூல்களை தேவஸ் தானம் ஏற்று வெளியிட்டு வருகின்றார்கள். இத னுடைமையாது - கூட்டுவழிபாடு, அபிராமி அந் தாதி - மூலமும் பொழிப்புரையுமாக வெளியிடப் பட்டு அம்பிகை அடியார்கள் தினமும் ஓதி அருள் பெற வகை செய்துள்ளனர், விசேட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் அம்பாள் அடியார்கள் அபிராமி அந்தாதி நூலை ஆலய அலுவலகத்திலே பெறுவதைக்கண்டு களிக்கலாம். வளர்க திருமுறைகள்.

## வீடுதோறும் நூல்நிலையம்.

நல்லநூல்களைப் பொறுக்கி எடுத்து தத்தம் இல்லங்களில் சிறு நூலகம் ஆக்கி அதனையும் வழிபடும் ஆலயமாகப் பாவனைசெய்து வரவேண்டும். நம் சிறுர்களை நாளும் பொழுதும் நல்ல நூல்களை வாசிக்கப்பழக்க வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்ற வாக்கியத்துக்கிணங்க இளமையாக இருக்கும் பருவத்திலே நல்ல விதைகளை விதைத்தால் அது முதுமைப் பருவத்தே நல்ல பலனைத் தருமல்லவா?

## திருமுறை ஓதுதல்.

பன்னிரு திருமுறைகளையும் ஓதப்பழகவேண்டும். முழுமையாக, முடிந்தவரை பதிகங்களை மனனம் செய்து கொள்ள வேண்டும்.

எமது திருக்கோயிலில் காலை நேரப்பூசை நிறைவெய்தியதும் இவ்வாலயச் சிறுமிகள் - கோளறு பதிகத்தைப் பக்தி சிரத்தையுடன் ஓதி ஓதி வீதி வலம் வருதல் கண் கொள்ளாக்காட்சியாகும். வளர்க வீதிவலம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தணச் செம்மல்கள்.

எங்கள் கிராமத்தில் - துர்க்காபுரத்தில் - சைவ ஆகமவிதிகளின் எல்லைக்குள் நிமிர்ந்து நின்று - பல திசைகளிலும் உள்ள மெய்யன்பர்களைத் தம்பால் வலிந்து ஈர்த்துச் சகல செல்வங்களையும், கேட்கும் வரங்களையும் நல்கி நாளும் பொழுதும் நிறைந்த காட்சியுடன் உழுகொடைப் பதியில் உறைந்த நம் தேவியின் அற்புதத்தை அம்மம்ம! எவ்வாறு பகர்வது! இவ்வாலயத்தில் காலந் தவறாது, நித்திய, நைமித்திய பூசைகள், விசேட பூசைகள், அபிடேகங்கள் முதலியனவற்றை ஒரு முட்டுமில்லாது மிகவும் பக்தி சிரத்தையுடன் நடாத்தி வரும் சிவாச்சாரியக் கிரியாமணி சிவஸ்ரீ சோ. இரத்தின சுந்தரேஸ்வரக்குருக்களும் அவர்களது சககுருக்கள்மாரும் - இவ்வாலயத்தின் அருள் வெள்ளத்துக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர். நாம் செய்ததவம் இத்துணைச் சிறப்பாமன்றோ!

## லண்டன் சைவமுன்னேற்றச் சங்கம்.

சுவாமி ராமதாஸ் அருளுரைகள் நூலாக்கம் வர இருப்பதனை அறிந்த - லண்டன் சைவமுன்னேற்றச்சங்கத்தின் கௌரவ காரியதரிசியும், எங்கள் கிராமத்துச் செல்வனுமாகிய சைவத்திரு வ. இ இராமநாதன் அவர்கள் மனம் உவந்து இரண்டாயிரத்தைந்நூறு ரூபா அனுப்பியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தரு கின்றேன். எல்லாம் வல்ல அம்பிகை அவர்களுக் குச் சகல பாக்கியங்களையும் நல்குவாளாக! மேலும் இப்பணத்தை - துர்க்காதுரந்தரியின் பணிப்புக்கமைய நூல் வெளியீடன்று ஏற்படும் காலா காலச் செலவுகளுக்கு உபயோகிக்கலாம் என வைத்துள்ளோம்.

## நன்றி, இவர்களுக்கு :

இந்நூலுக்கு ஆசியுரை, அணிந்துரை, வெளியீட் டுரை முதலியனவற்றை மனம் உவந்து தந்த-

- அன்புமணி ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள்.
- முன்னைநாள் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர். B.A., Dip. in. Ed. அவர்கள்.
- எமது குல தெய்வம் காசி விநாயகப்பெரு மானின் ஆலய பிரதமகுருவும் தெல்லி பாலர் ஞானோதயச் சபைத்தலைவருமான பிரம்மஸ்ரீ சிவ கணேசலிங்கக்குருக்கள் அவர்கள்.
- ஆயிரம் பிறைகண்ட "இறைஒளி" இந்துசா தனப்பத்திராதிபர் - சட்டத்தரணி - திரு. நம. சிவப்பிரகாசம், அவர்கள்.
- சித்தாந்த சாகரம் - பண்டிதர் - வித்துவான் மு. கந்தையா B. A. அவர்கள்.
- வெளியீட்டுரை நல்கி எல்லாமாகி நிறைந் துள்ள எமது தேவஸ்தான நிர்வாக சபைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவி - அவர்கள்

- தேவஸ்தான நிர்வாக சபை அங்கத்தினர்கள் அவர்கள்.
- இந்நூலின் கண் உள்ள அச்சுப்பிரதிகளைச் சரிபார்த்து உதவிய அம்பிகையின் தொண்டன் மட்டுவில் திரு. கா. சிவபாலன் அவர்கள்
- இந்நூலை அழகுற அச்சேற்றித்தந்த மஹாத்மா அச்சக அன்பர்கள்.

## வேண்டுதல்.

இந்நூலுக்குத் தரும் ஆதரவை ஒரு அளவுகோலாகச் சீர்தூக்கி - மிகுதியான அருளுரைகளும் நூல் வடிவு பெறவேண்டும் என்பது கடவுள் சித்தமாக இருக்கட்டும்.

பக்திநூலாகிய இந்நூலினை யாவரும் படித்து அதனுள் அடங்கியுள்ள அற்புதமான அமிர்தத்தை அள்ளிப்பருகும்படி கேட்டு அமைவுறுகின்றேன்.

"ஆசையறாய் பாசம் விடாய் ஆன சிவபூசை-
பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்
சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே! உனக் கென்ன வாய்!"

திருச்சிற்றம்பலம்.

காசிப்பிள்ளையார் கோவிலடி ம. சி. சிதம்பரப்பிள்ளை
தெல்லிப்பளை.
01 - 07 - 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

சான்றோர்கள் பலரை ஈன்றெடுத்த பெருமை தெல்லிப்பழைக் கிராமத்துக்கு உண்டு. அத்தகைய சான்றோர் வரிசையில் இன்று எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் திரு ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள். தனது பேச்சையும் எழுத்தையும் கடவுள் வழிபாடாகக் கருதும் சிறப்பு இப்பெரியாருக்கு உண்டு.

"என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறு"

என்ற கூற்று இப்பெரியாரளவில் மிகவும் பொருத்தமானது. தான் கற்றுச் சுவைத்தவற்றை ஏனையோரும் படித்துப் பயனடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்நூலை தொகுத்து வெளியிட இவர்கள் விரும்பினுர்கள். 'ஆத்மஜோதி' என்ற பத்திரிகையில் மாதந்தோறும் வெளிவந்த சுவாமி ராமதாஸ் அருளுரைக் கதைகளின் தமிழ் வடிவத்தை இவரே எழுதி வந்ததை வாசகர்கள் நன்கு அறிவார்கள். மொழிபெயர்ப்புக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர் இந்நூலாசிரியர். அதன் பயனுக தமிழ் உலகுக்கு இந்த அரிய ஞானக் களஞ்சியத்தை வழங்கியுள்ளார். அறிவு உடையவர்கள் பலர் நம் நாட்டிலே இடம் பெற்றிருக்கிருர்கள், என்ருலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிலே தெளிவுடையவர்கள் ஒரு சிலரே நம் முன் காட்சி தருவது ஒரு பெரும் குறையாகும். அந்தத் தெளிவு சமுதாயத்தில் ஏற்படுவதற்கு இதேபோன்ற அருளுரைகள் நூலாக வெளிவர வேண்டும். உண்மையின் உயர்வு, நன்றியறிதல், தெய்வபக்தி, பொறுமை, இன்னு தார்க்கும் இனியவை செய்தல், சற்சங்கஉறவு, பெரியோரை மதித்தல், தீமையை ஒதுக்கல், பெற்றோர்கள் பெருமை, பிள்ளையின் கடமை, குருவின் ஆசி, மாணவஒழுக்கம், ஆகியவற்றையும் எளிமை இனிமை, தூய்மை, ஆகிய பண்புகளையும் அறிந்து பின்பற்றுவதற்கு இந்நூலில் இடம் பெற்ற கதைகள் மிகவும் வாய்ப்பானவை. இவற்றைப்படித்து அவ்வப்போது மறந்துவிடுவது அல்ல; உள்ளத்தில் பதித்து பின்பற்றுவதோடு நூலாசிரியருக்கும் வெளியீட்டுச் சபையினருக்கும் அனைவரும் காட்டும் நன்றியாகும்.

முதலாவது பாடமாக "மாதாஜியின் மட்டற்ற சிந்தை" என்று தொடங்கி ஐம்பதாவது பாடமாக "கருவமும் கருணையும்" என்று முடிகிறது. இறுதிக்கதையில் பின்வரும் படிப்பினையை ஆசிரியர் நல்லமுறையில் எடுத்துக் காட்டுகிருர். அதாவது "ஒன்றும் தெரியாது என இருப்பதுவே உண்மை அறிவு. கடவுளை அறிதற்கு முன்பு நீ படித்தவற்றை மறந்துவிடு எல்லாம் தெரியும் என்று கூறுபவர்களுக்கு ஒன்றும் தெரியாது. நீ உள்ளத்தில் மிகவும் எளிமையாக உள்ளாயாஞல் பிரபஞ்சம் யாவையும் ஆழலாம்" என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். சிறப்பாக இக்கதைகள் யாவும் வளர்ந்துவரும் இளைஞர் சமுதாயத்துக்கு நன்னெறி காட்டுவதாக அமைந்துள்ளன என்பது முற்றிலும் உண்மை.

எமது தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் கடந்த பல ஆண்டுகளாக ஆலயப்பணியோடு பல சமூகப் பணிகளையும் ஆற்றிவருவது கண்கூடு. ஆதரவற்ற சிறுமிகளின் நலன்களையும் அண்டிவரும் அகதிகளின் நலன்களையும் நிரந்தமாகப் பேணி வருவதோடு கல்விப்பணி, வைத்தியப்பணி, நூல் வெளியீட்டுப்பணி ஆகியவற்றையும் தேவஸ்தானப் பொறுப்பில் நிறைவேற்றி வருவது அம்பாளின் திருவருள் கடாட்சமாகும். இற்றைவரை ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது கிடைத்தற்கரியவாக இருக்கின்ற சைவபோதம் பெரியபுராண வசனம் ஆகிய நூல்களையும் சமீபத்தில் ஆலயப் பொது நிதியிலிருந்து செலவு செய்து வெளியிட்டுள்ளோம். இவ்வாண்டின் ஆரம்பத்தில் கந்தபுராண வரலாற்றுச் சுருக்கமென்ற நூலை வெளியிட்டுப் பெருமை பெற்றது தேவஸ்தான வரலாற்றில் ஒரு சிறப்பு அம்சமாகும். வெளியீட்டுப் பணிகளின் தொடர்ச்சியாக சுவாமி ராமதாஸ் அருளுரைக் கதைகள் என்ற நூல் இவ்வாண்டின் மற்றொரு வெளியீடாக அமைந்துள்ளது. எந்த ஒரு கருமத்தையும் ஆற்றுவதற்கு சிறந்த புண்ணியப்பேறு வேண்டும். தனது படைப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிய இந்நூலை தேவஸ்தான வெளியீடாக வெளியிட விரும்பிய சைவப்பெரியார் திரு. ம. சி. சிதம்பரப்பிள்ளை அவர்களின் பொன் மனதை நான் பெரிதும் போற்றுகின்றேன். இத்தகைய நல்ல கைங்கரியங்களுக்கு இடம் அளிப்பவர்கள் அனைவரும் எனது பாராட்டுக்குரியவர்களே. நூலின் பயனை உணர்ந்து சிறுவர் முதல் பெரியோர்வரை படித்து நலம் பெற வேண்டும் என்று துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றேன். நூலாசிரியரின் தூய்மையான உள்ளத்தை வாழ்த்துகின்றேன். அச்சிட்டு உதவிய ஏழாலை மஹாத்மா அச்சகத்துக்கு நன்றி கூறுகின்றேன். எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருள் மேலும் இத்தகைய பணிகளில் எம்மை ஊக்குவிக்க வேண்டும் என்று வணங்கி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்

அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்
துர்க்காபுரம்.
தெல்லிப்பழை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஆனந்த நிலையில்

அமர்ந்திருக்கும்

சுவாமி ராமதாஸ் அவர்களின்

திருவுருவப் படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# "ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்"

பெறுவதற்கு அரியதான இம்மனிதப் பிறவியைப்பெற்ற நாமெல்லோரும் பிறவிப்பெருங்கடலிலிருந்து கரையேறி ஆனந்தப் பெருவாழ்வு வாழ்வதற்கு அநுசரிக்க வேண்டிய ஒழுக்கங்கள் பலவற்றுள்ளும் குரு, லிங்க, சங்கம வழிபாடே முக்கியமானதென்று எல்லாச் சமயங்களும் போதிக்கின்றன. இவ்வாறு மக்கள் ஈடேறுவதற்கு முதற் காரணமாக அமைந்துள்ளது குரு வணக்கமேயாகும்.

இந்தியா என்றும் ஞானபூமி என்றும் போற்றப்படுவதற்கு மூலகாரணம் அங்கு வாழையடி வாழையாகத் தோன்றிய மஹான்களே காரணர்களாவர். இவ்வாறு உலக மக்களை உய்விக்கத் தோன்றிய மஹான்களில் இந்த நூற்றுண்டில் எம்மிடையே வாழ்ந்து ஒளி பரப்பி 1963ல் மஹாசமாதி அடைந்தவர் சுவாமி இராமதாஸர் ஆவர்.

சுவாமி இராமதாஸர் அவர்களின் முன்னோர்கள் காஷ்மீரத்திலிருந்து வந்து தென்னாட்டில் குடியேறிய ஸரஸ்வத் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள். மங்களூருக்குத் தெற்கே 'ஹொஸதுர்க்க' என்னும் ஊரில் 10.4.1884 ம் ஆண்டு பூரணையும் அனுமான் ஜயந்தியும் கூடிய புண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணிய தினத்தில் பாலகிருஷ்ணராவ் என்பவருக்குப் புதல்வராகத் தோன்றினர். தாய் லலிதாபாய். சுவாமி ராமதாஸருக்குப் பெற்ரேர் இட்ட பெயர் "விட்டல் ராவ்" என்பதாகும். தசரத இராமனின் பரம பக்தனுகிய அநுமானின் ஜயந்தி தினத்தில் தோன்றியபடியாற்போலும் இராமதாஸ்' என்னும் பெயர் பின்பு இராமபக்தனுன இவருக்கு அமைந்தது.

ராம நாமத்தை ஓயாது ஜெபித்தலே இக் கலியுகத்தில் ஆத்மானுபூதி எய்துதற்கு மிகவும் இலகுவான மார்க்கம் என்பதை நாஸ்திகம் மிளிரும் இக்காலத்தில் தம் சொந்த வாழ்விலேயே பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டினர். "கிருதயுகத்தில் தியானத்தாலும் திரேதாயுகத்தில் யாகங்களால் ஆராதித்தும், துவாபரத்தில் அர்ச்சித்தும் எதை ஒருவன் அடைவானே அதைக் கலியில் கேசவ கீர்த்தனத்தாலேயே அடைவான்" (விஷ்ணு புராணம் 6.2.17) மேலே தரப்பட்ட கருத்தை இவ்விடத்தில் நினைவூட்டுவதும் பொருத்தமானதே.

சுவாமிகள் சிறு பிராயத்தில் முறைப்படி பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்ட போதிலும் கல்வியில் மிகுந்த முன்னேற்றம் அடையவில்லை. பரீட்சைகளில் சித்தியடையாத போதிலும் மற்றிக்குலேஷன் வகுப்புவரை கல்வி கற்ருர். ஆங்கிலபாஷையில் வல்லுனராக விளங்கினர். நூல்நிலையங்கட்குச் சென்று நாடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் தத்துவ நூல்கள் இவைகளை வாசித்து அறிவைப் பெருக்கினார். நூல்களைக் கற்ற போது சுவாமி விவேகானந்தர், சுவாமி ராமதீர்த்தர் என்பவர்களின் நூல்கள் இவரின் மனோ நிலையை முழுவதும் மாற்றி அவரின் பிற்கால உன்னத ஆத்மீக வாழ்வுக்கு நல்விதை விதைத்தன. ஒத்த வயதுள்ள வாலிபர்களைச் சேர்த்து ஒரு சபையைத் தாபித்து ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும் கன்னடப் பக்தர்களின் சரிதைகளையும் நடித்தார். சமார்த்த ராமதாஸரின் சீவியத்தை நாடகமாக நடித்த போது நமது 'விட்டல் ராவ்' சுவாமி 'ராமதாஸ்'ராகத் தோன்றியதே அவரது பிற்கால வாழ்வுக்கு அடிகோலியதெனலாம். சென்னையில் சித்திரக் கல்லூரியில் சித்திரமும், கைத்தொழிற் பாடசாலையில் நெசவுத்தொழிலும் கற்றார். கைத்தொழில் பாடசாலையில்சித்திபெற்றதும் "நைசாம்" இராச்சியத்தில் ஓர் உத்தியோகத்தில் அமர்ந்தார். அப்போது விட்டல் ராவுக்கு வயது இருபத்தைந்து. பெற்றோரின் விருப்பப்படி "ருக்மாபாய்" என்னும் பெண்ணைத் திருமணம் செய்து 'ராமாபாய்' என்னும் ஒரு புத்திரிக்குத் தந்தையானார்.

சிறிது காலத்தின் பின்னர் உத்தியோகத்தை விட்டுச் சொந்தமாகத் தொழில் ஆரம்பித்து கடனாளியானார். இதனால் பெருங்கஷ்டத்திற்குள்ளானார். ஆயினும் அவரின் நண்பர் ஒருவர் இவர்மீது கொண்டிருந்த அன்பால் இவர் செய்து வந்த தொழிலில் பங்காளியாகச் சேர்ந்து பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் முழுவதையும் தீர்த்து விட்டார்.

சுவாமி ராமதீர்த்தர் மீதும் ராம நாமப் பாடல்களிலும் முன்னரே பிரேமை கொண்டிருந்த விட்டலுக்குத் தனது கடன் தொல்லை தீர்க்க ஸ்ரீ ராமன் கட்டளையே முன்வந்ததென்ற நம்பிக்கை பிறந்தது. "பொன்னை நெருப்பினில் பொலிவேற வாட்டிடும் பொற்கொல்லன் போற் சீவனைப் புவி மாயை தன்னிலே வாட்டி மாற்றேற்றி பூங்கழற்கு அணியாக்குபவன் இறைவன் அன்றோ!" விட்டலின் மனோநிலையை நன்குணர்ந்த தந்தையார் பாலகிருஷ்ணராவ் தமக்குஉடுப்பியில் ஓர் சுவாமியால் உபதேசிக்கப் பட்ட "ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்" என்னும் மந்திரத்தை மகனுக்கும் உபதேசித்தார். 'விட்டல் ராவும், அதைச் சிரத்தையோடு அல்லும் பகலும் செபித்து அத்யாத்மிக வழியில் விரைவாக முன்னேறிச் சென்றார். மனம் உலக விவகாரங்களிற் செல்ல மறுத்தது. தியானத்திலும் ஸ்ரீ ராம நாம ஜெபத்திலும் அதிக நேரஞ் செலவிட்டார்.

பகவத்கீதை, புத்தர்சரிதை, விவிலியநூல் ஆகியவற்றினை ஊன்றிப் படித்து அவற்றில் அடங்கிய தத்துவங்களை அறிந்து கொண்டார். படிப்படியாக இல்வாழ்வு வெறுக்கத்தொடங்கியது. தமது மனைவியைச் சகோதரி என விளித்து கடிதம் ஒன்றை எழுதிவைத்து விட்டு 27-12-1922ல் வீட்டை விட்டு வெளியேறினார். பாத யாத்திரையாகச் ஸ்ரீரங்கம் சேர்ந்து காவேரியில் நீராடிக் காவி வஸ்திரதாரியாக மாறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத் துறவு ஏற்பட்டவுடனே ஸ்ரீ ராமனிடத்தில் அளவிலாத பிரேமை அவருக்கு ஏற்பட்டது. பின்வரும் பிரார்த்தனைகள் மூன்றையும் விரதமாகக் கொண்டார்.

1. இவ்வாழ்க்கை இது முதல் ஸ்ரீ ராம தியானத்திற்கும் சேவைக்குமே முற்றிலும் அர்ப்பணிக்கப்படல் வேண்டும்.

2. மாதர் யாவரையும் தாயாகக் கருதிச் சுத்த பிரமச்சரியத்தை அநுட்டித்தல் வேண்டும்.

3. பிச்சையெடுத்தோ அல்லது கொடுக்கப் பெற்றோ சரீரயாத்திரையை நடத்த வேண்டும்.

இப்பிரச்சனைகளைக் கூறியே விட்டல் ராவ் "ராமதாஸ்" ஆனார். தென்னிந்தியாவில் உள்ள பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு ஸ்ரீ அரவிந்தமஹரிஷியையும், பகவான் ரமண மஹரிஷியையையும் தரிசனம் செய்ய எண்ணி அவர்கள் இருக்குமிடம் சென்றார். பகவான் ஸ்ரீ அரவிந்தரைத் தரிசிக்க முடியவில்லை. திருவண்ணாமலை சென்று பகவான் ஸ்ரீரமண மஹரிஷிகளின் பாதங்களில் விழுந்து வணங்கினார். மகரிஷிகள் தமது திருக்கண்களினால் நயன தீட்சை அளித்தார். ''ராம ராம'' எனச் செபித்துக் கொண்டே அருணாசலத்திலுள்ள குகை யொன்றில் தியானத்தில் அமர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் வட நாட்டுத் தலங்கள் பலவற்றையும் தரிசித்து புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி தென்னாடு திரும்பினார். மங்களூர் என்னும் பட்டினத்திற்கு தெற்கே சுமார் 15 மைல் தொலைவிலுள்ள 'காசரக்கோட்' என்னும் ஊரின் வெளிப்புறத்தே குடிசையொன்றை அமைத்துக் கொண்டு தமது சாதனையில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் அண்மையிலுள்ள பல அன்பர்களும் தொண்டர்களும் அங்கு சுவாமிகளின் தரிசனத்திற்காகவும் உபதேசங்களைக் கேட்பதற்காகவும் வந்துபோய்க் கொண்டிருந்தனர். இந்தக் கட்டத்தில் தூய அன்னை கிருஷ்ணபாயும் அமைதியையும் மனச்சாந்தியையும் தேடி காசரக்கோட்டிலேயே இருந்தார்கள். சாது ஒருவர் அவ்வூரில் வசித்து வருகின்றார் என்று கேள்வியுற்று அங்கு சென்றார்கள். அந்த இடத்தை அண்மித்தபோதே ஒருவகை அமைதியும் உவகையும் அன்னையாரை ஆட்கொண்டது. சுவாமிகளைக் கண்டு கும்பிட்ட மாத்திரத்திலேயே அவர் தேடும் அமைதியை அங்கு பெறலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. தினமும் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆச்சிரமத்தில் நிற்கும் வேளைகளில் ஆச்சிரமத்தைச் சுத்தஞ் செய்தல், வரும் அடியார்களின் தொண்டுகளைக் கவனித்தல் முதலிய வேலைகளைக் கவனிப்பார்கள். காலப்போக்கில் ஆச்சிரமத்திலேயே நிரந்தரமாகத் தங்கிவிடவேண்டுமென்று தீர்மானித்து சுவாமிகளின் அனுமதியுடன் தங்கியும் விட்டார்கள். அன்பர்கள் அடியார்கள் கூட்டமும் நாளுக்கு நாள் பெருகியது. கள்வர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்டர்கள் கண்களை ஆட்சிரமத்தின் பிரபல்யமும் முன்னேற்றமும் உறுத்தின. தொல்லைகளைக்கொடுக் கத் தொடங்கினர். சகிக்க முடியாத கட்டத்தை எட்டியது. ஆகவே அந்த இடத்தை விட்டு வேறு பொருத்தமான இடத்திற்கு ஆச்சிரமத்தை மாற் றிக் கொள்ள சுவாமிகள் தீர்மானித்து அங்கி ருந்து 15 மைல் தெற்கே உள்ள கஞ்சங்காடு என்னும் ஊருக்குக் கால் நடையாகவே சுவாமிக ளும் தாய அன்னையாரும் சென்று அன்பர்கள் வீடுகளில் தங்கி இருந்தார்கள். கஞ்சங்காட்டிலுள் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அங்கி ருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள "மஞ் சபதி" என்னும் மலையடி வாரத்தில் ஆச்சிரமம் ஒன்று நிறுவத்தீர்மானம் எடுக்கப்பட்டது. மிக விரைவில் அடியார்கள் கூடுவதற்கான அறை ஒன்றும் சமையல் அறையொன்றும் கட்டப்பட்டு திறப்பு விழாவும் நடந்தேறியது. ஒரு அறை யுடன் ஆரம்பித்த ஆச்சிரமம் இப்போது பத்து ஏக்கர் நிலத்தில் பலகட்டிடங்கள், மருத்துவ நிலையம், பாலர்பாடசாலை, நூல்நிலையம், அடியார் கள் தங்கும் சிறுசிறு விடுதிகளா காட்சிஅளிக்கின் றன. மஞ்சபதி என்று அழைக்கப்பட்ட இடம் இப்போ "ராமநகர்" என மாறியுள்ளது. ஆனந் தாச்சிரமம் என்ற பெயருடன் ஒரு உபதபாலக மும் இயங்கி வருகிறது.

ராமநகர் ஆச்சிரமத்திற்கும் ஆனந்தாச்சிர மம் என்றே பெயரும் சூட்டப்பட்டுள்ளது. இந்த ஆச்சிரமம் ஆரம்பித்த பிறகும் சுவாமிகள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவைகள் இந்தியாவைச் சுற்றி யாத்திரை செய்துள்ளார்கள். 1954ம் ஆண்டு உலக யாத்திரை யொன்றை ஆரம்பித்து இலங்கைக்கும் விஜயம் செய்து பல இடங்கட்கும் சென்றுள்ளார்கள்.

சுவாமிகள் ஆங்கிலத்தில் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். Vision என்னும் மாதச் சஞ்சிகை ஒன்றும் ஆச்சிரமத்திலிருந்து வெளிவருகின்றது.

"ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜயாரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன இருந்து என்னடா?

தாரா காடு கிருஷ்ணய்யர்

நாவிருந்து என்னடா
ராம ராம என்று சொல்லடா
கையிருந்து என்னடா
கரங்குவித்து நில்லடா

காலிருந்து என்னடா
திருக்கோவிலுக்குச் செல்லடா
கண்ணிருந்து என்னடா
திருவிழாவைப் பாரடா

காதிருந்து என்னடா
ராம கதையைக் கேளடா
பொருளிருந்து என்னடா
அடியார்க்கமு தூட்டடா

அறிவிருந்து என்னடா
அறியாதவர்க்குச் சொல்லடா
முடிவில் கையிருந்து என்னடா
ராம நாமம் எழுதடா
ராம நாமம் எழுதடா.

- ஆத்மஜோதி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் கமலத்தில் இறைவன்

எந்தவேளையும் இறைவனை நினைக்கவேண்டும். அது உன்னால் ஆரம்பத்தில் முடியவில்லையானால் மூன்று வேளைகளில் தவறாமல் நினை.

1. எழுந்தவுடன் இறைவனை ஒருகணமாவது நினை "இறைவனே! இன்று நான் நல்ல வழியில் நிற்க அருள் செய்" என்றுதொழு.

2. உணவு உட்கொள்ளும்போது நினை. "இறைவனே! இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும் அன்பும் உண்டாக அருள்புரி" என்று தொழு.

3. படுக்கும் போது நினை. "இறைவனே! இந்த உறக்கத்திலே உன்னுடைய எண்ணமே நிற்க அருள்" என்று தொழு.

உன்னையாராவது புகழும் போது மகிழ்ச்சியடையாதே. அதேபோல் உன்னை இகழும்போது கவலையுமடையாதே. இகழையும் புகழையும் சமமாகக்கருது. அதனால் உன் மனது அமைதியாக இருக்கும்.

கிருபானந்தவாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 1 மாதாஜியின் மட்டற்ற தர்ம சிந்தை

மாதாஜி கிருஷ்ண பாயின் ஜீவியம் ஒரு பூரணத்துவம் நிறைந்த தியாக வாழ்க்கை யாகும். மாதாஜியின் நோக்கு ஒரு சர்வ வியாபகமானது. சகல ஜீவன்களையும், அவைகளினூடே ஓடும் ஆத்மா ஒன்றே என்ற அடிப்படையில் ஆனதாகும். எல்லாப் படைப்புக்களும் தமது தோற்றமே எனவும், ஒரு திரட்சியான கூட்டு என்ற முறையில் நோக்கும் தன்மையது. மாதாஜியின் வாழ்க்கையில் இவை தினமும் பிரதிபலிப்பதனைத் தெற்றெனக் காணலாம்.

இதற்கு எடுத்துக்காட்டாக இதோ ஒரு கதை:—

"ஆனந்த ஆச்சிரமத்"தினருகில் ஒரு ஏழைக் கிருகஸ்தன் தனது குடும்பத்தை நிர்வகிக்க முடியாத இழிநிலையில் வாழ்ந்து வந்தான். இவன் ஒருநாள் மாதாஜியை நாடி ஆச்சிரமத்துக்கு வந்தான்.

மாதாஜியை மண்டியிட்டு வணங்கினன். "தாயே! எனது மனைவியும், எனது மக்களும், யானும் பசிக்கொடுமையால் வாடுகின்றோம். யானோ வேலை வாய்ப்பிழந்தும் வருவாயற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடுகின்றேன். உணவு இல்லாது வருந்துகின்றோம். குடும்பத்தைக் காப்பாற்றும் வகையறியாதுள்ளேன். எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்றான்.

மாதாஜி ஒரு கணநேர சிந்தனையின்பின் "உனக்குப் பால் மாடு ஒன்று கன்றுடன் தருவோம். அதனுடைய பாலைக் கறந்து விற்று அதன் வருவாய் மூலம் வாழ்க்கையை நடத்து. என்ன சொல்கின்றாய்!'' என வினவினார்.

மாதாஜியின் கொடையை மனமகிழ்ச்சியுடன் ஏற்கச் சம்மதித்தான். "ஆனால் எனது வீடு இருக்கும் இடம் பிறருக்குச் சொந்தமானது. வேறு கட்டடம் ஒன்றுமில்லை. பசுவையும் கன்றையும் வைத்துப் பராமரிக்கப் பாது காப்பான இடமில்லையே'' என்று பகர்ந்தான்.

"அந்தக் கஷ்டத்தை இலகுவில் போக்கி விடலாம். ஆச்சிரம ஊழியர்களைக் கொண்டு உனது வளவுக்குள்ளே பசுவும் கன்றும் நிற்கக் கூடிய தொழுவம் கட்டித் தரலாம்! சரிதானே!'' என்று மாதாஜி கூறியருளினார்.

"மிகவும் நன்றி'' என்று அந்த வறிஞன் பதிலிறுத்தான். "ஆனால் பசுவுக்கும் கன்றுக்கும் புல்லு, பிண்ணாக்கு முதலியன வாங்குவதற்கு யான் என்ன செய்வேன்! எங்கு செல்வேன்'' என்று இரந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதனையும் தீர்த்து வைக்கலாம்" என்று பகர்ந்தார். மாதாஜி "எங்கள் ஆச்சிரமத் தொழுவங்களில் போதிய வைக்கோல் பொதி உண்டு. தினமும் இரண்டு அல்லது மூன்று பிடி வைக்கோல் உனது பசுவுக்குத் தரலாம். ஆச்சிரம தேவைகளை விநியோகிப்பவன் மூலம் உனக்குத் தேவையான பிண்ணாக்கையும் தரும் படி ஒழுங்கு செய்துவிடலாம்" என்று கூறினார்.

ஒரு கிழமைக்குள் மாட்டுத் தொட்டில் எழுப் பப்பட்டுவிட்டது. பசு, கன்று, வைக்கோற் பிடிகள், பிண்ணாக்கு யாவும் வறிஞனினிருப் பிடத்தை நோக்கிச் சென்றன. சில நாட்கள் சிரமமில்லாது சென்றன. மீண்டும் அந்த வறிஞன் மாதாஜியின் முன்நின்று, "தாயே! பசு நல்லா கப் பால் தருகின்றது. ஒரு குறையும் பொல் லாப்பும் இல்லை. ஆனால் பசு தரும் பால் அவ் வளவையும் வாங்குபவர்களில்லையே! நியாயமான விலைதானும் தருவார்களில்லையே" என்று மனம் கவன்றான். "இதனால் பெறும் ஊதியம் கொண்டு எனது குடும்பத்தை இழுக்க இயலாமல் வருந்து கின்றேன்" என்று முறையிட்டான்.

"நீ எதற்காக அல்லற்படுகிறாய்? இதனைத் தீர்ப்பதற்கு இலகுவான மார்க்கம் உண்டு. எங் கள் ஆச்சிரமத்துக்குப் போதிய பால் வேண் டும். இனிமேல் உனது ஆவின் பாலை எங்கள் ஆச்சிரமமே வேண்டும். உனது பசு தரும் அவ்வளவு பாலையும் எங்கள் ஆச்சிரமத்துக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவும். நியாயமான விலை கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்" என்று மாதாஜி பகர்ந்தார்.

அன்று தொடக்கம் வறிஞன் மிகவும் சந்தோஷமாக மனைவி மக்களுடன், மாதாஜியின் கருணையினால் வாழ்ந்து வந்தான்.

மாதாஜியின் மட்டற்ற தர்ம சிந்தைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

---

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

அகர ஒலியே எல்லா எழுத்துகளுக்கும் முதல். அது போல், ஆதிபகவன் உலகிலுள்ள உயிர்கள் எல்லாவற்றிற்கும் முதல்வனாக இருக்கின்றான்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

தூய அறிவு வடிவான இறைவனின் நன்மை தரும் திருவடிகளைத் தொழாதவர் என்றால், அவர் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

உண்பவர்களுக்குத் தகுந்த பொருள்களை விளைவித்துத் தந்து, அவற்றைப் பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக (பருகும் நீராக) விளங்குவதும் மழையே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

## நவீன துர்வாசனை நல்வழிப்படுத்தல்

ஒரு சாது எந்த வகுப்பினனுனாலும், அல்லது எந்தச் சமயத்தினனுனாலும், அல்லது மாறுபட்ட சமயக் கோட்பாடுள்ளவனுனாலும், அவர் ஒரு சாதுவானல், ஆனந்தாச்ரமம் அச்சாதுவுக்கு எந்நாளும் வரவேற்பளிக்கும். ஆச்சிரமத்தில் தர்மசாலையில் இவ்வாருன சாதுக்களிடையே மல்லுச் சண்டைகளும் நடைபெறும். ஒரு சாது மற்றச் சாதுவைப் பார்த்து, "என்னைத் தீண்டாதே, தூர நில்! நீ இழிந்த வகுப்பினன்! எனக்கண்மையில் எவ்விதம் நீ இருக்க முடியும்? எனது சாப்பாட்டு இலையை ஏன் தீண்டினுய்? எமது சாப்பாட்டு இலையைத் தீண்டியபடியினுல் தீட்டுப்பட்டுவிட்டது" என்று இவ்வாருகச் சீறிப் பொருமுவார்கள்.

ஒருமுறை சாது ஒருவர் எங்கள் ஆச்சிரமத்துக்கு வந்தார். எல்லோரும் பொதுவாகக் குழுமி உணவு உண்ணும் பொதுச்சாலையில் இவர் சென்று உணவு கொள்ள விரும்பவில்லை. ஆகவே உணவு சமைத்துச் சாப்பிடுவதற்கு ஒழுங்குகள் செய்ய விருப்பம் தெரிவித்தார். சமைப்பதற்குத் தேவையான அரிசி, பருப்பு, நெய், கோதுமை மாவு, மரக்கறிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியனவற்றைப் பெற்றுச் சமைத்துச் சாப்பிட்டார்.

ஒருநாள் தண்ணீர் மொண்டு வைப்பதற்கு ஆச்சிரமத்துக்குரிய ஒரு வாளியை எடுத்துக் கொண்டார். தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு ஒரு "லோட்டா" (செம்பு) ஒன்றும் வைத்துக் கொண்டார். வாளியிலும் அரைவாசிக்கு நிறைத்துத் தன்னருகிலேயே வைத்துக்கொண்டார். அதற்கருகில் வாழை இலையில் தனது சாப்பாட்டை எடுத்து வைத்து உட்கார்ந்து உண்ண ஆரம்பித்தார்.

அதே சமயம் ஆச்சிரம ஊழியப் பெண் வாளியைத் தேடி வந்தாள். ஆச்சிரமத்துக்குச் சொந்தமான சட்டி பானை கழுவுவதற்குத் தண்ணீர் எடுப்பதற்குப் பாவிக்கும் வாளியைத்தான் சாது எடுத்துள்ளார். ஆகவே அதனை எடுப்பதற்கு அதனருகே சென்று எடுக்க எத்தனிக்கவும், சாது உடனே அலறும் தொனியில் கத்தினர். "எனது வாளியைத் தீண்ட உனக்கு எவ்வாறு தைரியம் வந்ததடி! இந்த இடம் முழுவதையும் தீட்டாக்கி விட்டாயே? இனி இந்த உணவையும் என்னுல் சாப்பிட முடியாதே" என்றுர்.

சாது ஒரு மிருகமாக மாறி அப்பெண்ணைச் சபித்தார். அவள்மீது வசைமாரி பொழிந்தார். அவர் போட்ட சத்தம் எங்களுக்கும் ஆச்சிரமத்தில் கேட்டது. அடக்க முடியாத கோபாவேசத்தில் அங்கும் இங்கும் பாய்ந்து பாய்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது கோப அனலைக் கக்கினர். அப்பாவிப் பெண்ணினால் சாது முன் நிற்க முடியாமல் மாதாஜி முன் ஓடிவந்து தஞ்சம் புகுந்தாள். ஒரு நொடிப்பொழுதில் வேறொருவர் மாதாஜியிடம் முறையிட்டார். "அந்தச் சாது தான் சமைத்த அவ்வளவு உணவையும், இலையையும் நாய்க்கு முன்பாக வீசிவிட்டார். இன்னும் அலட்டிக் கொண்டும் ஆவேசமாகவும் காணப்படுகின்றார். ஒருவரும் அவருக்கண்மையில் போக முடியாமல் இருக்கின்றது'' என்று கூறினர்.

இந்தச் சாது உருவத்தில் குட்டை. ஆனால் உடலால் பருத்தவர். பயங்கரமான தோற்ற முடையவர். சிறிது நரைத்த தாடியுமுண்டு. பின்னப்பட்ட சடாமுடி. சாது கோபாக்கினி யில் சிக்குண்டு தவிப்பதனைத் தூரத்தில் நின்ற வண்ணம், ஒருகணம் கவனித்தபடி மாதாஜி நின்றார். இக்கால துர்வாசன் போன்ற காட்சியை அச்சாது நினைவூட்டினர். இவரது இறுமாப்பை யும் கோபத்தையும் தணிப்பதற்கு மாற்று மருந்து கொடுத்தாகவேண்டும் எனத் தீர்மானித் தார். சமையலறைச்சாலைக்குச் சென்றார். நல்ல வெள்ளரிப் பழம் இருந்தது. அதனை நேர்த்தி யாகத் துண்டாடினர். பலவகை வாழைக் கனி களையும் எடுத்தார். இரண்டு இளநீர் (தேங்காய்) எடுத்தார். இவைகள் எல்லாம் ஒரு தட்டில் வைத்து ஒரு ஊழியன்மூலம் சாதுவுக்கு அனுப்பி வைத்தார். மாதாஜியும் அந்த ஊழியனைப் பின் தொடர்ந்து சாது இருந்த இடத்திற்குச் சென் றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நிற வெள்ளரிக்காயையும், தித்திக்கும் பழங்களையும், மாதாஜியையும் கண்டதும் கண்களிரண்டிலும் கனன்ற கனற்பொறிகள் சிறிது சிறிதாகப் புனலாக மாறியது. "ஆச்சிரமப் பெண் பிழைசெய்துவிட்டாள். ஆனால் அது தவறுதலாக நேர்ந்துவிட்டது. இந்தப் பழங்களை இப்போது சாப்பிடும்" என்று மாதாஜி கூறி ஒரு குவளை நிறையத் தித்திக்கும் சூடான பாலையும் கொடுத்தார். சாது உடனே நிலத்தில் சப்பாணி கொட்டினர். பழங்களிலும் பாலிலும் அரைவாசிக்கு மேல் அருந்தி முடியவும், சாதுவைப் பிடித்த அலட்டலும் ஆட்டமும் தணிந்து பழைய நிலைக்குச் சாது சாதுவாகிவிட்டார்.

சீறும் சிங்கங்களையும் சிரிக்கவைக்கும் திறமை மாதாஜியிடமுண்டு. எல்லாப் பழங்களும், குவளை நிறைந்த தீம்பாலும் தொண்டைக்குள்ளாகச் சென்று வயிறு நிறையவும் இலேசாகச் சாது ஒரு புன்முறுவலை உதிர்த்தார். இப்போது சாது பூரணமான சந்தோஷமடைந்துவிட்டார். மாதாஜி சாதுவை நோக்கி, "எப்படி இப்போது இருக்கின்றீர்கள்?" எனக் கேட்டார். "மிகவும் சந்தோஷம் மாதாஜி!' எனக் கூறினர்.

சாது ஆச்சிரமம் எங்கும் சென்று "மாதாஜி பரம காருண்யம் நிறைந்தவர், அன்னை தந்த பழமும் பாலும் எனது அகத்தையும் புறத்தையும் குளிரச் செய்துவிட்டது. யான் என்றும் நன்றியுள்ளவனாக வாழ்வேன்" எனக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# எப்போதும் பிழைபொறுக்கும் சாதுக்கள்

சாமர்த் ராமதாஸ் தனது சீடர் குழாத்துடன் சிவாஜி மன்னனைச் சந்திப்பதற்காகச் சென்றுர். சென்ற மார்க்கத்தில் ஒரு மரத்தடியில் தங்கிஞர். சீடர்களுக்குப் பசிகாணவே, அருகே இருந்த கரும்புத் தோட்டத்துக்குள் அதனுடைய சொந்தக்காரனுக்குத் தெரியாமல் சென்று சில கரும்புகளை வெட்டித் தாங்களும் சுவைத்துவிட்டுக் குருவுக்கும் கொண்டுவந்தனர்.

தனது தோட்டத்துக்குள் புகுந்து அடாத தொழிலைச் செய்தவர்கள் யார் என்பதனைத் தெரியாதவனுய்க் கோபங்கொண்டு குருவையும் அவரது சீடர்களையும் அடித்துவிட்டான் தோட்டக்காரன். குருவும் சீடர்களும் மிகவும் மௌனமாக அடியைப் பெற்றுக்கொண்டு தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். அப்படியே சிவாஜி மகரிஷியின் மாளிகைக்குச் சென்றுர்கள். வழியில் தங்கட்கு நடந்தவற்றை ஒருவரும் ஒருவருக்கும் வெளியிடவில்லை.

சிவாஜி மன்னர் சாமர்த் ராமதாசரை நீராட்டியபோது அவரது முதுகுப்புறத்தில் சிவந்துபோன அடிகாயம் தென்பட்டது. அதனைப்பற்றி அவரிடம் வினவிஞர். சாதுவானவர் அக்கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியை அசட்டை செய்துவிடவே, சீடர்கள் வாயிலாக உண்மையை அறிந்தார். உடனே கரும்புத் தோட்டச் சொந்தக்காரனை வரவழைத்தார். சிவாஜியும் சாது ராமதாசரும் இருக்கும் நேரம் கரும்புத் தோட்டக்காரன் அங்கே வந்தான். தோட்டக்காரனைக் கண்டதும் "எதற்காக இவரை இங்கே அழைத்தீர்கள்" என்று சாமர்த் ராமதாசர் அரசனைப் பார்த்து வினவினர். "சாதுக்களுக்கும் அவரது சீடர்களுக்கும் அவதூறு விளைவித்தவனுக்குத் தகுந்த தண்டனை கொடுத்தாக வேண்டும்" என்று கூறினர்.

"கரும்புத் தோட்டக்காரன் ஒரு குற்றமும் புரியவில்லை. எங்கள் யாவரையும் அவன் அடித்தது மிகவும் சரி. அவனது அனுமதி இல்லாது அடாத்தாகச் சென்று கரும்பு வெட்டியது எங்கள் பிழை. ஆகவே அவனைத் தண்டிப்பது சரியன்று. அதற்குப் பதிலாக நாசமான கரும்புகளுக்கும், இங்கு வந்த கஷ்டம், தண்டனை கிடைக்கப்போகின்றதே என்ற மனப்பயம் இவைகள் யாவற்றுக்குமாக, இவனுக்கு ஐந்து கிராமங்களை இனமாக நீங்கள் கொடுக்கவேண்டும்" என்று சாது கேட்டுக்கொண்டார். இவ்வாறு மன்னனை எதிர்பார்த்த கரும்புத் தோட்டக்காரனை மன்னித்து அவனுக்குப் பரிசும் அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# அலகையும் — அடிக்கோலும்

ஒருவன் ஒரு அலகையை (பிசாசை)ப் பிடித்துச் சாசுவதமாக்கி, அதனைத் தனக்கு ஏவல் செய்வதற்கு ஏற்பாடு செய்தான். அதற்கான சாதனைகளைப் பழக்கினுன். சில மந்திரங்களைக் கற்றுப் பிசாசைத் தன்முன் கொண்டுவரலானுன். பிசாசு, அவனைப் பார்த்து ஒரு நிபந்தனைக் கமைவாக அவன் விரும்பியவற்றைச் செய்யச் சம்மதித்தது. அது "எனக்கு இருபத்து நான்கு மணித்தியாலமும் வேலை தரவேண்டும். தவறினுல் உன்னைக் கபளீகரம் செய்துவிடுவேன்" என்றது. அவனும் "ஆகட்டும்" என்று கூறிவிட்டான். பிசாசைப் பார்த்து, "ஒரு அரண்மனை கட்டு" என உத்தரவு கொடுத்தான். அதிசயிக்கத்தக்க முறையில் அழகான அரண்மனை ஒன்றினை அதிவிரைவில் கட்டி முடித்துவிட்டது. அதன் பின்பு ஒரு நீண்ட சாலை — வீதி அமைக்கும்படி உத்தரவு கொடுத்தான். இந்தச் சாலை அமைப்பதனையும் ஒரு சில நாட்களில் முடித்து விட்டது. அடுத்த நிமிடம் பிசாசு அவன்முன் வேறு வேலைக்காகக் காத்து நின்றது. அடுத்த வேலை என்ன இடலாம் என்பதனைச் சிந்திக்கவே அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. யோசித்து விட்டுப் பெரிய நகரம் ஒன்றினை அமைக்கும்படி கட்டளையிட்டான். பத்து நிமிடமும் செல்லவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பூங்காவனம், சாலைகள், கொத்தளம், கோபுரம் ஆகியனவான நகரம் ஒன்றினை அமைத்துவிட்டது. இனி என்ன உத்தரவு கொடுக்கலாம் என்று யோசித்தான். தாமதித்தால் தன்னைக் கபளீகரம் கண்டுவிடும் என்பதும் தெரியும். அவசரமாக ஒரு 'தபசி'யிடம் ஓடினன். தனது தர்மசங்கடத்தை விபரமாகக் கூறினன். இரந்து, தப்பும் மார்க்கம் யாது? என நின்ருன். "ஒரு மூங்கில் தடியை எடுத்து அதனை நிலத்தில் நாட்டி அதன்மேல், அடுத்த உத்தரவு தரும்வரை ஏறி இறங்கும்படி செய்யச்சொல்" என்று புத்திமதி கூறி அவனை அனுப்பினுர். அவனும் அப்படியே பிசாசுக்கு உத்தரவு பிறப்பித்தான். பிசாசும் பிசகுபண்ணுது தலைசாய்த்தது. ஆனுல் இந்த வேலையில் பிசாசுக்கு ஒரு ஆறுதலும் கிடைக்கவில்லை. ஈற்றில் அது வெறுப்படைந்து ஓடியேவிட்டது.

இக்கதையில் 'ஸ்ரீ ராம்' ஆகிய மந்திரமே கதையில் வந்த மூங்கில் தடி. 'நான்' என்ற ஆணவ முனைப்புத்தான் பிசாசுஆக வந்து சோலி பண்ணியது. நான் என்ற மமதையைப் பார்த்து 'ஸ்ரீ ராம்' என்ற தடியில் ஏறி இறங்கச்சொல்ல அதிவிரைவில் களைத்து ஓடிவிடும். மமதையை மறக்கவே 'ஸ்ரீ ராம்' மந்திரத்தை உனக்குத் தந்தோம். மமதை தானுகச் சோலிபண்ணித் தாளுக மறையும் — ஸ்ரீ ராம்! ஸ்ரீ ராம்! ஸ்ரீ ராம்! என்பாய்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# சகல ஜீவன்களிலும் உன்னைக் காண்

வேடிக்கையில் விருப்பமுள்ள ஒருவன் பல கண்ணாடிகளைத் தனது அறையின் நாலாபக்கச் சுவர்களிலும், வீட்டுச் சீலிங் பலகைகளிலும் பதித்து வைத்திருந்தான். ஒரு அங்குல வெளி தானும் கண்ணாடிகளில்லாத வெறுமை இல்லாதிருந்தது. அறைக் கதவை மூடிவிட்டு மின் விளக்கின் விசையை அழுத்தி ஒளியை வரச் செய்து அறையின் மத்தியில் நின்றான். தனது விம்பங்கள் பலநூறு வடிவத்தில் மேல், கீழ், பக்கம் நாலா புறமும் காட்சி தந்தது.

இக்காட்சியை இன்பகரமாக வாயூறப் பார்த்து ரசித்தான். ஏனெனில் தன்னைப் பலவாறு காண்கின்றான். இவ்வாறு சில நிமிடம் பார்த்துவிட்டுக் கதவை மூடுவதற்கு மறந்து அறையைவிட்டு வெளியே சென்றுவிட்டான். சில நிமிடம் சென்றதும் இவனுடைய வீட்டு நாய், பூட்டாது இருந்த கண்ணாடி அறைக்குள் சென்றதுதான், தனது விம்பத்தைக் கண்டுவிட்டது. அந்த நாய் தாவித் தாவிப் பாய்ந்து தனது விம்பங்கள்தான் என்று அறிவில்லாது அவைகளுடன் சண்டை போட்டது. அகோரமான சண்டை காரணமாகக் களைத்து இளைத்து ஈற்றில் இறந்தேவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தான் மனிதனும் மற்ற மனிதன் தன்னிலும் வேறுபட்டவன் எனத் தெரியா நெண்ணி வீணே சண்டை போடுகின்றான். ஒரு வருக்கொருவர் வாது புரியாமலும், சண்டை போடாமலும், வெறுப்பில்லாமலும், எப்போது எல்லா ஜீவன்களும் தனது பிரதிரூபமே என்று உண்மையாக உணருகின்றானோ அவன் யாவரை யும் சமமாக நேசிப்பான்.

---

**உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.**

*"அறிவு" என்னும் அங்குசத்தால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கிக் காப்பவன் எவனோ அவனே மேலான வீட்டுலகிற்கு ஒரு வித்து ஆவான்.*

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற.**

*தன் மனத்திடத்துக் குற்றம் இல்லாதவனாகுதல் என்னும் அவ்வளவே அறம் எனப்படும். பிற ஆரவாரத் தன்மை கொண்டவை.*

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து.**

*பிறரையும் அறநெறிப்படி நடக்கச்செய்து, தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை வாழ்வதானது, தவசியரின் நோன்பைவிட வலிமையானது ஆகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# மாற்றம் என்றால் இதுவன்றோ பெருமாற்றம்!

புரந்தரதாஸ் என்னும் நகை வியாபாரி வெகு பணக்காரன். ஆனால் பெரும் லோபி. ஒருமுறை ஆண்டவன் ஹரிதாஸ் வேடம் தாங்கி, தனது மகனுடைய உபநயனத்துக்கு உதவி வேண்டி மேற்கூறிய லோபியிடம், சுமார் ஆறுமாத காலமாகப் பிச்சைகேட்டு அலைந்தார். லோபி அவரை ஏசித் துரத்திவிடுவான். ஆனாலும் ஹரிதாஸ் சுவாமிகள் விட்டாரில்லை. ஏச்சைக் கேட்டுக் கொண்டும் தினமும் வந்தார். கடைசியாக ஒரு செல்லாக் காசு ஒன்றை அவர்முன் வீசி எறிந்தான். அதன் பின்பு சுவாமிகள் ஷை லோபியான நகை வியாபாரியின் மனைவியிடம் சென்று, நான் சென்ற ஆறு மாச காலமாகத் தினமும் ஒரு வியாபாரியிடம் எனது மகனுடைய உபநயன சடங்குக்காகப் பிச்சை கேட்கவந்து ஈற்றில் ஒரு செல்லாக் காசுதான் கிடைத்தது. எவ்வளவு கெட்ட மனிதன்; என்று கூறினார். சுவாமியார் தனது கணவனைப்பற்றியே முறையிட்டுள்ளார் என்பதை ஊகித்துக்கொண்டாள். தனது நாயகனைக் 'கெட்டவன்' என்று கூறியது அவளுக்குப் பிடிக்கவில்லை. இருந்தும் இப்போது "தங்களுக்கு யாது வேண்டும்? என்னால் ஏதும் தானியந்தான் தரமுடியும்'' என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரிதாஸ்:** பணம் அல்லாது எனக்கு வேறு யாதும் தேவையில்லை.

**மனைவி:** என்னிடம் ஒரு பணமும் இல்லை.

ஹரி: கொடுக்கத்தான் வேண்டும் என்று மனம் இருந்தால், உன்னிடம் கொடுப்பதற்கு அதிகம் பணம் உண்டு. உனது மூக்குத்தி வைரக் கற்களால் ஆனதே? எனது தேவைக்கு இது போதுமானது. (அவள் சற்றுத் தடுமாறினுள்) உன்னுல் தரமுடியாது போனுல் நான் வேறு இடத்துக்குப் போவேன்.

**மனைவி:** வேண்டாம்! வேண்டாம்! ஆண்டவனே நீங்கள் கேட்டதை நான் தராமல் எவ்வாறு உம்மை அனுப்புவது? (தனது மூக்கணியைக் கழற்றி, ஸ்வாமியிடம் கொடுக்க முயலும் போது)

ஹரி: இச்செய்தியை உனது கணவன் அறிந்தால் நீ என்ன செய்வாய்?

**மனைவி:** அதனைப்பற்றிப் பரவாயில்லை! எனது உயிரையும் உமக்கு அர்ப்பணிப்பேன்.

ஹரி: அவ்வாருயின் "கிருஷ்ணுர்ப்பணம்" என்று சொல்லி அதனை என்னிடம் கொடு. அவ்வாறே அம்மாதும் "கிருஷ்ணுர்ப்பணம்" என்று பக்தி பரவசத்துடன் மூக்கணியைக் கழற்றி ஸ்வாமியிடம் ஒப்படைத்தாள். உடனே ஹரிதாஸ் ஸ்வாமி அதனைப் பெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கொண்டு லோபியான நகை வியாபாரியிடம் அதனை விற்கும்பொருட்டு நேரே சென்றார்.

ஸ்வாமியார் மீண்டும் தன்னிடம் வருவதைக் கண்ட வியாபாரி அலக்ஷிய பாவனையில் வெட்கமில்லாதவனே! மீண்டும் வந்துவிட்டாயா? என்று கேட்டான்.

ஹரி: நான் வந்தது இப்போது ஒரு வியாபார சம்பந்தமானது. பிச்சைக்கன்று; இதனைப் பெற்றுக்கொண்டு, இதனுடைய பெறுமதியைத் தரவும்.

வியாபாரி அந்த நகையை ஹரிதாசிடம் வாங்கிக்கொண்டான். உடனே தனது மனைவியினது மூக்கணி என்றதை அறிந்துகொண்டான். இந்த மூக்கணி எவ்வாறு உமது கைக்கு வந்தது? இதனை எங்கே பெற்றீர்? எனக் கேட்டான். அதற்கு ஸ்வாமியார், ஒரு தாராள சிந்தை நிறைந்த அம்மணி, வெகுமதியாகத் தந்தார் என்றார்.

வியாபாரி: நீ ஒரு கள்வன்! இதனைப் பரிசாகப் பெற்றதென்பது உண்மையா?

ஹரி: கள்வன்! கிருஷ்ணனும் கள்வன்தானே!

வியாபாரி: கிருஷ்ணன் கள்வன் என்றால், அதற்காக நீயும் கள்வனாக மாறவேண்டுமா? இன்றுபோய் நாளை மீளவும் இங்கு வா. நான் என்ன செய்வேன் என்றதை நாளை நீ அறிவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரிதாஸ் உடனே சென்றுவிட்டார். வியாபாரி கோபாவேசத்தனாகத் தனது வீடு நோக்கிச் சென்று கதவருகே நின்று பலமாகத் தட்டினான். சத்தம் கேட்டதும், மீண்டும் ஒரு தபசி தான் வந்துள்ளான் என்று எண்ணியவளாய் 'யார் அது! கோபாலதாஸனா?' என்று கேட்டாள்.

**வியாபாரி:** ஹா! கோபாலதாஸனா! உனது கன்னத்தில் தருகிற அறையில் கோபாலதாஸனைக் காட்டுவேன். கதவை உடனே திற!

கதவு திறக்கப்பட்டது. வந்த யாசகனுக்கு என்ன கொடுத்தாய்? என்று வியாபாரி கேட்டான்.

**மனைவி:** நான் தருமம் கொடுத்தேன்.

**வியாபாரி:** என்ன தருமம்?

**மனைவி:** நான் சில சோளப் பொரி தந்தேன்.

**வியாபாரி:** உனது மூக்கில் உள்ள வைரத் தோட்டைச் சோளப்பொரி என்று கொடுத்தாய்தானே! இப்போது உனது மூக்கில் உள்ள மூக்குத்தி எங்கே சொல்?

**மனைவி:** நான் அதனைப் பூஜை அறையில் வைத்துள்ளேன்.

**வியாபாரி:** உடனே இங்கே எடுத்துவா!

**மனைவி:** நான் துளசி பூஜை புரிந்த பின்பு எடுத்து வருவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியாபாரி:** உனக்கு அடைக்கலம் புக வேறு புக இடமில்லை! துளசி பூஜைதான் கிடைத்ததோ?

மனைவி மிகவும் உணர்ச்சிவசப்பட்டவளாய், பூஜை அறைக்குள் புகுந்து வழமையான தியானத்தில் அமர்ந்தாள். கைகூப்பி வணங்கினாள். "தாயே! இந்தச் சங்கடமான நிலையிலிருந்து எம்மைக் காத்தருள்வாய்! என்னைக் கைதூக்கி விடாவிடின் எனது உயிரை விடவேண்டியதே!" என்று சொல்லிப் பிரார்த்தித்தாள். கண்களை மூடியவண்ணம் அசையாது கைகளிரண்டையும் — இரந்து நிற்கும் பாவனையில் — பிடித்தபடி நின்றாள். வானத்தில் "டக்" என்று சத்தம் கேட்டது. கண்களைத் திறந்தாள்! என்ன அதிசயம்! அவளது மூக்கணி ஆகாய மார்க்கமாக வந்து துளசி ராமருக்கருகில் விழுந்தது. அதனை வாரி அணைத்தெடுத்துத் தனது நாயகனிடம் சென்றாள்.

**வியாபாரி:** "என்ன! இது எவ்வாறு உன்னிடம் வந்தது? எனது கடையில் உள்ள பாதுகாப்பான பெட்டிக்குள்ளல்லவா பூட்டி வைத்தேன்" என்று கூறிவிட்டுக் கடையை நோக்கி விரைந்தான். பெட்டியை ஆவலோடு திறந்தான். மூக்கணியைக் காணவில்லை.

வியாபாரிக்கு முன் ஒருபோதும் இல்லாதவாறு பெருமாற்றம் பிறந்தது. ஆறுமாத காலமாகத் தன்னால் வெறுத்துத் தள்ளிய ஹரிதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டார். அவரை ஒருதரம் பார்த்து விடவேண்டும் என்ற ஒரு தீராத விடாய், அவா தோன்றியது; புலம்பலானுன். "ஆ! ஹரிதாஸ்! மீண்டும் இவனிடம் வருவாயா? உன்னைப் பாராமல் ஒரு நிமிடமும் தரியேன்! வருவாய்! வருவாய்!". அப்போது அசரீரி வானத்தில் கேட்டது. "எதற்காக ஹரிதாசரைக் காணவேண்டும்! எனது உண்மையான சொரூபத்திலேயே வருகின்றேன்" என்று கேட்டது. இவ்வார்த்தைகள் செவிகளிலிருந்து மறைவதற்கு முன்பே ஒரு ஜோதி தென்பட்டது. இருஷ்ண பரமாத்துமா லோபகுணமுடைய வியாபாரிக்குத் தரிசனம் தந்தருளினுர். அதன்பின் லோபியாக இருக்கவும் இல்லை. வியாபாரியாகவும் இருக்கவுமில்லை. தனது செல்வத்தை இல்லாதவர்களிடை பகிர்ந்தான். மனைவியோடு விஜய நகருக்குச் சென்ருன். அங்கு விஜய விதோபாவுக்கு அடிமை பூண்டான். பூரண ஹரிதாஸ் என்ற நாமத்துடன் விளங்கினுன்.

அன்பு — இது எமது சங்கேதச் சொல்லாக எமது வாழ்வில் அமைய வேண்டும். அன்பு பிழையை மன்னிக்கும். அன்பு எதனையும் விளங்கும். அன்பு விலங்கையும் விடுவிக்கும். அன்பு மாற்றத்தையும் காட்டும். உனது கண்களில் கருணை! உனது நாவில் அடக்கம்! உனது கைகள் மென்மையாக இருக்கட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# உண்மையான யோகினி

ஒரு காட்டில் ஒரு பெரிய தபசி வாழ்ந்து வந்தார். அவரது மனைவியார் ஒரு பூரணத் துவம் பெற்ற ஆத்மா. இவர் இவ்வுலகுக்கு ஒரு புத்திரியைத் தந்துவிட்டு மோட்சவீடெய்திவிட்டார். மகள் புனிதமான சூழலில், களங்கமற்ற நெஞ்சத்தோடு வளர்ந்து வந்தாள். தந்தையார் முதுமைப் பருவம் எய்திவிட்டார். அவரை ஒரு ஊஞ்சலில் இருத்தி இங்கும் அங்குமாக அசைத்து ஆட்டி ஆதரவு தருவாள். வஞ்சகம், சூது என்னது என்று அறியாதவள். குழந்தை உள்ளம் போன்றவள். இத்தனைக்கும் அவள் வாழ்ந்துவரும் இடம் வனாந்தரமே. இவ்வாறு இப்பெண் தனது தந்தையாகிய தபசியுடன் வாழ்ந்து வருவதை அவ்விடத்தாற் சென்ற அந் நாட்டு மன்னன் பார்த்துவிட்டான். இவன் ஒரு பிரமச்சாரி. இதுவரை இம்மன்னன் இல்லறத்தை விலக்கி வந்தான். இதற்கு முன்பு இவனுக்கு எத்தனையோ விவாகப் பேச்சுக்கள் வந்தன. ஆனல் இப்போது இத்தபசியின் இளமயிலைக் கண்டபின்பு இவளையன்றி வேறு ஒரு பெண்ணையும் மணப்பதில்லை என்று தனது அமைச்சர்களிடம் அறியத்தந்தான். ஆகவே அமைச்சர்கள் தபசியின் குடிசைக்குச் சென்று அரசனின் விருப்பத்தை அறிவித்தனர். அரசனுக்கு மகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர முடியுமா என வினவினர். "என்னைப் பொறுத்தவரை ஒரு தடையும் நான் கூறமாட்டேன். மகளுடைய மனதை நீங்களே சென்று அறியுங்கள்" என்று பணிவுடன் கூறினார்.

அவர்கள் மகளை அண்மி அரசனின் விருப்பத்தை அறிவித்தனர். எனக்கு மன்னனை மணம் முடிக்க விருப்பம். ஆனால் இரண்டு நிபந்தனைக்குடன்படவேண்டும்.

அதாவது - முதல்: எனது வயதான தந்தையைப் பராமரிப்பதற்கு ஒரு தகுதிவாய்ந்தவரை நியமிக்கவேண்டும். இரண்டாவது: இப்போது யான் அணிந்துள்ள துணிகளைக் கொண்டுவரவும், தினமும் ஒருமணி நேரம் தனிமையாக ஒரு அறையில் இத்துணிகளை அணிந்து தனிமையாக இருக்கவிடவேண்டும். அமைச்சர்கள் அரசனுக்கு அணங்கின் நிபந்தனைகளைக் கூறினர். அரசனும் ஆகட்டும் என்றான்.

விவாகம் மிகவும் டாம்பீகமாக நிறைவேறிற்று. அரசியாக அமர்ந்து ஆற்றவேண்டிய பணிவிடைகளை அரசன் வியக்குமாறு ஆற்றி வந்தாள். எல்லோர்மீதும் அன்பும், ஆதரவும், இரக்கமும் காட்டி வந்தாள். தான் எடுத்த சத்தியப்பிரமாணப்படி தினமும் காட்டுடையை உடுத்துத் தவறாமல் தனி அறையில் ஒரு மணி நேரம் தியானத்திலமர்ந்து வருவாளாயினள். நாளடைவில் இவளுக்கு ஒரு பெண் மகவு பிறந்தாள். நாட்டுப் பிரசைகளுக்குச் செய்தி காதிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுவிட்டது. காட்டில் வளர்ந்த காரிகையின் கருவில் கனிந்த மகவு முடிக்கு வாரிசு ஆவது எங்ஙனம்? முடியாது என்றனர். அரசனிடம் வந்து "அக்குழந்தையைக் கொன்றுவிடுவது புத்தி'' எனக் கூறினூர்கள். அரசன் இக்கொடுமை நிறைந்த செய்தியை அரசிக்கு அறிவித்தான். மிகவும் சந்தோஷமாகக் குழந்தையை அவ்வாறே செய்யுங்கள் என்று கூறிக் கொடுத்தாள். அக் குழந்தையைக் காட்டுக்குள் எடுத்துச்சென்று கொன்றுவிடும்படி இருவரிடம் கட்டளை பிறப்பித் தான் அரசன். அக்குழந்தையின் அழகிலும். களங்கமற்ற முகத்தின் ஒளியிலும் ஈர்க்கப்பட்ட வர்களாய்க் குழந்தைக்கு ஒரு விக்கினமும் செய் யாது பூமித்தாயிடம் ஒப்படைத்துவிட்டுத் திரும்பிவிட்டனர்.

அரண்மனை சென்று அரசனிடம் அக்குழந் தையைக் கொன்றுவிட்டதாகப் பொய் கூறினூர் கள். அந்த வழியால் சென்ற வேற்றூர் அரசன் ஒருவன் அக்குழந்தையைக் கண்டு காதலுற்று எடுத்துத் தனது மனைவியிடம் கொடுத்தான். மகவில்லை என்று மனம் வருந்தியிருந்த மனைவி மனம் மகிழ்ந்தாள்.

இரண்டு வருடங்களுக்குப் பின்பு அரசிக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. மீண்டும் பிரசை கள் பழைய பல்லவியையே பாடினர். அரசி மீண்டும் தனது செல்வக் குழந்தையைத் தூக்கிச் சந்தோஷமாகக் கொடுத்துவிட்டாள். முந்திய பெண் குழந்தையை எவ்வாறு செய்தார்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே இம்மகவையும் காட்டுக்குள் பூமா தேவியின் அரவணைப்பில் வைத்துவிட்டுக் கொலை செய்துவிட்டோம் என்று கூறிப் பொய் புனைந்தார்கள். முந்திய பெண் குழந்தையைக் கண்டெடுத்த அதே அரசன் அவ்வழியால் ஏகும்போது இக்குழந்தையையும் கண்டு ஆசையுடன் எடுத்து அரண்மனைக்குக் கொண்டு தன் அரசியிடம் தந்தான். சில காலத்தின் பின் தபசிப் பெண்ணான அரசிக்கு மீண்டும் ஒரு பெண் குழந்தை பிறக்கவும் அம்மகவையும் அடவியில் விட அதே அரசன் அப்பெண் குழந்தையையும் தனது அரண்மனைக்கு எடுத்துச் சென்று மூன்று குழந்தைகளையும் வேற்றுமை பாராட்டாது தமது குழந்தைகளாகப் பாவித்து வளர்த்து வரலானான்.

இப்போது பிரஜைகள் அரசனைப் பார்த்து "உமது இராஜதானிக்கு ஒரு வாரிசு இல்லாமல் இருப்பது முறையில்லை. இப்போது இருக்கும் காட்டு அரசியை மீண்டும் காட்டுக்கு அனுப்பி விட்டு வேற்று நாட்டு அரசகுமாரியை மணப்பதுவே முறை" என முறையிட்டனர். அரசனும் இச் செய்தியைத் தனது அரசியிடம் கூறினான். மிகவும் குதூகலமாக இச்செய்தியை அவள் வரவேற்றதோடமையாது தான் வரும் போது கொண்டுவந்த ஆடைகளையும் எடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்று தனது தந்தையை அன்புடன் ஆதரித்து ஊஞ்சலில் இருத்தி ஆட்டித் தனது வாழ்க்கையை நடாத்தலானாள். அவள் எப்போதும் உள்ள மாதிரிச் சந்தோஷ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவே இருந்தாள். நடந்தன எல்லாம் ஒரு கனவு என்றும் ஒன்றும் நடவாத மாதிரி வெறுப்பு விருப்பில்லாது வாழ்ந்து வந்தாள்.

சில வருடங்கள் உருண்டோடின. காட்டுக்குத் தன் மனைவியை அனுப்பிய அரசன் அடுத்த நாட்டரசனின் மகளை விவாகம் செய்யத் தீர்மானித்தான். விவாக ஒப்பந்தம் செய்யப்பட்டு விட்டது. வீட்டில் விவாகத்துக்குத் தேவையான ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு ஒரு பெண்ணும் இல்லாதபடியினால், காட்டுக்கு அனுப்பிய மனைவியை அழையுங்கள் என்று நாட்டு மக்கள் சொன்னார்கள். வீட்டு விவகாரங்களை மிகவும் புத்திசாலித்தனமாகச் செய்வாள் என்பது அவர்களுக்குத் தெரியும். தூதர்களைக் காட்டுக்கு அரசன் அனுப்பினான். அம்மாதும் முழுத்திருப்தியுடன் தனது புருஷனின் விவாகத்துக்கான ஒழுங்குகளை மேற்பார்வை பார்த்தாள்.

விவாகம் நடைபெறுவதற்கு முன்பு பெண் வீட்டு அரசன் விவாகத்துக்குப் பிரசன்னமாக இருந்த பெரியோர்கள், மந்திரி பிரதானிகள், மற்றும் சபையோர்களைப் பார்த்து, "குடும்ப சரித்திரம் சொல்லவேண்டியது எனது தலையாய கடமையாக இருக்கின்றது. இங்கு மணமகளாக வந்துள்ள பெண்பிள்ளையும் மற்றும் இரு பிள்ளைகளும் எனது பிள்ளைகளன்று. இவர்கள் மூவரையும் முறையே அடுத்த அடவியில் அனாதரவாக இருப்பதனைக் கண்டு ஆண்டவன் அருளே என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணி எடுத்து அவர்களை எனது அரசி அன்புடன் வளர்த்தாள்" என்றான்.

மணவாளனாக வந்த மன்னனுடைய மனதில் சந்தேகம் தோன்றியது. தான் விவாகம் செய்ய இருக்கும் பெண் ஒருவேளை தனது மகளாக இருக்கலாமோ என்று, அத்தோடு மற்று இருவரும் அடுத்த இரு மக்களாகவும் இருக்கலாம் என்று யோசிக்கலானான். தனது மூன்று பிள்ளைகளையும் கொலை செய்யும் வண்ணம் ஏவப்பட்ட இருவரையும் அழைப்பித்தான். அவர்களைக் கேள்வி கேட்டதும் உண்மையைச் சொல்லிக் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிக்குமாறு மன்றாடினார்கள். மிகவும் கவனமாக ஆராய்ந்த பின்பு குறிப்பிட்ட மூன்று மக்களும் தம் மக்களெனத் தீர்மானித்தான்.

உண்மையாக மகளைத் தகப்பன் தாரமாக ஏற்பது எவ்வாறு? ஆகவே விவாகம் அப்படியே கைவிடப்பட்டுவிட்டது. யாவரும் இம் முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். மக்கள் யாவரும் அரசியின் வாழ்க்கையில் நிகழ்ந்த கொடூரமான சம்பவங்கள் யாவற்றையும் அமைதியான முறையில் வரவேற்றுத் தாங்கிய உதார குணங்களை வாயாரப் புகழ்ந்து மெச்சினார்கள். அவர்கள் யாவரும் அரசியை மீண்டும் காட்டுக்குச் செல்ல வேண்டாமென்றும் நாட்டின் அரசியாக இருக்க வேண்டும் என்றும் மன்றாடிக் கேட்டுக்கொண்டனர். ஆகட்டும் என்று அமைதியாக ஒப்புக் கொண்டனள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசி எவ்வாறு பற்றற்ற முறையில் வாழ்ந்து காட்டியுள்ளார்! அது எவ்வாறெனில் மிகவும் இளமையிலிருந்து உலகைத் துறந்த ஒரு தபசியினால், உலக வாடை சற்றும் வீசாத வகையில் வளர்க்கப்பட்டபடியினால் என்க! அதனால் உலக இன்பங்களிலும் உயர்ந்த நிலைகளிலும் ஒரு பற்று, விருப்பம், இல்லாத இயல்பு நிரந்தரமாக நிலைத்துவிட்டது.

'நீ உண்மையாகச் சீவிக்க வேண்டுமெனில் ஆதி அந்தமில்லாதவரோடு சீவிக்க வேண்டும்'.

---

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

மனைவியின் சிறந்த பண்பே இல்வாழ்வுக்கு மங்கலம். நல்ல மக்கட்பேறும் உடையதாய் இருத்தல், அதற்கு நல்ல அணிகலன் ஆகும்.

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

தம்மைக் காட்டிலும், தம் மக்கள் அறிவுடையவராக விளக்கம் பெறுதல், பெற்றோருக்கு மட்டுமல்லாமல், பெரிய உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் இனிமையானது ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# நீ சரீரியன்று

கிரேக்க தேசத்து ஞானி ஒருவர் இருந்தார். அவரது பெயர் எக்பிக்றெற்றஸ். ரோமாபுரி மன்னரின் ஆட்சியில் அவர் அடிமையாக்கப்பட்டு அவரது எசமானரால் மிகவும் அற்பமான பிழைக்குக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். அதிகமாக எந்த நாளும் இவ்வாறுக இந்த ஞானியார் தண்டிக்கப்பட்டு வந்தார். ஒருநாள் அவரது எசமான், ஏதோ ஒரு சிறு குற்றத்துக்கு அவரை மிகவும் வலிமையாக அடித்து அதன் காரணமாகக் கால் ஒடிந்து நொண்டியாகி விட்டார்.

சில நாட்கள் சென்ற பின்பு எக்பிக்றெற்றஸின் நண்பன் ஒருவன் அவரைப் பார்க்க வந்தபோது அவர் நொண்டிக்கொண்டு நிற்பதைக் கண்டு என்ன நேர்ந்தது என்று வினவினுர். அதற்கு ஞானியார் ஒரு விநோதமான வகையில் பதில் தந்தார்.

"நான் நொண்டியல்ல! ஆனுல் எனது கால்கள் தான் நொண்டி" அவர் தன்னை வேருகவும் தனது உடலை வேருகவும் நோக்கும் பான்மையாளராக வாழ்ந்து காட்டினுர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## பெற்றோர்களுக்குத் தொண்டு செய்

கிருஷ்ணபரமாத்மாவின் பிரதி ரூபமாயுள்ள விதோபா எழுந்தருளியுள்ள ஆலயம் பண்டரிபுரத்திலுண்டு. இங்கு ஆர்வமும் பக்தியும் நிறைந்த சீடன் ஒருவன் இருந்தான். இவன் தனது பெற்றோர்களிடம் அதிகம் அன்பு நிறைந்தவனாக இருந்தான். ஒருமுறை தனது பெற்றோர்களுக்குப் பணிவிடை செய்துகொண் டிருக்கும்போது விதோபா வந்து இவனை அழைத்தார்.

உடனே, "தேவாதி தேவா! சற்றுத் தாமதியுங்கள். எனது பெற்றோர்களுக்குச் செய்யும் தொண்டுகள் முடிந்ததும் வந்துவிடுகின்றேன்" என்று கூறினான். அவ்வாறு கூறி விதோபாவைத் தங்க வைத்துவிட்டான். எல்லாக் கடமைகளிலும் பார்க்கத் தங்கள் பெற்றோர்களுக்குச் செய்யும் கடமைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை என்பது இதனால் புலனாகின்றது.

---

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**
**அன்பி லதனை அறம.**

எலும்பில்லாத புழுப் பூச்சிகளை வெயில் காய்ந்து வருத்துவது போல அன்பில்லாதவனை அறமானது காய்ந்து வருத்தச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 இறை நாமத்தின் சக்தி

ஒரு பெண் அடியாள் தனது குருவுக்குத் தொண்டு செய்து வந்தாள். குரு எவ்வாறு சிரத்தையுடன் இறை நாமத்தை உச்சரிப்பாரோ அவ்வளவு பக்தியுடன் இப்பெண் அடியாளும் ஜெபித்து வரலானாள். பசுவின் சாணியைப் பிடித்துக் காயவைத்து விறகாகப் பாவிப்பதற்குத் தினமும் வேலை செய்வாள். இவ்வாறு செய்து வெயிலில் காய்வதற்காக ஒருநாள் வைத்தாள். அயலில் உள்ள இன்னும் ஒரு பெண் இதே வண்ணம் சாணி றொட்டிகளைத் தப்பி, அடியாளின் சாணி உருண்டைகளுக்கு அருகில் காயவைத்தாள். ஏதோ ஒருவிதமாக இருவரினது சாணி றொட்டிகளும் கலந்துவிட்டன. அயலவள் தனக்குரிய சாணி றொட்டிகளோடு அடியவளுடைய றொட்டிகளிற் சிலவற்றையும் எடுக்க எத்தனித்தாள். இதனைக் கேள்வியுற்ற குருவானவர், "எனது அடியாள் உருட்டிய சாணி உருண்டைகளை மிகவும் இலகுவாகக் கண்டு பிடிக்க முடியும் என்று கூறிவிட்டு ஒவ்வொரு சாணி றொட்டியையும் எடுத்துத் தனது காதருகே வைத்தார். சிலவற்றில் இறைவனது நாமம் ஒலிப்பது கேட்டது. எதனிடம் இறை நாமம் ஒலிப்பது கேட்க முடியுமோ அவைகளை வேருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறர். இவ்விதம் இரு பெண்களுக்குமிடையே வந்த பிணக்கை நீக்கிவிட்டார்.

என்ன விந்தை; பெண் அடியாள் நின்றும், இருந்தும், கிடந்தும் எத்தொழிலைச் செய்தாலும் இறை நாமத்தை இடைவிடாது உச்சரித்த வண்ணமாகவே இருப்பதனால் அச்சொற்களைச் சாணியின் ஈரலிப்புத் தன்மை ஈர்த்து அது காரணமாக அச்சொற்கள் எதிரொலித்த வண்ணமிருந்தன.

---

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

*விருந்தினரைப் போற்றியபின் எஞ்சியதைத் தான் உண்ணுகிறவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?*

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

*நன்மையானவைகளையே விரும்பி, இனிய சொற்களையும் சொல்லிவந்தால், அதனால் பாவங்கள் போக, அறம் வளர்ந்து பெருகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 சிடனுகும் இறைவன்

பகவத்கீதை கூறுவது யாது? ஞானநிலை அடைந்தவன், அல்லது மல பந்தங்களிலிருந்து விடுபட்ட ஒரு பக்தன் — இவன் உண்மையாகக் கடவுளின் இயல்புகள் வரப்பெற்றவனாக — கடவுளாக மாறுகின்றான். இவ்வித உயர்ந்த நிலையை அடைந்தவர்களை எவ்வாறு அனுசரணை செய்து உபகரித்துள்ளார் என்பதனைக் கிருஷ்ண பரமாத்மா காட்டியுள்ளார்.

அன்புக்கெளிய சுதாமா துவாரகைக்குச் சென்று கிருஷ்ணபரமாத்மாவை வழிபாடு செய்யக் காத்திருந்தார். இதனை அறிந்த கிருஷ்ண பரமாத்மா, உடனே சுதாமாவை வரவழைத்துத் தமது சிங்காதனத்தமர்த்தி வழிபாடியற்றினார்.

வேறு ஒரு தருணம் நாரதமாமுனிவர் கிருஷ்ணபரமாத்மாவைத் துவாரகையில் வழிபாடு புரிவதற்காகச் சென்றார். வாசலில் அவர் சென்றதும் வழிகாப்போன் முனிபுங்கவரை நோக்கி "கிருஷ்ணபரமாத்மா தரிசனத்துக்கு இப்போது கிட்டார்" எனக் கூறினார்.

நாரதமுனிவர் வழிகாப்போனிடம் விளக்கம் கேட்டபோது அவன் இவ்வாறு கூறினான்:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிருஷ்ணபரமாத்மா தனது வழமையான வழி பாட்டில் ஈடுபட்டுள்ளார்" என்றான். இதனைக் கேட்டதும் நாரத முனிவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் யாரைத்தான் வழிபாடு புரி கின்றார்! அவர் தாமே ஒப்புவமையில்லாத கட வுள்! முனிபுங்கவர் இரகசியமாக உள்ளே சென்று கண்ணபிரான் வழிபாடுபுரியும் அறையில் உள்ள ஒரு பகுதியைச் சற்று அவதானித்தார். அங்கே பிரகலாதனன், த்ரௌபதி, வால்மீகி, நாரதர் இன்னும் அநேக விக்கிரகங்களை வைத்து வழி பாடு செய்துகொண்டு இருந்தார். நாரதர் உட் சென்று கண்ணபிரானை வணங்கி, "நீர் இங்கே என்ன செய்துகொண்டு இருந்தீர்?" என்று கேட் டார். "இவர்கள் யாவரும் ஆண்டவனின் வேறு பிரதிமைகள். அவர்களை நான் இறைஞ்சுகின் றேன்" என்று கூறினார்.

---

உதவி வரைத்தன்று உதவி – உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து.

உதவியானது அதன் அளவையே எல்லையாக உடை யது அன்று. உதவி செய்யப்பட்டவரின் பண்பையே தனக்கு அளவாக உடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## சும்மா இருப்பது சுகமானதன்று

நாடோடியாக அலையும் சாது ஒருவர், ஒரு முறை ஒரு கிராமத்தை அடைந்து அங்குள்ள ஆலயத்தில் ஒருசில நாட்கள் தங்கி விட்டார். ஆலயத்தில் உள்ள மண்டபம் ஒன்றில் அமைதியாக அமர்ந்தார். வெளியே போவது கிடையாது. எப்போதும் அதே இடம்தான். ஆலயத்தில் உள்ள பூசாரியார், இந்தச் சாதுவின் சாந்தத்தையும் அமைதியான நடவடிக்கையையும் கவனித்து, ஆண்டவனுக்கு நிவேதிக்கும் நைவேத்தியத்தில், பூசைக்குப் பின்பு ஒரு பகுதியைச் சாதுவின் மதிய போசனமாக இருக்கட்டும் என எண்ணிக்கொண்டு கொடுத்து வந்தார். இவ்வாறு ஒரு நாள் ஒரு உணவு என உண்டு இருப்பார். இவ்வாறாக நாட்கள் பல உருண்டன. வழக்கமாகச் சோதனை செய்யும் ஆலய பரிபாலன நிர்வாகஸ்தர் அன்றொரு நாள் ஆலயத்துக்கு வந்தார். பூசாரியார் அங்கமர்ந்திருந்த சாமியாருக்கு நைவேத்தியத்தில் ஒரு பகுதியைக் கொடுப்பதைப் பார்த்து விட்டார். மனேஜாகிய நிர்வாகஸ்தருக்குப் பூசாரியாரின் செய்கை மனதுக்குப் பிடிக்கவில்லை. பூசாரியாரை நோக்கி, "இந்தச் சோம்பித் திரியும் மனிதனுக்கு எதற்காக ஊட்டுகின்றீர். மந்தம் மூடியவனாக, ஒன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாதவனுக அசையாமல் ஆடாமல் இருக்கிருனே! ஏன் உணவு? இவ்விதமானவர்களுக்கு இலவசமாக உணவு இடுவது பாவச் செயலாகும். இனிமேல் இவனுக்கு இவ்வாறு செய்ய வேண்டாம்" என்று உத்தரவு பிறப்பித்தான்.

பூசாரி கீழ்ப்படிந்தார். சாது இதனைப் பற்றி அதிக சிரத்தை எடுக்கவில்லை. மதிய வேளைகளில் இரண்டொரு வீடுகளுக்குச் சென்று தனது பசியைப் போக்கிவிட்டு அரை மணி நேரத்தில் ஆலயத்துக்கு வந்து அதே இடத்தில் ஆற அமர இருந்துவிடுவார். மறுநாள் வரை அந்த மாதிரியே இருந்து கொள்வார். இவ்வாறு ஆலயத்துள் இருந்துவரலானுர்.

ஒரு கிழமை கழிந்தது. கோவில் மனேஜர் ஆலயத்துக்கு வந்தார். சாது முன்பு இருந்த இடத்திலேயே இன்பகரமான வதனத்துடன் பேசாது அமர்ந்திருந்தார். கோவிலிலிருந்து ஒரு விதமான உணவும் பெறுவதில்லை யென்றும் கிராமத்துள் சென்று பிச்சையேற்றுண்டு பசி போக்குகின்ருர் என்றும் பூசாரி பகரக் கேட்டறிந்து கொண்டார் மனேஜர்.

இந்தச் சாதுவின்மீது மனேஜருக்குக் கவனம் ஈர்க்க ஆரம்பித்துவிட்டது. இவர் எதற்காக ஒரே இடத்தில் நாள் முற்றும் ஒரு வேலையும் செய்யாது இருக்கின்ருர். இதனைச் சாதுவிடம் கேட்டுவிட வேண்டுமென எண்ணி அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்டை சென்று "சாதுஜி! ஒரு இடமும் செல்லாது இவ்வாறு இருப்பதின் இரகசியம் யாதோ? கூறுக" என்றார்.

சாது கூறினார். "நான் உமது வினாவுக்கு ஐந்து நிமிடத்துள் விடை பகர்வேன். அதுவரை பொறுத்துக் கொள்ளவும்" என்றார். மனேஜர் அவ்வாறு இருந்தார். ஐந்து நிமிடம் சென்று விட்டது. சாதுவிடமிருந்து பதில் இல்லை. மனேஜர் ஞாபகப்படுத்தினார். சாது மீண்டும் கூறினார். சகோதர! இன்னுமொரு ஐந்து நிமிடம் இருப்பீரா? பதில் தர" எனக் கேட்டார். சிறிது அமைதி இழந்தவராக, சரி வேண்டுமாகில் ஒரு ஐந்து நிமிடம் தாமதிக்கின்றேன். அதற்குமேல் இல்லை" என்றார்.

பின்பும் ஐந்து நிமிடம் பறந்தன. மீண்டும் சாது அமைதியில் ஆழ்ந்தார். மனேஜர் சாதுவைக் கடுமையாகப் பார்த்து, "இது என்ன சாதுஜி! பத்து நிமிடங்கள் கழிந்து விட்டன. பதிலைக் காணோமே?" என்றார். சாது மீண்டும் மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும், "சகோதர! இன்னுமொரு ஐந்து நிமிடம் தாமதித்தீரானால் பதில் கூறிவிடுவேன்" என்றார். மனேஜர் பொறுமையிழந்து பரபரப்படையலானார். மணிக்கூட்டைக் கையில் எடுத்துக்கொண்டு சாதுவைப் பார்த்து முடிவாகக் கூறினார். "சாதுஜி! இங்கே பாரும். எனது வேலைகள் யாவும் தாமதமாகின்றன. உம்மைப் போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை வீணுக்க இயலாது. உமது பதிலுக்குக் கடைசியாக ஐந்து நிமிடம் தருகின்றேன். எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யாதுவிடின் இந்த இடத்தில் நிற்க மாட்டேன்" என்றுர்.

மனேஜர் ஐந்து நிமிடம் நின்றுர். பதில் வரவில்லை. சிறிது கோபமாக, மனத்தில் முணு முணுத்த வண்ணம் ஆலயத்தை விட்டுச் சென்றுவிட்டார். ஒருசில யார் தூரம் சென்று யோசிக்கலானுர். "என்னுல் ஒரு பதினைந்து நிமிடம் சும்மா இருக்க இயலவில்லை. இந்தச் சாதுவோ இதே இடத்தில் தொடர்ந்து இருபத்துநான்கு மணி நேரமாக – ஒருசிறு இடைவேளை தவிர– இருப்பது என்பது அதிசயமே! ஒரு பிரமாண்டமான சக்தி மனதை அடக்க இவரிடம் இருக்கின்றது" என்று எண்ணியவாறு, சாதுவிடம் அவருக்கு ஒரு அபூர்வமான பயபக்தி வளர்ந்துவிட்டது. ஆலயத்துக்கு மீண்டும் வந்து, பூசாரியை அழைத்து, "இந்தச் சாது இவ்வாலயத்தில் தங்கும்வரை, நீர் அவருக்கு முன் தந்த மாதிரி நைவேத்தியம் கொடுத்துவாரும்" எனக் கட்டளையிட்டார். சாதுவைப் பார்த்து மிகவும் தாழ்ந்து சிரம் காட்டி வணங்கிய பின்பு சென்று விட்டார்.

உண்மையில், ஒரே இடத்தில் திடமாக இருப்பது ஒரு வேடிக்கையான விடயமன்று. ஆண்டவன்மீது மனதை ஆளப் பதித்த அபூர்வ ஆன்மாக்களுக்கன்றி இது கைவரும் சாதனையன்று.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 இறைவனிடம் ஒப்படைத்துவிடு

ஒரு வீட்டிலுள்ள குசினியில் ஒரு முட்டிக்குள் தயிர் இருந்தது. முட்டி மூடப்படாதிருந்தது. இரு தவளைகள்— ஒன்று பெரியது, மற்றது சிறியது. இவை இரண்டும் தத்திக்கொண்டு செல்லும்போது தயிர் முட்டிக்குள் விழுந்து விட்டன. இரண்டும் பெரும்பாடு பட்டன வெளியில் வருவதற்கு. ஆனால் வர முடியவில்லை. பெரிய தவளை நம்பிக்கை இழந்து அமைதியாகக் கீழே சென்று இறந்து விட்டது. சிறிய தவளை இலகுவில் இறக்க விரும்பவில்லை. மணித்தியாலக் கணக்காக வெளியேறுவதற்குப் பிரயத்தனப்பட்டது. அவ்வாறு பிரயத்தனப்பட்டுக் களைத்து விட்டது பேசாமல் இருந்து விட்டது. இந்தத் தவளையின் இடைவிடாத முயற்சியின் விளைவால் தயிர் கரைக்கப்பட்டு அதன் மேற் பரப்பில் வெண்ணெய் திரண்டு காணப்பட்டது. தவளையும் பேசாது இருக்கவும் வெண்ணெய் திரண்டு ஓர் உருண்டையாகத் தோற்றம் அளித்தது. தவளைக்கு வெளியே தாவுவதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகி விட்டது.

இந்தக் கதையிலிருந்து தெரிவது என்ன? உலக சம்சாரங்களில் இருந்து விடுபடுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மார்க்கம்-சாதனை-போராடுதல் அவசியம். இறைவனை அடைவதற்கு இடையறுது முயற்சி செய். இந்த முயற்சியில் நீ களைப்புற்ருல் அவரது பாதத்தைப் பற்றி, சும்மா இருந்து விடு இவர் தாஞகவே வந்து உன்னைக் கை தூக்கு வார்.

---

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்ருேர்க்கு அணி.

தன்னைச் சமஞகச் செய்து கொண்டு பொருளைச் சீர் தூக்கிக் காட்டும் துலாக்கோல் போல அமைந்து ஒரு பக்கம் சாயாதிருத்தல் சான்ருேர்க்கு அழகாகும்.

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

சினத்தைக் காத்து, கல்வி கற்று, அடங்கி வாழ்தலையும் மற்கொள்பவனின் செவ்வியை, அவன் வழியில் சென்று அறமானது பார்த்திருக்கும்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

ஒழுக்கம் எப்போதும் மேன்மையைத் தருவதனுல், அந்த ஒழுக்கமே உயிரினும் சான்ருேரால் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## நிந்தித்தவனையும் நியாயமாக நடத்து

புத்த பகவான் நிர்வாண நிலை பெய்திய காரணத்தால் நல்லவன், பொல்லாதவன் என்ற பேதமில்லாது யாவரையும் ஒரே தன்மைத் தாய் அன்பும் கருணையும் கொண்டு நடாத்தும் முறையினுல் உலகத்துக்கு அவர் ஒரு உயர்ந்த உதாரண புருஷனுகத் திகழுகின்ருர்.

தர்மத்தைப் போதனை செய்வதற்காக ஒரு கிராமத்துக்குச் சென்ருர். அக்கிராமவாசிகளுள் ஒருவனுக்கு அவருடைய போதனையில் நாட்ட மில்லாதிருந்தது. புத்த பகவானை அண்டிக் கேலி செய்து தூஷித்து விட்டான். புத்த பகவான் புன்சிரிப்புச் செய்து அவன் மீது இரக்கம் காட் டினுர். தமக்கே உரிய சாந்த நிலையில் அவனைப் பார்த்து, "சிநேகித! உனது தூஷணையும் ஏச்சும் கேலியும் என்னை ஒரு விதத்திலும் பாதிக் காது. உதாரணத்துக்கு நீர் ஒரு பழுத்த கனியை ஒருவருக்குக் கொடுக்கின்றீர். அதனை உம்மிடம் இருந்து பெறுவதற்கு மறுப்புத் தெரிவிக்கின்ருர். அப்போது அப்பழம் எவரிடம் போகும்?" என்று கேட்டார். "ஓ! இது இலேசான கேள்வி! அப் பழம் என்னிடமே இருக்கும்" என்ருன் கிராம வாசி. புத்த பகவான் கூறினுர் "சிநேகித!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை வாயாரத் திட்டினீரே! வைதீரே! அவைகளை நான் ஏற்கவில்லை'' என்ருர்.

கிராமவாசி உண்மை தெளிந்தான். புத்த பகவானின் புனித பாதமலரில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டான். ஒருவரின் இதயத்தில் இரக்கம், பிழை பொறுத்தல், சாந்தம் முதலியன இருக்கின்றனவோ இவரிடம் இறைவன் உறைகின்ருன்.

---

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

ஒருவனது செல்வவளம் குறையாமல் இருப்பதற்குரிய வழி யாதென்ருல், அவன் பிறன் பொருளைக் கவர விரும்பாதிருத்தலே ஆகும்.

களவினுல் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

களவாலே வந்தடையும் செல்வமானது அளவு கடந்து பெருகுவது போலவே, எதிர்பாராமல், எல்லாம், வந்தது போல விரைந்து போய் விடும்.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

சொன்ஞல், பயன் தருகின்ற சொற்களையே யாவரும் சொல்லுக: பயனில்லாத சொற்களை ஒருபோதுமே எவரும் சொல்லாதிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 எந்நாளும் ஏகனேடிரு

ஒருமுறை ஒரு சந்நியாசி ஒரு சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தார். விருந்தையில் இருந்து திரி கல்லில் மா திரித்துக்கொண்டிருந்தான் ஒருவன். அரிசித் துகள் எவ்வாறு திரி கல்லுக்குள் அகப்பட்டு நெரிந்து இடிந்து துகளாகித்தூளாகின்றதோ அதே போன்று தானும் இப்பூவுலகாகிய திரிகைக் கல்லில் அகப்பட்டுப் பெரும் சிரமத்துள் ஆகின்ருன் என்று சிந்திக்க ஆரம்பித்தான். இச்சிந்தனையின் வேகம் தலைப்பட அது காரணமாக அழ ஆரம்பித்து விட்டான். அப்போதுதான் முன் கூறப்பட்ட சந்நியாசியார் அவன் அழுவதை அவதானித்தார். உடன் அவன் அருகில் சென்று "சகோதரரே எதற்காக அழுகின்ருய்?" என்று விசாரித்தார். இந்தத் திரிகல்லில் அகப்பட்டு நெரியும் அரிசிப் பொரி போன்று யானும் இவ்வுலகில் அகப்பட்டுக் கொண்டேன். அதனை நினைத்து அழுகின்றேன்" என்ருன்.

சந்நியாசியார் அந்த மனிதனை நோக்கி, "திரிகல்லின் மேலே உள்ள சுழற்றும் கல்லை எடுத்துவிட்டு நடுவில் உள்ள கட்டைக்கருகில் உள்ள உரிசிகளைக் கவனி. கட்டைக்கருகில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை அரிசிகளும் நெரிபடாமல், முழு அரிசி களாகவே இருக்கின்றன," இங்கே பார்! நீயும் இறைவனை—ஏகப்பொருளை—ஏகனை சதா நேரமும் மனதில் தியானித்தவண்ணம் இருந்தாயானல் உலக வலைக்குள் சிக்கித் நசிக்கமாட்டாய். இறை வனுக்கே ஆட்பட்டு விடுவாய்! அவ்வாறு வாழ்ந்தால் திரிகல்லின் கட்டைக்கருகில் காணப் படும் அரிசிமாதிரி நீயும் காப்பாற்றப்படுவாய். உலகில் சம்பவிக்கும் துரதிஷ்டங்கள் வந்து உன் னைப் பற்ருது" என்ருர்.

பகை பாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்.

பகை, பாவம், அச்சம், பழி என நான்கு தீமைகளும் பிறன் மனைவியை நாடிச் செல்லுபவனிடம் எப்போதும் நீங்காதனவாம்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

தீங்கு செய்தவர்களைத் தண்டித்தவர்களுக்கு அன்று ஒரு நாளைக்கே இன்பம். ஆனல், பொறுத்தவர்க்கோ உல கம் அழியும்வரை புகழ் உண்டு.

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

பொருமை என்னும் ஒப்பற்ற கொடிய "பாவி" ஒரு வனது செல்வத்தையும் கெடுத்து, அவனைத் தீய வழியிலும் செல்லும்படி செலுத்தி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 எல்லாவற்றிலும் இறைவனைக் காண்க

ஸ்ரீராமபிரானுக்கும் இராவணேஸ்வரனுக்கும் கடும் போர் நடந்தபோது, வானர சேனைகள், இராவணனுடைய வீரர்களால், ஒருக்கால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதனைக் கண்ணுற்ற ஸ்ரீ ராமபிரான், இந்த இடுக்கணில் இருந்து வானரங்களைக் காப்பாற்ற எண்ணினார். தமக்கே வாய்ந்த சக்தியினால் இரு அரங்கிலுமுள்ள படைகளைத் தமது சொரூபமாகத் தோற்றும்படி மாற்றி விட்டார்கள்.

வானரங்கள் யாவும் ஒருவரை ஒருவர் தாம் வழிபடும் தெய்வமான ஸ்ரீராமனைக் கண்டு உவகை பூத்து ஒருவரை ஒருவர் தழுவி ஆனந்தக் கூத்தாடினர். இதே போன்று இராவணப் படையினர் ஸ்ரீ ராமனைக் கண்டு ஆவேசங் கொண்டு ஒருவரை ஒருவர் உக்கிரமாகத் தாக்கிக் கொல்லத் தொடங்கி அதிகம் சேதத்துக்குள்ளாக்கிக் கொண்டனர்.

**வானரங்கள் போன்று, எங்கும் இறைவனைக் காணக்கூடிய மனப் பக்குவத்தை வருவித்துக் கொள்! மனதில் பயம் அகன்று விடும். உனது மனதில் இருந்து அன்பு அருவியாகி ஊற்றெடுக்கும் எல்லோரையும் ஒரேமாதிரி நேசிப்பாய்! ஆனந்த சாகரத்துள் மூழ்கித் திளைப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 அரசனின் அந்தரங்கம் அம்பலம்!

ஒரு அரசன் ராணியுடன் வாழ்ந்து வந்தார். அரசனின் மனைவி பயபக்தி நிரம்பிய பெண் எந்த நேரமும் இறைவனின் ஒப்பற்ற திருநாமத்தைச் சிந்தனையில் வைத்திருப்பார். எல்லா வகையிலும் ஆனந்தமாகவே காணப்பட்டார். தனது கணவனாகிய அரசன் ஆண்டவனிடத்து பக்தி சிரத்தையில்லாது வாணாளை வீணாக்குகின்றாரே என்பது அரசிக்குக் கவலையைத் தந்தது. அரசனும் தம்மைப் போன்று ஆண்டவனிடத்து பக்தி செலுத்துபவராக இருக்கவேண்டுமென்று மிகவும் விரும்பினார். அரசன் ஒரு பொழுதாவது இறைவனது திருநாமத்தை உச்சரித்ததையோ அல்லது தேவார - திருவாசகத்தை ஓதுவதையோ காணவுமில்லை, கேட்கவுமில்லை.

ஒரு நடுநிசிப் போழ்தில், அரசி நித்திரையிலிருந்து திடுக்குற்று எழுந்தபோது "ராம்! ராம்!" என்ற நாத ஓசை இனிமையாகக் கேட்டது. அவ்வோசை வேறு ஒரு இடத்திலும் இருந்து வரவில்லை. தமது கணவனாகிய அரசனே நித்திரையில் வாய் அலட்டியது என்பதனை அறிந்தார். இராணியாருக்கு இது பெரிய இதமாகவும் இன்பமான ஆச்சரியமாகவும் இருந்தது. ஆழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரையின்போது அரசன் அரனின் நாமத்தை உச்சரிப்பது ஒரு சாதாரண மகிழ்ச்சியல்லவே அரசிக்கு. இந்த மகிழ்ச்சிகரமான சம்பவத்தை ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று மறுநாள் ஆயத்தம் செய்தார். ஒரு விசேடமு மில்லாது இருந்தாற்போன்று தனது மாளிகை யில் ஒரு விசேட வைபவத்திற்கு ஒழுங்கு எதற் காகச் செய்யப்படுகின்றது என்று அரசன் உசா விஞன்.

"எனது வாழ்வில், சென்ற இரவு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய தின மாகும். ஏனெனில் இறைவன் நாமத்தை நீங்கள் இதுவரை நான் கேட்டு மகிழக்கூடியதாக நாவி ஞல் ஓதியதைக் கேட்டதுமில்லை. கண்டதுமில்லை! சென்ற இரவு நித்திரையின்போது ராமநாமத்தை அமைதியாக ஓதியதைக்கேட்டுப் பேரானந்தம் அடைந்தேன்" என்று இராணி அன்புடன் கூறி ஞள்.

"இதுவரை நாள் எவ்வளவு கட்டுப்பாட்டுடன் எனது ஆத்மீக வளர்ச்சியைப் பிறர் அறியா வண் ணம் பாதுகாத்து வந்துள்ளேன். இவ்வாறு நிகழ்ந்து விட்டதே என எண்ணிக் கவலையுறுகின்றேன்" என்று மிகவும் தாழ்மையுடன் தனது மனைவிக்குக் கூறிஞர்.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 விவேகம் - உண்மையான ஆலோசகன்

"தேகபுரி" என்ற இராஜதானியில், "மனம்" என்னும் அரசன் ஆண்டுவந்தான். இந்த அரசனின் அமைச்சனது பெயர் "விவேகி". அரசனுக்கு அதிகம் வேண்டிய ஆறு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் முறையே காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியம் என்ற நாமகரணம் பூண்டவர்களாக இருந்தனர். மனமாகிய அரசனும் அவனது சிநேகிதர்களும் உலகில் காணப்படும் சகல தீச்செயல்களிலும் அழுந்தி தேகபுரியாகிய இராஜதானியை மிகவும் இழிநிலைக்குள்ளாக்கி விட்டனர். விவேகி ஆகிய அமைச்சன் நேர்வழிகளை எடுத்துரைத்துப் புத்திமதி கூறினால், அவைகளைப் புறக்கணித்துவிட்டு அறுவர் புத்தியை மறுக்காது ஏற்று, அல்லும் பகலும் அலட்சிய வாழ்வு வாழலானான். ஒருமுறை அரசன் மதுபோதையில் வீதி ஓரத்தில் புரண்டபடி கிடந்தான். இன்னொரு தினம் அறிவற்ற அவல நிலையில் ஒரு கிடங்குக்குள் கிடந்தான். ஒவ்வொரு தருணமும் அரசனைக் காப்பாற்றியது அவனது அமைச்சனாகிய விவேகியே. நாளடைவில் தனது அமைச்சனின் அரிய புத்திமதிகளைக் கேட்டு நடவாத புத்தியீனத்தையும் தனது துன்மதி நிறைந்த நண்பர்களினால் நேர்ந்த அனர்த்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் எண்ணி எண்ணி வெட்கி உணரலானன். பல விசனங்களின் பின்பே இவ்வுணர்வு வரலாயிற்று. முடிவில் தனது கடந்த கால வாழ்க்கையை எண்ணி மனம் பச்சாத்தாபமடைந்து, தனது ஆறு நண்பர்களது உறவுக் கயிற்றை வெட்டி, தனது உயிர் போன்ற அமைச்சனது வழி செல்வது எனத் தீர்மானித்து விட்டான்.

மனமாகிய அரசன் தனது கடைசிக் காலத்தில் காவி உடை தரித்து, தலை மொட்டை தட்டி, உருத்திராட்சமாலை தரித்து, கமண்டலம் ஏந்தும் கையுடன், சாந்த நபியாகக் காட்சி தந்தார். நிழல் போன்று நீங்காது, உடன் திரிந்த அறுவர்களும் வாயில் கையை வைத்தபடி அரசனுக்கு அண்மையில் வருவதற்கும் அஞ்சினவர்களாய் நின்றனர். விவேகியாகிய அமைச்சனது சொற்கேட்டு நடக்கும்போது தங்களது செல்வாக்கு ஒரு செல்லாக் காசாகி விட்டது என்பதனைத் தாமாகவே உணர்ந்து விட்டனர்.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# அடியார்களது அன்பைப் பெறுவதற்கு இறைவன் காட்டும் தணியாத தாகம்

ஒரு பட்டினத்தில் ஒரு கசாப்புக் கடைக் காரன் இருந்தான். அவன் ஒரு சிறந்த பக்தன். தனது வேலைகளை ஆற்றும் நேரம் எல்லாம் – ஒவ்வொரு கணமும் - இறைவனது சிந்தனையாகவே இருப்பான். நாளடைவில் இறைச்சிக்காகக்கொலை செய்யுந் தொழிலையும் செய்யா தொழிந்தான். தனது சீவியத்தை நடாத்தும் பொருட்டுத் தொழில் வேண்டுமே! அதற்காக இறைச்சியை விலை கொடுத்து வாங்கிச் சிறு தொகை இலாபம் வைத்து விற்று வரலானான். விற்பனையாகும் இறைச்சியை விற்பதற்கு-நிறுத்து விற்பதற்கு- ஒரு வித கல்லைப் பாவித்து வரலானான். இந்தக் கல்லு ஒரு புனிதம் வாய்ந்த விக்கிரகம் பொறித்த கல்லு. இதனுடைய புனிதத் தன்மையைப் பற்றி இவன் அறியான். இவனுக்கு இந்தக் கல் எவ்வாறு தன்னிடம் வந்து அடைந்தது என்பதும் அறியான். வெகு காலமாக இக்கல்லை, நிறுப்பதற்கு ஒரு அளவு கோலாகப் பாவித்து வந்துள்ளான்

ஒரு நாள் ஒரு பிராமணன் அந்த கசாப்புக் கடைக்காரனுடைய வீதியால் செல்லும்போது அந்தப் புனிதம் வாய்ந்த கல்லை, தராசில் வைத்து நிறுப்பதனைக் கண்டு விட்டான். இயற்கையாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணனது நெஞ்சு மனவேதனைப்பட்டது. மிகவும் கலங்கினன். ஆச்சரியமுமடைந்தான். இறைச்சி விற்பவனிடம் சென்று அக்கல்லைச் சுத்தம் செய்து ஒரு முறை தன்னிடம் கொடுக்கும் வண்ணம் கேட்டுப் பெற்று, அதனை நன்கு ஆராய்ந்து பார்த்தான். அக்கல் ஒரு தெய்வீகக் கலை சம்பந்தமானதென்றும், எதற்காக இந்த அசுத்தமான தொழிலுக்குப் பாவிக்கின்றாய் என்று பிராமணன் கேட்டான். அதற்கு அந்த இறைச்சிக் கடைக்காரன் பிராமணனைப் பார்த்து, "அக்கல்லு புனிதத் தன்மையானது என்பது பற்றி ஒன்றும் அறியேன்" எனக் கூறினன். இக்கல் தெய்வமாகப் பாவித்து, மலர்களாலும், சந்தனச் சாந்தாலும் அர்ச்சித்துப் பூஜிக்கப்பட வேண்டியது என்று பிராமணன் கூறினன். அக்கல்லைத் தனக்குக் கொடுத்து விடு. மற்ற விக்கிரகங்களுடன் வைத்து வணங்க விரும்புகிறேன் என்று பிராமணன் கேட்கவே அவனும் மறுக்காது தந்துவிட்டான்.

பிராமணனும் அக்கல்லை அவ்விடமிருந்து எடுத்துச் சென்று தமது வழிபாடு நடத்தும் அறையில் வைத்துச் சேவித்து வரலானன். கல்லில் உறைந்து காட்சி கொடுத்து வந்த தெய்வத்திற்கு இவ்வாறு இடம் விட்டு இடம் பெயர்ந்தது விரும்பவில்லைப் போலும். இதுவரை பெற்ற அன்பும் ஆதரவும் இப்போதுள்ள பிராமணனுடைய வீட்டில் தான் அடையவில்லை என்பதனைக் கல்லில் நிறைந்த தெய்வம் உணர்ந்தது. அன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லா வழிபாட்டினால் விரக்தி அடைந்த தெய்வம் பிராமணனது கனவில் தோன்றி, "எம்மை இவ்விடம் எதற்காக எடுத்து வந்தாய்? இறைச்சி விற்பனையாளனது இல்லத்தில் இதுவரை நாள் எவ்வளவு ஆனந்தமாக வாழ்ந்துவந்தேன். உண்மையான பாசத்துடன் பழகினான். பரிசுத்தமான பாசுரங்களைப் பாடி என்னை மெதுவாக எடுத்துத் தராசில் வைத்து, எவ்வளவு பவுத்திரமாகப் பாவித்து வந்தான்! ஓ! அதி அற்புதமான பட்டுப் போன்ற கரங்கள் அவனது! அவனது பரிசம் எனக்கு எவ்வளவு ரம்மியமாக இருந்தது! அவனது இருதயம் பிரேமையால் நிரம்பியுள்ளது. எனது பெருமைகளைத் தனது வாடிக்கைக்காரர்களுக்கு எடுத்து உரைப்பான். ஆனால் நீயோ பெரிய விலை உயர்ந்த பூசைகள் புரிகின்றாய்! ஆனால் அன்பு என்ற அமிர்தம் மருந்துக்குமில்லை! தயவுசெய்து என்னை மீண்டும் அந்த இறைச்சி விற்பனை செய்பவனிடம் கொண்டு சென்று வைத்து விடு, நான் சந்தோஷமாக இருப்பேன்" எனக் கூறக் கேட்டான்.

இறைவன் உண்மையான அன்புக்குத் தாகம் கொள்வார். ஆடம்பரமான வழிபாடுகளும் கிரியைகளும் ஆண்டவனுக்குத் திருப்தி தருவதன்று! உண்மை அன்பும் பக்தியும் வேண்டுவது ஒன்றே எமது வழி என்பது புலனாகும்.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## அடியார் இடர் களையும் அரன்

பாஜ்ப்பூர் நாட்டின் நவாப்பின்கீழ் ஒரு வருமானவரி உத்தியோகத்தர், மங்கள வேதத்தாலுக்காப் பகுதியில் கடமை பார்த்துவந்தார். இவரது பெயர் தமாஜி. இவர் விதோபாவில் மிகவும் பிரீதி உடையவர். முந்திய காலத்தில் கிராமவாசிகளிடம் வருமான வரியாகத் தண்டங்களையே கிராம உத்தியோகத்தர்கள் வசூலித்துவந்தனர். அரிசி, கோதுமை ஆகிய பொருள்களைப் பெற்று, குதங்களில் சேமித்து வந்தனர். ஒரு முறை இந்தத் தாலுக்காவில் பஞ்சம் மக்கள் பசியால் வருந்தினர். அவர்கள் தமாஜியிடம் வந்து உதவி கோரினர். தம்மிடம் உள்ளதையும் கொடுத்து ஈற்றில் அரசாங்கக் குதங்களில் சேமித்து வைத்த தானியங்களையும் பசியால் வருந்துவோர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

தலைமைக் குமாஸ்தாவுக்குத் தமாஜியிடம் இதனால் பொருமை வந்து விட்டது. இவரை ஏதாவது சூழ்ச்சி செய்து வேலையிலிருந்து நீக்கி விட்டு அந்த இடத்தில் தான் அமர ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று யோசித்தான். ஆகவே பாஜ்பூர் நவாபுக்கு அரசாங்கக் குதத்தில் சேமிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ள தானியங்கள் முற்றையும் நாட்டு மக்களுக்கு இலவசமாக தமாஜி விநியோகித்து விட்டார் என்ற செய்தியை அனுப்பியிருந்தான். இச்செய்தி கிடைத்ததும் தமாஜியைப் பிடித்து வரும்படி தனது ஆட்களை நவாப் அனுப்பி வைத்தான். மங்கள வேததாலுக்காவுக்கு நவாப் பின் வீரர்கள் சென்றபோது தமாஜி கீர்த்தனை கள் பாடிக்கொண்டிருந்தார். அதனை நிறுத்தி விட்டுத் தங்கள் பின்னால் வருமாறு கூறினார் கள். தம்மைச் சூழ்ந்திருந்த மக்களிடம், நவாப் எம்மை வருமாறு அழைப்பதால் சென்று வரு வதாகக் கூறிவிட்டு வீரர்கள் பின்னாற் சென் றார்.

தமது சீடனை தமாஜியின் இக்கட்டான நிலையை உணர்ந்த விதோபா அவரைக் காப் பாற்றத் தீர்மானித்தார். உடனே விதோபா ஒரு பறையனது கோலந் தாங்கி, நவாப்புக்கு முன் சென்று, "அடியேன் தமாஜியின் ஊழியன். உங் களுக்கு வரவேண்டிய தானிய வகையால் வர வேண்டிய வரித் தொகையை என்மூலம் அனுப்பி வைத்துள்ளார்" என்று கூறிவிட்டு ஒரு சிறு முடிச்சை நவாப் முன் வைத்தார். "வரியாக எனக்கு வரவேண்டிய தொகை ஒரு கோடி ரூபாவல்லவா? எவ்வாறு அதனைக் கொடுக்கப் போகின்றாய்? இவ்வளவு தொகை எவ்வாறு கிடைக்கும்?" என்று கேட்டார். "உங்களுக்குத் தரவேண்டிய அத்தொகை இம்முடிச்சுக்குள் உண்டு. பணத்தை எடுத்து எண்ணுங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிவிட்டு முடிச்சை அவிழ்த்து நவாப் முன் குவித்தார். நவாப் கணக்குப் பார்த்தபோது தமாஜியிடம் இருந்து வரவேண்டிய தொகை அப்படியே சரியாக இருந்தது. பறையனாக வந்த விதோபாவுக்குப் பற்றுச்சீட்டையும் கொடுத்து அனுப்பினார் நவாப்.

நவாப்புக்கு முன்னால் தோன்றிய பறையனது பசுமை நிறைந்த வசீகரமான தோற்றமும் தெய்வீக வதனமும் ஒளி வீசும் கண்களும் நவாப்புக்கு அவன்மீது ஒரு பற்றுத் தோன்றியது. பறையனைப் பார்த்து, "உனது பெயர் யாது" என்று கேட்டார். "தமாஜி அவர்களின் ஒரு ஏழை ஊழியன். எனது பெயர் விதுரமகீர் எனக் கூறிவிட்டு ஒளிமயமாக மறைந்து விட்டார். உடனே நவாப் ஆவேசம் கொண்டவராய்ப் பறையனை அங்குமிங்கும் ஆவலாய்த் தேடினார். காணவில்லை! பறையனைக் கண்டலல்லாது பசியாறுவதில்லை என்று விரதங் கொண்டார். இவ்வாறு இரண்டு மூன்று தினம் கடந்து விட்டது. இந்த வேளை தமாஜி தம்மிடம் வருவதைக் கண்டு அதிசயப்பட்டார். "நீர் ஏன் இங்கு வந்தீர்." என்று கேட்டார். "உமக்கு எதிராக ஒரு குற்றச் சாட்டும் இல்லை! நீர் இறுக்க வேண்டிய பணம் மூன்று தினத்துக்கு முன்னதாகவே கொடுத்து அனுப்பிவிட்டீரே? உமது வேலையாள் விதுரமகீர் வந்து கொடுத்து விட்டான். ஆனால் உனது வேலையாளை நான் ஒருமுறை மீண்டும் பார்க்க விரும்புகின்றேன். அவன் எங்கே?" என்று கேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார். என்னிடம் விதுரமகீர் என்ற பணியாளு மில்லை. நான் பணத்தையும் கொடுத்து அனுப் பவுமில்லை. அது எவ்வாறு? தானியத்தின் முழுப் பெறுமதியையும் தந்துவிட்டான். அதற்குரிய பற்றுச்சீட்டும் கொடுத்து விட்டேன் என்றார்.

தமாஜி இதனைக் கேட்டுப் பேராச்சரியம் அடைந்தார். அவரது கரத்தில் பகவத்கீதையின் பிரதி ஒன்று இருந்தது. புத்தகத்தினூடே ஒரு கடதாசித் துண்டு தலையை நீட்டியபடி இருந்தது.

நவாப் தமாஜியைப் பார்த்து அக்கடதாசித் துண்டு என்ன? என்று கேட்டார். அதனைத் தமாஜி எடுத்து ஆவலுடன் பார்த்தார். நவாப் தந்த பற்றுச்சீட்டு என்று கண்டு பெரிய அதிர்ச்சி யடைந்தார்.

நவாப் விதுரமகீர் என்பவரைப் பற்றித் தெரியாது என்று கூறி விட்டீர். என்னிடம் பெற் றுக்கொண்ட பற்றுச்சீட்டை உமக்குத் தந்துள் ளார். உண்மையாக அவனை உமக்குந் தெரியும். அவ்வாறில்லையாகில் நான் அனுப்பிய பற்றுச் சீட்டு உமக்கு எவ்வாறு வந்தது? தமாஜிக்கு எவ்வாறு பதில் தருவது என்பது அறியாது திகைத்தார்.

நவாப்: நான் விதுரமகீர் என்பவரைக் கட்டாய மாகப் பார்க்க வேண்டும். நீர் கட்டாய மாக எனக்குக் காட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமாஜி: ஐயோ ஆண்டவரே! விநோதமுள்ள விதோபாவே! ஒரு கஷ்டத்திலிருந்து என்னைக் காப்பாற்றிவிட்டு மறுபடி பிறிதொரு கஷ்டத்துக்குள் விட்டு விட்டீரே! விதுரமகீரைக் காணவேண்டும் என்று நவாப் விடாப் பிடியாக நிற்கின்ருரே! நானே இதுவரை காணவில்லை! இவ்வாருகிய யான் - எவ்வாறு எல்லாம் வல்ல விதோபாவாகிய விதுரமகீரைக் காண்பிப்பது.

தமாஜி நவாப்பைப் பண்டரிபுரத்துக்கு அழைத்துக்கொண்டு வழிபாட்டுக்குச் சென்ருர். இருவரும் விதோபாவின் விக்கிரகத்துக்கு முன்பாக நின்ருர்கள்.

இந்தக் கருங்கல் உருவத்துக்கு முன்பாக நான் நிற்கவரவில்லை. விதுரமகீரைத்தான் பார்க்கப் போகின்றேன். எனக்கு நீர் அவரைக் காட்ட வேண்டும். இவ்வாறு நவாப் கேட்டதும் ஆண்டவராகிய விதோபா விதுரமகீர் வடிவில் இருவருக்கும் காட்சி தந்து நின்ருர். கற்சிலைக்குப் பதிலாக நவாப்புக்குப் பண முடிச்சுக் கொண்டு வந்து தந்த பறையன் அதே ஆலயக் கர்ப்பக்கிரகத்தில் காட்சிதந்தார். இவ்வாருக ஆண்டவன் தனது அடிமையையும் காப்பாற்றினுர், நவாப்புக்குத் தரிசனமும் தந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமாஜியினுடையதும், நவாப்பினுடையதுமான நினைவுச் சின்னங்கள் - சமாதிகள் — இரண்டும் பக்கம் பக்கமாக மங்கள வேதாவில் காட்சி தந்து கொண்டிருக்கின்றன.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

---

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத் தோன்றும்**
**துன்னற்க தீவினைப்பால்.**

ஒருவன் தன்னைத்தான் விரும்பி வாழ்பவனுனல், அவன் எத்தகைய தொரு தீய செயல்களிலும் ஒருபோதுமே ஈடுபடாமல் இருப்பானுக.

**ஊருணி நீர் நிறைந்தற்றே உலகமாம்**
**பேரறிவாளன் திரு**

உலகினர் எல்லாரும் விரும்புமாறு உதவி செய்து வாழும் பேரறிவாளனுடைய செல்வமானது, ஊருணியிலே நீர் நிரம்பினுல் போலப் பலருக்கும் பயன் படுவதாகும்.

**அற்ருர் அழிபசிதீர்த்தல் அஃதொருவன்**
**பெற்ருன் பொருள் வைப்புழி**

எதுவுமே இல்லாத ஏழையரின் கொடிய பசிநோயைப் போக்க வேண்டும், அதுதான் பொருள் பெற்றவன் தன் பொருளைச் சேமித்து வைக்கும் இடமும் ஆகும்.

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்ருமை நன்று.**

உலகத்தார் முன்பாக ஒருவன் தோன்றினுல் புகழோடு தான் தோன்றவேண்டும். புகழ் இல்லாதவர் தோன்றுவதை விடத் தோன்ருமற் போவதே நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# சகல ஜீவன்களிலும் இறைவன் உறைந்துள்ளான்

இச் சரிதை ஒரு ஐம்பது வருடங்களுக்கு முன்பு நடந்ததென்பர். தென் இந்தியாவில் கீர்த்திவாய்ந்த ஸ்ரீசாயிபாபா ஆன்மீகத்துறையில் உலகில் மிகவும் உயர்ந்தவராகி விட்டார். ஒரு முறை தன்னை மறந்த நிலையில் அமர்ந்தவர், திடீரென உதட்டை அசைத்துப் புன்சிரிப்புச் செய்தார். தமது கீர்த்திவாய்ந்த பக்தனை ஸ்ரீ உபாஜனி மகாராசாவை நோக்கி, "உனது ஆலயத்துக்கு எவராவது உன்னிடம் வருகின்றனரா?" என்று மிகவும் விநயமாக வினவினர்.

பாபாவின் கட்டளைப் பிரகாரம் ஸ்ரீ உபாஜனி மகாராசா சிறீடி நகரின் எல்லைப் புறத்திலுள்ள சுடுகாட்டை அண்டிப் பாயும் நதியோரத்தில் "காண்டோபா" என்ற ஆலயத்தை நிர்மாணித்து அங்கே வசித்து வரலானர். இக்கோவில் பழுதடைந்து விட்டது. வைதிக முறையைக் கெட்டியாகக் கைக்கொள்ளும் பிராமணகுலத்தில் வந்த காரணத்தினல், பாபா தங்கும் துவாரகமாயிமஸ்யிட்டில் தங்க மறுத்து விட்டார். பாபாவின் தரிசனத்துக்காகத் தினமும் வருவார். தானகவே உணவு செய்து பாபாவுக்கு எடுத்துச்செல்வார். பாபா உண்டபின்பே இவர் உணவு அருந்தி நீர் குடிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாபா, அங்கு ஒருவரும் வருவதில்லை" என்று பாபா கேட்ட கேள்விக்குப் பதில் தந்தார்.

"ஆகட்டும், சிலவேளை நான் அங்கு வரக் கூடும்." என்று கிருபா கடாட்சம் செய்தார்.

சில நாட்கள் கடந்தன. நல்ல கோடைகாலம் மத்தியான நேரம். பூமி கடும் சூடு. ஸ்ரீ உபாஜனி மகாராஜ் தனது குருவுக்கு ஒரு தட்டில், உண வினை ஏந்தியவண்ணம் சென்றார். திடீரென அவ ருக்கெதிரே கருநிறம் கொண்ட ஒரு நாய் பசிக் கொடுமையோடு வந்தது. மகாராஜ் சற்று நின்று நிதானமாகச் சிந்தித்தார். குருவுக்கு உணவு பரிமாறிய பின்புதான் இந்த நாயினுடைய பசியை ஆற்றுவது முறையாகும் எனத் தீர்மானித்து அப்பாற் சென்றார். பின்பு ஏதோ மனம் மாறிய வராய்த் திரும்பிப் பார்த்தார். அந்தக் கருநிற நாயைக் காணவில்லை. அது மறைந்து விட்டது. நடந்து மஸ்யிட்டை அடைந்தார். "இந்தக் கடும் வெய்யிலில் ஏன் வருவான்? நான்தானே நீ வரும் பாதையில் சந்தித்தேனே?" என்று பாபா கேட்டார். உடனே தன்னை எதிர் கொண்ட நாயின் ஞாபகம் வரவே அதனை எண்ணி மனம் நொந்தார். பாபா மௌனமாக இருந்துவிட்டார்.

அடுத்த நாள், தமது ஆலயத்திலிருந்து குரு வுக்கு அமுது எடுத்து வரும்போது, பசியால் வருந்தும் ஒரு சூத்திரனைக் கண்டார். ஆனல் அவனைக் கண்ணெடுத்தும் பாராது பாபுவசிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஸ்யிட்டை நோக்கிச் சென்றார். "இன்றும் நீர் இவ்வளவு தூரம் வரவேண்டியதில்லை. உனது ஆலயத்தருகே நான் வந்தேன். என்னை நீ பரவா பண்ணவில்லை" என்றார்.

பக்த பிராமணனது கண்கள் திறபட்டன "நானே அன்று நாயாக வந்தேன், பின்பு சூத்திரனாக வந்தேன். இவைகள் யாவிலும் ஒரே பரமாத்மா இருக்கின்றார். பரப்பிரமனின் தத்துவத்தைக் கற்பிப்பதற்காகவே இவ்வித காட்சிகளைத் தந்தேன். வேதாந்தத்தில் கூறியவாறு இறைவன் யாவற்றிலும் உறைந்துள்ளார் எல்லா ஜீவன்களிலும் நீக்கமற நிறைந்துள்ளார் ஆகவே நீர், எல்லா ஜீவன்களையும் பாகுபாடற்ற வகையில் பார்க்க வேண்டும். எல்லா ஜீவன்களையும் ஒரே உணர்ச்சி பாவத்துடன் நோக்க வேண்டும். எப்போதும் சரியான செயல்களைப் புரி. அதுவே உயர்ந்த வழி. இறைவன் எல்லாவற்றிலும் உள்ளான். அதனை முற்றாக அறிந்துகொள். யாவருக்கும் சேவை செய்வதென்பது —அவனுக்குச் சேவை செய்வதாகும்

இவ்வாறு ஸ்ரீசாயிபாபா தமது உயர்ந்த சீடனுக்கு உபதேசித்து ஆசீர்வதித்தார்.

* * *

**வலியார் முன்தன்னை நினைக்க தான் தன்னின்**
**மெலியார் மேல் செல்லும் இடத்து.**

தன்னைவிட மெலிவானவர் மேல் பகைத்துச் செல்லும் போது. தன்னைவிட வலியவர் முன்பாகத் தான் அஞ்சி. நிற்கும் நிலைமையை நினைவிற் கொள்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

## தொழுகையில் ஒரு கபடதாரி

இச் சம்பவம் பல வருடங்களுக்கு முன்பு நடந்தது. வங்க நாட்டில் துவாரகா நதி தீரத்தில், தரபீத் என்று வழங்கும் பிரசித்தமான புண்ணிய இடம் ஒன்று உண்டு. பெரிய ஜமீன்தார் ஒருவர், இந்த இடத்தில் வீற்றிருந்து அருள் கொழிக்கும் தாராதேவியை தரிசிக்கும் பொருட்டு வந்தார். தேவியை வணங்கு முன்பு ஆற்றில் நீராடி அநுட்டான விதிகளை முடிக்க வேண்டும் என்று நினைத்தார். அவ்வாறு நீராடிய பின்பு ஆற்றோரத்தில் ஒரு பாங்கரில் அமர்ந்து தமது ஜெபத்தை செய்தார். இதே வேளை, மிகவும் பிரசித்தி பெற்ற அகோரிசாது வாமக் க்ஷேப நீராடிய வண்ணம் இருந்தார். ஜமீன்தாரைக் கவனித்துவிட்டு சில விநாடிகளின் பின்பு சிரித்த படி ஆற்று நீரினால் ஜமீன்தாருக்கு எற்றினார். இவ்வாறு தமக்கு நீர் சிந்தியவர் வாமக் க்ஷேப மகாத்மா என்பதுஅறியார். தாம் ஜெபத்திலிருக்கும்போது இவ்வாறு இன்னல் செய்யப்பட்டது அறியாது சற்று யோசித்தார். இதனால் ஆச்சரியமுற்று ஒரு சில நிமிடம் பொறுமையுடனிருந்தார். ஆனால் தபசியின் வேடிக்கை நின்றதாயில்லை. ஜமீன்தார் பொறுமையிழந்தவராய், தம்மீது ஆற்று நீரினால் எற்றும் தபசியைப் பார்த்து "கண்கள் இல்லையா உமக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஜெபத்தில் இருப்பது தெரியவில்லையா? எதற்காக இவ்வாறு இன்னல் கொடுக்கின்றீர் என்று வினவினார்.

இவ்வாறு ஜமீன்தார் வினவவும், சாது உரத்த சத்தமாகச் சிரித்துவிட்டுச் ஜமீன்தாரை நோக்கி, "உண்மையாக வழிபாடுதான் செய்கின்றீரா? அல்லது கல்கத்தாவிலுள்ள மூர் அண்ட் கம்பனியில் ஒரு சோடி சப்பாத்து வாங்குகின்றீரா?" என்று கேட்டுவிட்டு மீண்டும் ஆற்று நீரினால் பலமாக எற்றினார். தமது உள்ளார்ந்த செய்கையை வெளிக்காட்டியதைக் கண்ட ஜமீன்தார் செய்வதறியாது பின்வாங்கினார். வெளிப் பார்வையில், ஜமீன்தார் வழிபாடு செய்து கொண்டு இருந்தாலும், உள் மனத்தில், தபசி கூறிய அதே கொம்பனி உள்ள தெருக்களில் சப்பாத்துக்காக அவரது மனம் சஞ்சரித்த வண்ணமாகவே இருந்தது. ஜமீன்தார் இதனால் பெரும் ஆச்சரியப்பட்டு "இவர் ஒரு சாதாரண மகாத்மா அன்று" எனது மனதை அறிந்து அம்பலப்படுத்தி விட்டாரே என எண்ணலானார்.

முற்றாக வெட்கப்பட்டவராய் தமக்குள் பணிவு மனப்பான்மையை வரச்செய்து மகாத்மாவை நோக்கி, "ஆமாம்! மகாத்மாஜீ! தாங்கள் கூறிய வாறுதான் நான் நினைத்தபடி இருந்தேன். தயவு கூர்ந்து எனது மனதை ஒருவழிப்படுத்த அநுக்கிரகம் செய்தருள வேண்டும். வணங்கும் போது ஆண்டவனையன்றி வேறொன்றையும் பற்றாத மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத்தர வழி செய்தருள வேண்டும்'' என்று வேண்டி நின்றார். ''ஆன்மீகத்துறையில் கபட நாடகம் அறவே கூடாது'' என்று சிரித்தவாறு மகாத்மா ஜமீன்தாரை நோக்கிக்கூறினார்.

---

**அறிவினால் ஆவது உண்டோ பிறிதின் நோய்**
**தன்நோய்போல் போற்றாக் கடை.**

பிறிதோர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பமே போலக் கொள்ளாத இடத்தில், அறிவினால் ஆகும் பயன் தான் ஏதும் உளதாகுமோ?

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்.**

கொலை செய்யாமலும், புலால் உண்ணாமலும் வாழும் உயர்ந்த பண்பாளனை, எல்லா உயிர்களும் கைதொழுது தெய்வமாக நினைத்துப் போற்றும்.

**தன்னுயிர் தான் அறப்பெற்றானை ஏனைய**
**மன்னுயிர் எல்லாம் தொழும்.**

''தான் என்னும் செருக்கானது தன்னிடமிருந்து நீங்கிய தவ வலிமை பெற்றவனை, உலகத்தில் செறிந்துள்ள உயிர்கள் எல்லாம் தொழுது போற்றும்.

**கணை கொடிது யாழ்கோடு செவ்விது ஆங்கு அன்ன**
**வினைபடு பாலாற் கொளல்.**

நேரானாலும் அம்பு கொடுமை செய்வது, வளைவானாலும். யாழ்க்கோடு இன்னிசை தருவது; மனிதரையும் இப்படியே அவரவர் செயல் தன்மை நோக்கியே அறிதல் வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 ஒரு மகாத்மாவின் பித்து

பிருந்தாவனத்தில் மகாத்மா ஒருவர் வசித்து வந்தார். அவருடைய பெயர் நாராயணசுவாமி இவர் குருமாசரோ என்ற ஆற்றங்கரையோரமாக வாழ்ந்து வந்தார். அவ்விடத்தில் கோயில் அர்ச்சகர் ஒருவரும் வாழ்ந்து வந்தார். ஒருநாள் ஷை நாராயணசுமாமி. பைத்தியம் பிடித்தவன் மாதிரி, ஆற்றங்கரையிலிருந்து அருகிலுள்ள ஒரு குன்றை நோக்கி ஓடுவதை அர்ச்சகர் கவனித்தார். குன்றை வந்து அடைந்ததும், மீண்டும் ஆற்றங்கரைக்கு வந்தார். மீண்டும் ஒருமுறை ஓடி மீண்டார். இவ்வாறு ஓடுவதும், மீளுவதுமாக இருந்தார். இக்காட்சியைக் கண்ட பூசாரி ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டார், என்றாலும் சுவாமிகளிடம் இந்நிகழ்ச்சியைப் பற்றி விசாரிக்கவில்லை

அடுத்த நாளும் நாராயணசுவாமி அவ்வாறே ஓடினார், மீண்டார். ஓடினார், மீண்டார். அன்று மாலை பூசாரி ஞானியாருடைய இரு கால்களையும் இறுகப்பற்றியவாறு "சுவாமிகாள்! நீவிர் இவ்வாறு செய்யும் லீலையின் உட்கிடக்கை யாதோ;" எனக்கேட்டார். நாராயணசுவாமிகள் உடனே பதில் கூற எண்ணவில்லை. ஆனால் பதில் கூறும் வண்ணம் பூசாரியார் வலுப்படுத்தினார். பூசாரி தன்மேல் வைத்திருக்கும் ஆழ்ந்த விசுவாசத்தின் காரணமாகப் பின்வருமாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓகோ சகோதரனே! வழிபாடு செய்வதற்கு நான் குருமாசரோ ஆற்றுக்கு வருகின்றேன். அதற்காக நான் நிற்கும்போது கிருஷ்ணபரமாத்மா தூரத்தில் நிற்பதைக் காணமுடிகின்றது. அவரது அழகைப்பருகினதும் எனக்குப் பித்துப் பிடித்து விடுகின்றது. உடனே அவரைப் பிடிக்க ஓடினேன். ஆனால் என்னிலும் வேகமாக மாயக்கண்ணன் ஓடுகினரூர். மலைக்குன்றின் மேல் ஏறியதும் எனது பின்புறமாகக் கிருஷ்ணபரமாத்மா நிற்கின்றூர். ஆகவே அவரைப் பிடிக்க மீண்டும் துரத்தவேண்டி இருக்கின்றது. இவ்வாறு நான் பல நாட்கள் ஓடியுள்ளேன்."

பூசாரி சுவாமிகளை நோக்கி "தாங்கள் கிருஷ்ணபரமாத்மாவிடம் ஒன்றும் கேட்க வில்லையா?" என்று வினவினர்.

சுவாமிகள் கூறினூர்கள்: "முதல் முதல் எனது மனத்தில் தோன்றிய சந்தேகங்களைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். அதே நேரம் அப்பரந்தாமனை நேரே காணும் பாக்கியம் கிடைக்கும். உடனே எல்லாச் சந்தேகங்களும் மறைந்து விடுகின்றன. அவரது ஞாபகமும் அவர்மீதுள்ள அன்பும் மாத்திரம் மிகுதியாக என்னைப் பற்றி நிற்கும் அவரது சௌந்தரியம், அழகு இவ்வளவு என்று சொல்லலுந்தரமன்று. அதனால் வேறெதனையும் நினைத்தல் சாத்தியமானதன்று. நான் வெறும் பித்தனாக மாறுகின்றேன்".

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

# உண்மையான செல்வமும் தருமமும்

குஜராத்தில் வசித்த மேனல்தேவி என்பவர் கீர்த்தி வாய்ந்த ராஜ்மாதா. தாராள மனப் பான்மையுள்ளவர். சோமநாத்தில் உள்ள ஆண்டவனை வழிபடும் பொருட்டு ஒரு கோடி ரூபா பெறுமதியான பொன்னையும் கொண்டு சென்ருர். தம்மைப் பொன்ஞல் நிறுத்து அப்பொன்னை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். இதனை கண்ணுற்ற ராஜ் மாதாவின் மகஞன ராஜா சித்தராஜ் பெரிய குதூகலமடைந்து களிப்புற்று குடிமக்கள் இறுக்க வேண்டிய எத்தனையோ கோடிக்கணக்கான வரியை மக்களிடம் அறவிடாது விலக்கி விட்டார்.

மேனல்தேவி தாம் ஆற்றிய அறச் செயல் போன்று உலகில் பிறிதொருவர் இதுவரை செய்திருக்க மாட்டார்கள் என்று தமக்குள்ளே சிந்தித்துச் சிறிது இறுமாப்புக் கொள்ளலாஞர். பகவான் சோமநாத் திருவிளையாடல் ஒன்றின் மூலம் தமது சிஷைக்கு ஒரு பாடம் கற்பித்துக் காப்பாற்றவேண்டும் எனத் திருவுளம் கொண்டார். மேனல் தேவி அன்றிரவு ஒரு கனவு கண்டார். "எனது ஆலயத்துக்கு ஏழைப்பெண் ஒருத்தி வருகை தந்துள்ளாள். அவள் இதுரை வருந்தித் தேடிக் காப்பாற்றிவரும் தவத்தினை

எவ்வாறுவது மன்றுடிப் பெற்றுக்கொள்'' என்பதே கனவு.

தேவியார் தாம் கண்ட கனவைப்பற்றித் திடீரென விழித்துச் சிந்தையிலிருத்தினர். ஈற்றில் ஒரு முடிவுக்கு வந்தார். அதாவது, "இது ஒரு பெரிய விடயமன்று. எனது பணத்தைக்கொடுத்து அவளது தவத்தைப்பெற்றுக் கொள்வேன்" எனத் தீர்மானிக்கலானுர். அவ்வாறு எண்ணியவராய் மேனல் தேவியாகிய அரசி பணியாளர்களைப் பணித்து ஆலயத்துள் நிற்கும் ஏழைப்பெண்ணை அழைத்து வருமாறு கட்டளை பிறப்பித்தார் உடனே பணியாளர்களும் ஆலயத்துக்குச் சென்று ஒரு வயதுபோன பிராமணப் பெண் நிற்பதைக் கண்டு அவ்வேழைப் பெண்ணை அரசி முன்பு விடுத்தனர். அப்பெண்ணை நோக்கி "நீ இது வரை சம்பாதித்த தபசை, நீ விரும்பிய பொருளைப் பெற்றுக்கொண்டு, எனக்குத் தரவும் என்று பணிவாக வேண்டினர்.

ஏழைப் பிராமணப்பெண் ஒருவிதமான தடுமாற்றமும் இல்லாது, அவ்வாறு தமது தவத்தின் பலனைப் பணத்துக்குத் தரமுடியாது என்று மறுத்துவிட்டார். அரசி அவளது மறுப்பினைக் கண்டு ஆச்சரியமும் விசனமும் அடைந்து. "இவ்வாறுன தவத்தை எவ்வாறு பெறமுடிந்தது என வினவினுர்.

ஏழைப் பிராமணப்பெண் தன் விருத்தாந்தத்தை விரிவாக உரைக்கலானுர். "எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையை மறந்து, அதனை விட்டு அகன்றேன் அதன் பின்பு அங்குமிங்கும் அலைந்து திரிந்தேன் பல மாதங்கள் பல வருடங்களாக மாறின பல இடங்களுக்கும் ஆண்டியாக அலைந்தேன் திரிந்தேன்.

"பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கென பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே..."

முன்னும் பின்னுமாக மூலமுதல்வன் வழி காட்டியாக நின்றான். உள்ளொளி பெருக்கும் வழி பிறந்தது. என்னே யான் பெற்ற சாந்தி! ஈற்றில் இந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு வந்து அடைந்தேன். நேற்றைய தினம் எனது விரத நாள். இன்றையதினம் ஒரு புண்ணியவான் ஒரு சிறு உணவை உப்பிடாது தந்தார்.

அதன் பாதியை எமது பரம பிதாவாகிய சோமநாத ஆண்டவருக்கு அன்புடன் இட்டேன். எஞ்சிய பாதியில் ஒரு பகுதியை அந்நேரம் இருந்த ஒரு விருந்தினருக்கிட்டு மிகுதியைக் கொண்டு எனது விரதத்தை முடித்தேன். இத ஞல் ஒரு பரம திருப்தியடைந்தேன். ஆனல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் எண்ணியவாறு என்னதவத்தை நான் அடைந்துவிட்டேன்.

யானே ஒரு கவனிப்பாரற்ற அற்பஜீவன். அரசியாகிய தாங்களோ மிகவும் உயர்ந்தஜீவன். நீங்கள் இதுவரை செய்த புண்ணியகருமங்கள் பெருமை தரக்கூடிய தவத்தினைத்தந்திருக்கும். உங்கள் தந்தை, கணவன், சகோதரர், மகன் யாவரும் அரசகுடும்பம். தாங்கள் ஒரு சில தினங்களுக்கு முன்பே பெரிய ஒரு "சங்கார் ஜீ பூசை" என்று கூறப்படும் அரிய வழிபாட்டை எத்தனையோ கோடி பணம் செலவு செய்து ஆற்றி அதனுல் எத்தனையோ கோடி தவத்தை அடைந்துள்ளீர்கள் என்று அறியலானேன். இந் தப் பெரிய செய்கையை மக்களிடையே பதிப் பதற்காக தங்களின் இளைய அரசு மக்களிடமிருந்து அறவிடப்படும் வரியான எத்தனையோ கோடிப் பணத்தையும் வசூலிக்காது சலுகை செய்துள் ளாரல்லவா? இவ்வளவு தபோபலன்களையும் ஆற்றிவிட்டு என்னிடமுள்ள அற்ப தவத்துக்கு இத்தனை ஆசை தங்களுக்கு எங்கிருந்து வந்தது? தாங்கள் என் மீது ஆத்திரமோ, வெறுப்போ கொள்ளாது இருப்பீராகில், மேலும் சில விடயங் கள் கூற விளைகின்றேன். தங்கள் உத்தரவு? என்று பிராமணப் பெண் கூறினுள்.

மேனல் தேவியார் அப்பிராமணப்பெண்ணைப் பார்த்து "மனதைத் திறந்து பேசுவதற்குச் சிறி தும் தயக்கமின்றிக் கூறலாம்." என்று கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எதற்காகப் பணத்திற்குத் தனது பக்தி ததும்பும் தவத்தைத் தாரை வார்த்துத்தா இயலாது என்பதனைக் கூறுவேன் கேட்பீர்களாக! உலகர் முன் ஒரு ஏழை எவ்வளவு வறியவளாக இருப்பினும் (அவள்) தாமரை மலர் போன்ற மென்மையான திருவடிகளைத் தாங்கி நின்று பேரருள் பொழியும் இறைவன் மீது அன்பு செலுத்தும் சாந்தியையும் சமாதானத்தையும், உலகில் உள்ள அத்தனை கோடி பொருளும் தந்து விடமுடியாது. பக்திக்குச் சமமாக உலகில் வேறு ஒன்றும் இல்லை. ஆகவேதான் அரசி! யான் பெற்ற இச் சிறு தவத்தை சாந்தியை தாங்கள் தர எண்ணும் பணத்திற்குப் பதிலாக பரித்தியாகம் செய்ய இயலவில்லை. பணம் மாத்திரம் இருந்தும் பயனில்லை. பணத்திலும் பன்மடங்கு உயர்ந்தது, உண்மையான நேர்மையும், இறைவனிடம் தன்னலமற்ற நேயமும் ஆகும் என்பதனைக் காண்பீராகுக! ஆகவே தர்மத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் அத்தியாவசியம். அதிகாரத்தை வைத்திருந்தால் மாத்திரம் போதாது. அதனோடு பொறுமையும், எளிமையும் கலந்து விளங்கவேண்டும். இளமையிலிருந்தே விரதங்களிலீடுபடுதல், ஆன்மீகத்துறையில் கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். தாங்காமுடியாத வறுமை வந்துற்றாலும், கையேந்தி வீட்டு வாசலுக்கு வந்தவனை "இல்லை" என்னாது ஏதாவது தந்து உபசரித்து உதவி, அனுப்புதல் இறைத் தொண்டாகும். வெளிப்படையாகப் பார்க்கும் போது இவ்வாறான செய்கைகளின் உண்மைகள், உணர்வுகள் அற்பமாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றலாம். ஆனால் இவைகளை உண்மையான தவசீலர்கள் தவருது கடைப்பிடிக்க வேண்டியதாகும்'' என்று கூறினர்.

பிராமணத் தபசியின் உள்ளத்திலிருந்து உதிர்ந்த சிந்தனை மணிகள்—மேனல் தேவியிடம் உள்ள சிறுமையைத்தரும் பெருமை இருந்த இடம் இல்லாது அகன்று விட்டது. தமது நன்றியைத் தபசிக்குத் தெரித்தார். சோமநாத்தில் உள்ள சங்கார்ஜி தேவன், தனது அடிமையான தேவியை நல்லவளாக்க இவ்வாறு ஒரு பிராமணத் தபசியை அனுப்பி அருள் பாலித்தார்.

---

ஏதிலார் குற்றம் போல் தங்குற்றம் காண்கிற் பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

அயலாரின் குற்றங்களைக் காண்பது போலவே தம் குற்றங்களையும் காண்பாராளுல், நிலைபெற்ற உயிர்கட்கு எத்தகைய தீமையும் உண்டாகுமோ.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ் செய்வாரின் தலை.

மனத்தொடு பொருந்திய வாய்மையையே ஒருவன் சொல்லி வருவானுனல், அவன், தவத்தோடு தானமும் செய்பவரினும் மிகவும் சிறந்தவன் ஆவான்.

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

ஒருவன் தன்னைக் காக்க விரும்பினுல் சினம் எழாமல் காத்துக்கொள்க. காவாதிருந்தால் அச்சினமானது அவனையே முடிவில் கொன்றுவிடும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25

# நடப்பது யாவும் இறைவனின் இச்சைப்படியே

இந்தியாவில் ஒரு கிராமத்தில் சாந்த குணம் நிரம்பிய ஒரு நெசவுத் தொழிலாளி வாழ்ந்து வந்தான். அவனுக்குக் குடும்பம் இல்லை. தனிமையாகவே வாழ்ந்து வந்தான். அவனிடம் நெசவு சக்கரம் (தறி) உண்டு. தினமும் இத் தறியில் சீலை நெசவுச் செய்வான். நெசவு செய்த துணிகளை சந்தைக்குக் கொண்டுசென்று விற்பனை செய்வான். அதனால் அடையும் இலாபத்தைக் கொண்டு அவனது வாழ்க்கைச் சக்கரம் ஓட்டப் போதுமாயிருந்தது. வசிப்பதற்கென்று இல்லமோ, குடிசையோ ஒன்றில்லாததால் ஒரு பரந்த மரத்தின் நிழலில் தனது உயிர்நாடியான சக்கரத்தை நாட்டியிருந்தான். நாள் வேலை முடிந்ததும் நெசவுத்தறியின் பாங்கரில் படுத்து உறங்குவான். நெசவு செய்யும் துணி பூர்த்தியானதும் அதனைச் சந்தைக்கு எடுத்துச் செல்வான். ஆங்கே, நெசவு செய்வதற்குப் பருத்தி நூல் எவ்வளவு செலவு ஆயிற்று, சாயத்துக்கும் மற்றும் சில்லறைச் செலவுகளுக்கும் எவ்வளவு செலவு போனது, ஆகவே எவ்வளவு குறைந்த லாபம் வைத்து விற்க இசைந்துள்ளான் என்பவற்றை, வாங்க வந்தவர்களுக்கு விபரமாக எடுத்துக் கூறுவான். இவனை யாவரும் ஒரு எளிமையான குணமுள்ளவன் என்றும் நேர்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளன் என்றும், கடவுள் பக்தி நிரம்பியவன் என்றும் போற்றிக் கொண்டாடினர்கள். இவனுடைய பேச்சை முற்றாக நம்பி விடுவார்கள். இவனால் கூறப்பட்ட விலை கொடுத்து துணிகளைப் பெறுவார்கள். இவ்வாறு கிடைந்த பணத்தின் ஒரு பகுதி கொண்டு மேலும் பருத்தி நூல் வாங்குவான். மிகுதிப் பணத்தைக் கொண்டு தனது பசியைப் போக்குவதற்கு எளிமை நிறைந்த உணவுப்பண்டங்களை வாங்கிக் கொண்டு போவான். இங்ஙனமாகத் தனது சீவியத்தை நகர்த்திய வண்ணம் வாழ்ந்தான்.

இவனது நெசவுத்தறி ஸ்தாபிக்கப்பட்ட இடத்துக்கு எதிர்ப்புறமாக ஒரு தனவந்தனுடைய மாளிகை இருந்தது. ஒரு காரிருளின் போது வழக்கமாக இரவுப் போசனத்தை முடித்த பின்பு, மரத்தின் கீழ் உறங்கிவிட்டான். இரு கள்வர்கள் தனவந்தனுடைய வீட்டுக்குள் புகுந்து பணப் பெட்டியை உடைத்துப் பணத்தையும் நகை, நட்டு, துணிமணியாவையும் வெகு சிரமத்துடன் எடுத்து நெசவாளி உறங்கும் மரத்தண்டை கொண்டு வந்தனர். களவாடிய பொருட்களை இருவர்களில் எவர் சுமப்பது என இருவர்களுக்குள் ஒரு கேள்வி பிறந்தது. காரிருளில் களவாடிய பொருட்களை சமமாகப் பாகம் பிரிக்க முடியாது தடுமாறினர். நெசவாளியை எழுப்பி அப்பொதியைத் தங்களுக்காகத் தூக்கி வரும்படி வேண்டினர். எப்போதும் எவருக்கும் எந்த நேரமும் உதவி செய்யும் மனப்பாங்கு உடையவனாகையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வார்த்தையும்பேசாது களவுப் பொதியைத் தூக்கித் தலையில் வைத்தான். அவர்கள் கள்வர்கள் என்பது அவனுக்குத் தெரியாது. அவன் அதனை அறியவும் விரும்ப வில்லை. நெசவாளி முன் செல்ல, கள்வர்களிருவரும் பின் தொடர்ந்தனர்.

இதே வேளை வீட்டுச் சொந்தக்காரன் தனது வீடு உடைத்துக் களவுபோன செய்தி அறிந்து ஊர் காவலர்களுக்கு அறிவிக்க அவர்களும் கள்வர்களைப் பிடிக்க முயன்றனர். நெசவாளியும் இரு கள்வர்களும் சென்று கொண்டிருக்கும் மார்க்கத்தில் ஊர்காவலன் ஒருவனிடம் சிக்கிக் கொண்டனர். ஊர்காவலனைக் கண்டதும் கள்வர்கள் இருவரும் ஓடிப்பறந்தனர். களவுப்பொருட்களுடன் நெசவாளி பிடிபட்டுவிட்டான். பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டான். டுத்த நாள் காலை நீதி ஸ்தலத்துக்கு இட்டுச்சென்று களவுக்குற்றத்துக்கு தாக்கல் செய்யப்பட்டான். நெசவாளி களவு செய்தான் என்ற செய்தி ஊர் எங்கும் பரவத் தொடங்கி விட்டது. "இந்த நெசவாளி ஒரு நேர்மையுள்ளவன். கடவுள் பக்தி உள்ளவன்" என்பதனை அக்கிராம மக்கள் நன்றாக அறிவார்கள். அதனால் அதிசயம் அடைந்த வண்ணம் நீதி ஸ்தலத்துக்கு விரைந்தனர். விசாரணை ஆரம்பமானது. நெசவாளியின் தரப்பில் நியாயவாதிகள் எவரும் ஆஜராகவில்லை. நீதவான் நெசவாளியை நோக்கி கடந்த இரவு நடந்தவற்றை நேரே விசாரித்தார். அப்போது நெசவாளி பின்வருமாறு பதில் தந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**ஆண்டவன் ஆணைப்பிரகாரம்** எனது வேலையை முடித்து விட்டு, உணவையும் அருந்தி விட்டு, வழக்கமாக உறங்கும் மரத்தடிக்கு உறங்கச் சென்றுவிட்டேன். நள்ளிரவாக இருக்கும். **ஆண்டவன் ஆணைப்பிரகாரம்** எனது முன் நின்று இருவர் எழுப்பினுர்கள். **ஆண்டவன் ஆணைப்படி** எனது தலை மீது ஒரு பொதியை வைத்து **ஆண்டவன் ஆணைப்படி** அதனைச் சுமந்து தங்களுடன் வரும்படி கேட்டுக்கொண்டனர். ஒரு சில தூரம் சென்றதும் **ஆண்டவன் ஆணைப்படி** ஓர் ஊர்காவலன் எங்கள் முன்தோன்றினுர். எனது காண்டை நடந்து வந்த இருவர்களும் **ஆண்டவன் ஆணைப்படி** ஓட ஆரம்பித்தனர். ஆண்டவன் ஆணைப்படி பொலிஸ் அதிகாரி என்னைப் பிடித்துப் பாதுகாவலில் வைத்தார். ஆண்டவன் ஆணைப்படி மறியல் சாலை அறையில் அமைதியாக உறங்க முடிந்தது. ஆண்டவன் ஆணைப் பிரகாரம் எம்மைத் தங்கள் முன் நிறுத்தியுள்ளார்கள். இப்போது ஆண்டவன் ஆணைப் பிரகாரம் தாங்கள் என்னைக் கேள்விகள் கேட்கின்றீர்கள்."

அப்பாவி மனிதனின் இச்சுவையான கதையைக் கேட்டு நீதவான் புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். நெசவாளி உண்மையான கள்வன் அல்லன் என்பதனை நீதிவான் உணர்ந்தார். ஆகவே அவனை விடுதலையாக்கி அனுப்பிவிட்டார். வெளியில் நின்ற ஊரவர் இவனிடம் வந்து நடந்தது

என்ன என்று கேட்டனர். ஆண்டவன் ஆணைப் படி நான் நிரபராதி என நிரூபிக்கப்பட்டது.

ஆரம்ப முதல் இறுதிவரை ஆண்டவனது ஆணையையே கண் நிறையக்கண்டான். அதனால் மனச் சஞ்சலம் அடைந்தானில்லை.

ஆண்டவனிடம் இவ்விதமான சரணாகதி யடைந்தவனுக்கு சாந்தியும் சமாதானமும் சதா அவனது வாழ்வில் பரிணமித்த வண்ணம் இருக்கும்.

---

அறிவினால் ஆவது உண்டோ பிறிதின் நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை.

பிறிதோர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பமே போலக் கொள்ளாத இடத்தில், அறிவினால் ஆகும் பயன் தான் ஏதும் உளதாகுமோ?

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

ஒப்பற்ற நல்லறம் என்பது எந்த வுயிரையும் கொல் லாமல் இருந்தலே ஆகும். அதற்கு அடுத்ததாக நல்லறம் என்று கருத்தப்படுவது பொய்யாமை ஆகும்.

நாளென ஒன்று போற் காட்டி உயிரீரும்
வாள் அது உணர்வார்ப் பெறின்

வாழ்வை ஆராய்ந்து உண்மை உணர்பவரைப் பெற்றால் 'நாள்'' என்பது ஒரு கால அளவுபோலத் தன்னைக் காட்டி உயிரை அறுக்கும் வாள் என்பது விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# ஆண்டவனைக் கூவு

ஒரு தேசத்தில் ஒரு வறிய மனிதன் வசித்து வந்தான். அந்த நாட்டு அரசன் தனது இல்லத்துக்கு வரவேண்டும், தன்னை வந்து பார்க்க வேண்டும் என்று விரும்பினான். ஆனால் அவனுடைய பொருளாதார நிலையோ, வீடு வாசலின் தோற்றமோ இவைகள் யாவும் அவனது ஆசைக்கு அரசனை வரவேற்பதற்கு முட்டுக் கட்டையாக இருந்தன. எவ்வாறிருந்தும் தனது வேணவாவை அரசனுக்கு ஒருநாள் தெரிவித்தான். அரசனும் ஆகட்டும் என்று கூறிவிட்டார்.

மிகவும் சிறிய குடிசையில் வாழ்கின்றான் என்பது அரசனுக்குத் தெரியும். ஆகவே அரசனுகிய தம்மை உபசரிக்க என்ன தேவையோ அவை அனைத்தையும் முன் கூட்டியே அந்த வறியவன் வீட்டுக்கு அரசன் தனது வேலையாட்கள் மூலம் அனுப்பிவைத்தான். ஏவலாளர்கள் அவனிடம் சென்று கம்பளத்தை எவ்விதம் விரித்தல், பூச்சட்டிகளை எங்கெங்கு வைத்தல், மலர்மாலைகளை எவ்வாறு அலங்கரித்தல், கதிரைகளை எந்த இடத்தில் வைத்தல், மாலைகளை அரசனுக்கு எவ்வாறு அணிதல் முதலான வற்றைப்பற்றி அறிவுறுத்தல் செய்தனர். யாவும் பூர்த்தியானதும் அரசன் அக்குடியானவனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசைக்கு வருகை தந்து அவனை மகிழ்வித்தான். இவ்வாறு இந்த ஏழையின் விருப்பம் நிறைவெய்தியது.

இது போன்று நாமும் இறைவனை எம்முள்ளமாகிய இருப்பிடத்தில் அமருவதற்கு அழைத்தால், அவராகவே சகல ஏற்பாடுகளையும் செய்வார். அவரே எம்மைப் பரிசுத்தம் செய்து தாமாகவே வந்து குடிபுகுவார். நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று. அது எது? ஆண்டவனை அழைப்பதுவே. அந்த ஒன்று அல்லாது வேறொன்றுமில்லை. மற்று யாவையும் அவரே பார்த்துக் கொள்வார்.

உனது மனது பரிசுத்தமாகவும் நேர்மையாகவும் இருந்து இறைவனை வரவழைத்தால் அவர் கட்டாயமாக வருவார். உனது வாழ்க்கை ஒழுங்கீனமாகக் காணப்படினும் அவர் தாமாகவே அவைகளைச் சீர் செய்து தருவார். அவர் உனது அகத்தில் குடிகொண்டதும் உனது வாழ்வு ஒழுங்குபெறும். ஆண்டவனைக் கூவி அழை!

---

**மற்றும் தொடர்பா டெவன் கொல் பிறப்பறுக்கல்**
**உற்றார்க்கு உடம்பும் மிகை.**

பிறவியாகிய துன்பத்தை ஒழிக்க முயல்பவருக்கு உடம்பும் மிகையான ஒரு பொருள்: ஆகவே மற்றைய ஆசைத் தொடர்புகள் எல்லாம் எதற்காவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

## ஆண்டவன் நாமமே ஆபத்துக்களை அகற்றும்

ஆண்டவனை அடையவேண்டுமென்ற ஆவலுள்ள சாதகன் ஒருவன் இருந்தான். ஒருமுறை இச்சாதகன் ஒரு சாதுவிடம் அடைந்து "இறைவனை அடைவது எவ்வாறு?" என்று இரந்து நின்றான். "இறை நாமத்தை இடைவிடாது உச்சரித்தும் தொடர்ந்து மனத்தில் நினைத்தும் கொண்டிருப்பாயாக!" என்று பதில் கூறினார். முதிர்ச்சியடையாத சாதக இளைஞனுக்கு இந்தப்புத்திமதி மனதுக்கு இதமாகத் தோன்றவில்லை. நாமத்தின் சக்தியில் இச்சாதகன் இழிவான நம்பிக்கைகொண்டிருந்தான். ஆண்டவனை அறியவும் அவரது திருவடி சேரவும், ஒருவன் சமஸ்கிருத பாஷையைக் கற்றும், வேதம், சாஸ்திரம் முதலியவைகளை ஐயந்திரிபறக் கற்றும் இருக்கவேண்டும் என்று எண்ணம் கொண்டான். ஆகவே இச்சாதகன் அச்சாதுவை விட்டுநீங்கி வேறு வடமொழிப் பண்டிதனை அடைந்து, தனக்கு அப்பாஷையைக் கற்றுத்தரும்படி வேண்டி நின்றான். பண்டிதரும் சம்மதம் தெரிவித்தார் ஒரு நிபந்தனை யுடன் அதாவது படிப்புடன் தமது அறச்சாலையில் ஏதாவது சரீரத் தொண்டுகள் புரியவேண்டுமென்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சிரமத்தில் உள்ள ஆினங்களைப் பராமரிப்பதுவே சாதகன் ஆற்றவேண்டிய பிரத்தியேகமான தொண்டு. சாதகன் உடனே சமஸ்கிருத பண்டிதருடைய ஆச்சிரமத்தில் சேர்ந்து கடமைபுரியலானுன். பசுக்களைக் காத்து வருவான். வாய்ப்பு வரும் நேரங்களில் சமஸ்கிருதம் படிப்பான். இவ்வாறு பன்னீராண்டு ஓடிவிட்டது. சமஸ்கிருத பாஷையில் விற்பன்னராய் விளங்கினுன். வேத சாஸ்தித்தில் வல்லவனுனுன். ஆனுல் ஆண்டவனைப் பற்றிய சிந்தனையில் சிந்தை திளைக்கவில்லை. சாதகன் பண்டிதரை நோக்கி, "இதுவரை காலமும் இந்நூல்களை யெல்லாம் தங்கள் திருவடி நிழலில் இருந்து ஐயந்திரிபறக் கற்றுவிட்டேன். கற்றும் கடவுளின் கடாட்சம் கருக்கூடாததென்னே! என வினவி நின்ருன்.

புத்தக அறிவு கொண்டு புவியைப்புரக்கும் பரமனை அறியலாம் என்பது புத்தியற்றவர் செயலன்ரே! கடவுளை உணர்வதற்கு அப்பரம் பொருளை அகத்திருத்தி அன்புப் பூசனை புரிதல் வேண்டும். அப்பூசை இடையருது இயற்றுதல் வேண்டும். நின்றும் இருந்தும் கிடந்தும் அவனை நினைக்கவேண்டும். ராமநாமத்தை உள்ளும் புறமும் உச்சரிக்கவேண்டும்." என்ருர். தான் முதல் சரணுகதியடைந்த சாதுவின் பொன்மொழியைப் புறக்கணித்த புன் செயலை நினைந்து கழிவிரக்கம் கொண்டான். பன்னீராண்டுக்கு முன்பே அப்பரமசாது ராமநாமத்

தின் பெரும்பொருளைக் கூறியிருந்தாரே! தவப் பொழுதை அவப்பொழுதாக்கி, அரன் நாமத்தை அரை நிமிடமும் தவருது ஓதமறந்து இருந்து (இறந்து) விட்டேனே'' என்ருன்.

அறிவைப் பெருக்கும் நூல்களிலும் பார்க்க ஆன்ம விடுதலைக்கு அரன் நாமம் தனிமருந்து என்பதனைச் சாதகன் கண்டு தெளிந்தான்.

---

பிறப் பென்னும் பேதமை நீங்கச்சிறப்பென்னும்
செம் பொருள் காண்பது அறிவு.

பிறப்புக்குக் காரணமான அறியாமைகள் நீங்குவதற்குச் சிறப்பான துணை எனப்படும் செம்பொருளை முயன்று காண்பதே மெய்யுணர்வு ஆகும்.

தூஉய்மை என்பது அவாவின்மை மற்றுது
வாஅய்மை வேண்டவரும்

தூய்மையான நிலை என்பது அவாவில்லாத நிலையே ஆகும். அந்தநிலை, வாய்மையையே விரும்பி நடந்தால் தாளுகவே நம்மை வந்து சேரும்.

இருவேறுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும வேறு.

ஊழின்காரணத்தால் உலகத்து இயற்கையானது இரு வேறு வகைப்படும். செல்வராதல் வேறு ஊழ். தெளிவான அறிவினராதல் வேறு ஊழ்ஆகும்.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்டும்.

முறைமையோடு ஆட்சிசெய்து மக்களைக் காப்பாற்றும் மன்னவன், அம்மக்களுக்குத் தெய்வம் என்று சொல்லப் படும் உயர் நிலையிலே வைத்து மதிக்கப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28

# வேண்டுவது ஒன்று உண்டானால் அதுவும் இறைவன் ஒன்றே!

ஒரு காட்டில் வசித்துவந்த சாதுவுக்குத் தனது குடிசையைப் பழுது பார்ப்பதற்குப் பொருள் தேவையாக இருந்தது. அண்மையில் உள்ள இராச்சியத்துக்குச் சென்று அரசனிடம் தேவையான உதவி கேட்பதற்காகச் சென்றார். அவ்வாறு சென்று அரசன் எங்கே இருக்கின்றார், அவரைக் காணவேண்டும் என வினவி நின்றார். அரண்மனை அமைச்சர் சாதுவை வரவேற்பு மண்டபத்தில் அமரும்படி பணித்து, அரசன் பிரார்த்தனை செய்கின்றார் என்பதனையும் தெரிவித்தார். சாது அமர்ந்த வரவேற்பு மண்டபத்தின் அருகாமையிலேயே வழிபாட்டு அறையும் இருந்தது. அரசனுடைய வழிபாடு சாதுவுக்கு மிகவும் துல்லியமாகக் கேட்கக் கூடியதாக இருந்தது. ''ஆண்டவனே! அகில உலகத்துக்கும் நாயகராக விளங்கும் தேவனே! எனக்குத் தேவையான செல்வத்தையும் சுபீட்சத்தையும் இன்றுள்ள நிலைமையிலும் கூடத் தாராளமாக அள்ளி அள்ளி வழங்குக! தங்கள் கருணை மழை என்மீது பொழியவேண்டும் என மீண்டும் மீண்டும் வேண்டுகின்றேன். எனது வேண்டுகோளை நிறைவேற்றவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.'' இந்தப் பிரார்த்தனையைச் செவிமடுத்த சாது சடுதியாகத் தமது இடத்திலிருந்து எழும்பிச் செல்வதற்கு ஆயத்

தமானார். அரசனும் தனது பிரார்த்தனை முடிந்து வரவேற்பு மண்டபத்துக்கு வரவும் சாது செல்வதனைக் கண்டு "வந்த காரணம் என்ன?" என்று வினவ, எனது குடிசையைப் புதுபிக்கப் பணம் கேட்டுப் பெற்றுப்போகலாம் என்று இங்கு வந்தபோது, இறைவனிடம் மன்றாடித் தாங்கள் மேலும் மேலும் திரவியம் வேண்டும் என்று, பிச்சை வேண்டி நிற்கும் பிச்சைக்காரனிடம் நான் எவ்வாறு பிச்சை வேண்டிப் பெறுவது? அதுதான் நான் நேரே அந்த அற்புத சக்தியிடம் பிச்சை கேட்போம் என்ற நோக்கத்துடன் செல்கின்றேன் என்று கூறி அகன்றார்.

---

**யாதானும் நாடாமல் ஊராமல் என் ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.**

கற்றவனுக்கு எந்த நாடும் நாடாகும், எந்த ஊரும் ஊராகும். இதுவே உண்மையாக இருந்தும் ஒருவன் சாகும் வரைக்கும் கல்லாமலிருப்பது எதனால்?

**ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஒரு பிறவியிலே தான் கற்ற கல்வியானது, ஒருவனுக்குத் தொடர்ந்து வரும் ஏழுபிறப்புக்களிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையது ஆகும்.

**கல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார் கண்பட்ட திரு.**

கல்வியறிவு உடைய நல்லவரிடம் உள்ளதான வறுமையைவிடக் கல்லாதவரிடம் சேர்ந்த அளவற்ற செல்வமானது பெரிது துன்பம் தருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 எதனை எண்ணுகின்றாயோ நீ அதுவாகி விடுகின்றாய்!

ஆசிரியர் ஒருவர் வகுப்பில் ஒரு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்களுள் ஒருவன் அவதானமற்றிருப்பதனைக் கவனித்தார். இந்த மாணவன், ஏதோ ஒரு கற்பனை உலகத்தில் ஜீவிப்பதாகத் தோன்றியது. அவனை நோக்கி ஏன் அவ்வாறு பாடத்தில் அவதானமற்றிருக்கின்றாய் என்று கேட்டார். பாடத்தில் தான் கவனம் செலுத்தவில்லை என்பதனை மாணவன் ஒப்புக்கொண்டான்.

தனது வீட்டில் ஒரு அழகிய காளை ஒன்று உண்டு. தான் தனது வீட்டில் இல்லாத மறு நேரங்களில் எப்போதும் தனது எருதுக் கன்றைப் பற்றியே சிந்திப்பது தனது தொழிலாகி விட்டது என்றான்.

ஆசிரியர் அந்த மாணவனைப் பார்த்து "அதோ தெரியும் குன்றின் உச்சியில் அமர்ந்து, உனது ஆசைக்குரிய காளையைப் பற்றி எண்ணியபடி இரு" எனக் கூறினார். மாணவனும் ஏழு நாட்கள் தொடர்ந்து குன்றின் மேல் அமர்ந்து தனது எருதைப் பற்றியே சிந்தனையில் ஆழ்ந்தான், அதன்பின் எருதைப்பற்றிச் சிந்திப்பதனை விட்டு மீண்டும் பாடசாலைக்கு வந்தான். வகுப்பு அறைக்கு வெளியே நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அந்த மாணவனைப் பார்த்து "உனது காளையைப் பற்றிய தியானம் முடிந்துவிட்டால் வகுப்பு அறைக்குள் வரலாமே" என்றார். "இனிமேல் நான் குன்றுக்குப் போக மாட்டேன். ஆனால் வகுப்பு அறைக்குள் வர இயலாமல் இருக்கின்றேன். எனது தலை இருமருங்கிலும் நீண்டு வளர்ந்துள்ள கொம்புகள் தடையாக இருக்கின்றன. இடைவிடாது எருதையே சிந்தித்துக்கொண்டிருந்த மாணவன் தான் அதுவாகவே மாறிவிட்டான் என எண்ணலானான்.

மனத்தை ஒரு வழிப்படுத்தியதனால் வந்த பலன் இதுவானால், தெய்வீகத்தன்மை வாய்ந்த மனிதன் தெய்வத்தின் மீது தனது மனத்தை ஒருவழிப் படுத்தினால் பேரின்பக்கடலுள் திளைத்தின்புறுவான் என்பது உண்மை.

---

**கல்லாதான் சொற்கா முறுதல் முலைஇரண்டும்**
**இல்லாதாள் பெண் காமுற்றற்று.**

*கல்லாதவன் தானும் அவையிற் பேச வேண்டும் என்று விரும்புதல் முலைகளிரண்டும் இல்லாதவளான பெண் பெண்மையை விரும்புதல் போன்ற அறியாமை ஆகும்.*

**கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

*தான் முயன்று கற்கவில்லை என்றாலும், கற்றவரிடம் கேட்டாவது அறிவு பெறவேண்டும். அது ஒருவன் தளர்ச்சி அடையும்போது ஊன்று கோல் போலத்துணையாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

# நடப்பவை யாவும் நன்மையின் பாற்று

மிசீர் என்னும் மாகாணத்தில், இதில் சொல்லப்படும் சம்பவம் நிகழ்ந்தது. ஒரு வறியவன்—பரம பக்தன். காட்டுக்கருகே குடிசை ஒன்றில் வாழ்ந்துவரலானுன். அவனுடன் மனைவியை விட உழைக்கும் எருது ஒன்றும் இருந்தது. இக்குடும்பத்துக்கு இந்த எருது ஒன்றுதான் உழைத்தூட்டும் உழைப்பாளியாக இருந்தது. எருதின் முதுகில் பொதியை வைத்து நகர்ப்புறத்திலுள்ள சந்தைகளுக்குக் கொண்டு செல்வான். வீடு காக்கும் நாயும் ஒன்று இருந்தது. இத்தனையோடு ஒரு கிளியையும் மிகவும் ஆசையோடு (அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை) வளர்த்து வந்தனர். இக்கிளி இரவு கழிந்து விடியும் நேரம் பார்த்து "எழும்புங்கள்? இறைவனுக்கு தோத்திரம் சொல்லுங்கள் அப்பா!" என்று கூறிக் கூறிக் கூப்பிடும்.

ஒருநாள் அடவியிலிருந்து ஒரு சிங்கம் வந்து இந்த ஏழையின் எருதைக் கொன்று விட்டது. சிங்கத்துக்கஞ்சிய நாய் வீட்டுக்குள் ஒளித்துக் கொண்டது. விடிந்ததும் குடியானவன் எழுந்தான். மாடு இறந்து கிடப்பதைக் கண்டான். "இது மிகவும் நன்று! ஆண்டவன் செய்வது எல்லாம் நன்மைக்கே! ஆண்டவனது ஆணைப்படியே இது நடந்து விட்டது. ஆகவே இதனுல் நன்மையல்லாது வேறில்லை" என்முன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார்த்தைகளைச் செவிமடுத்த இல்லக்கிளத்தி மிகவும் அதிருப்தி கொண்டாளாயினும் ஒன்றும் சொன்னுளில்லை. துன்பங்கள் ஒரு போதும் தனித்து வருவதில்லை. அன்று மாலை ஏதோ ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையில் கிளி கூட்டிலிருந்து வெளியே வந்தது. அதனை அங்குள்ள நாய்பிடித்துக் கொன்றுவிட்டது. இதனைக் கண்ணுற்ற வீட்டுத் தலைவன், "நன்று! மிக நன்று! இறைவன் மேன்மையானவற்றையே என்னுளும் செய்வார்" என்று சமாதானமும் சொன்னுர். அவ்வாறு வீட்டுத்தலைவன் மீண்டும் எல்லாம் நன்மைக்கே என்று கூறியதும் தாங்கொணுத் துக்கத்தில் மனைவியானவள், தன் தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டாள். கோப மிகுதியினுல் செய்வது அறியாதவளாய் ஒரு எதிர்ச்சொல்லும் சொல்லாதிருந்து விட்டாள். ஒருசில வேளைக்குப் பின்பு எவரோ ஒருவர் வந்து "உங்கள் நாய் ஏதோ தாங்கமுடியாத வலியினுல் துடி துடித்துப் புரளுகின்றது" என்று சொன்னுர். அந்தக் காவலனும் காலனுக்குத் தன் ஜீவனைத் தந்து உறங்கிவிட்டது. மீண்டும் வீட்டுத் தலைவன், "இறைவன் செய்வது எல்லாம் நன்மைக்கே" என்று கூறினுன்.

ஆற்றொணுத் துயரம் பொங்கிவரத் தன் புருஷனைப் பார்த்து, "கருத்தில்லாத இந்தச் சொற்களின் வடிவம் தான் என்ன? எங்கள் ஜீவனத்துக்கு ஒரு ஆதாரமும் இல்லாமல் பட்டினியாக இருந்து காலம் கழிக்க வேண்டியதே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையை விரித்து விடியும் வரை தூங்கிக் கொள்ளுங்கள். உணவு தந்த எருதும் நித்திரை விட்டு எழுவதற்கு உதவிய கிளியும் எங்களை விட்டகன்று விட்டன. நன்றியுள்ள நாயும் நமனுலகம் நண்ணிவிட்டது. எவராவது ஒருவர் எங்களையும் இந்த உயிர்கள் சென்ற சுடலைக்குக் கொண்டு விடுவார்கள். அப்போது ஆண்டவனின் அற்புதச் செயலின் சிறப்பை நீங்கள் நன்ருக அறிவீர்கள்." என்று கூறினுள்.

"எது நடந்துவிட்டதோ அதனை எவராலும் மாற்றவோ, நிறுத்தவோ முடியாது" என்று குடியானவன் மிகவும் அமைதியாகவும் சந்தோசமாகவும் கூறினுன். நடப்பது யாவும் ஆண்டவனின் அனுமதியின் பேரில் நடப்பது என்ற அசையாத நம்பிக்கை கொண்டிருந்தான். அவனது மனைவியின் கேலி நிறைந்த ஆவேசப் பேச்சினுல் அவன் ஒரு விதமாகவும் ஆட்டங்காணவில்லை ஆனுல் அவனது அகத்தாள் அதிக வியாகூலமடையலானுள். எவ்வாறு நாளாந்த வாழ்க்கையை ஓட்டுவது என்ற பயங்கரப்பீதி அவளை வாட்டி வதைக்கலாயின.

பகலவன் சென்றுவிட்டான். இராப்போதாகின. இருவரும் தூங்கலாயினர். விடிந்தெழுந்தனர். வெளிப்பக்கமாகச் சென்றனர். எங்கும் இறந்து சிதறுண்டு கிடக்கும் முண்டங்களைக் கண்டனர். சென்ற இரவு கொள்ளையர் கூட்டம் இவர்களது குடிசைக்கண்மையில் உள்ள நகரத்துக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்து சூறையாடியுள்ளார்கள். ஒருவரையும் உயிருடன் விடவில்லை. வீடு வீடாகச் சென்று சட்டி பானை முதலிய எல்லாவற்றையும் எடுத்துச் சென்று விட்டனர். காட்டுக்கண்மையாக ஏதும் வீடுகள் காணப்படின், அத்தோடு நாய்களின் நடமாட்டங்களும் இல்லாதிருக்குமாயின், வழமையாக அவ்வாறான வீடுகளில் ஆள் நடமாட்டம் இல்லை என்றுதானே கொள்ளப்படுகின்றன. அவ்வாறு எண்ணி வந்த கொள்ளையர் கூட்டம் இந்த ஏழையின் வீட்டுப்பக்கம் செல்லாது சென்றுவிட்டனர். ஆகவே ஆண்டவன், தமக்கே உரிய, எமக்கெல்லாம் புரியாத முறையில், இந்த இறைவழி வாழும் ஏழையையும் இவனது இல்லாளையும் இரட்சித்துள்ளார்—இறைவன்.

ஏழைக்குடியானவன் தமது மனைவியைப் பார்த்து, "இதோ பார்! எங்கள் வீட்டு நாய் சென்ற இரவு உயிருடன் இருந்திருக்குமாயின் எங்கள் உயிர் கொள்ளையர்களிடம் சென்றிருக்கும். எருதைக் கண்டிருப்பார்களாயினும் நாம் தப்பியிருக்க மாட்டோம். கிளியும் எங்கட்குத் தீங்கையே கொண்டுவந்திருக்கும். இறைவனது பெருங்கருணைத் திறத்தினாலேயே இவ்வாறான சூழ்நிலையைத் தருவித்து எம்மை இன்னும் அவனது அருமை பெருமைகளை முழுக்க முழுக்க கண்டின்புற்று வாழவிட்டுள்ளார். "நடப்பது யாவும் நன்மைக்கே" என்பதில் இன்னும் உனக்குச் சந்தேகம் இருக்குமா; என்று பக்தன் தன் பத்தினியிடம் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

# எனது நெஞ்சைக் கொள்ளை கொண்ட கிருஷ்ணா!

மீராபாய் என்பவர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் உயர்ந்த பக்தையானவர். இவர் விவாகமானவராக இருந்தபோதிலும் தமது வாழ்வை கிருஷ்ண பரமாத்மாவுக்கு அர்ப்பணித்துவிட்டார். விவாகத்தின் பின்பும் ஸ்ரீ கிருஷ்ணனை வணங்குவதும் பாடி மகிழ்வதுமாக இருப்பதனைக் காண முடிந்தது. தெய்வீகம் நிறைந்த அதி உயர்ந்த தனது ஆண்டவனை அடைவதற்கு அவஸ்தைப்பட்டுக்கொண்டு அதேவேளை உலோகாயுத வாழ்க்கைக்கு முற்றும் மாறுபட்டவராகக் காணப்பட்டார்.

மீராபாய் ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி. உதயபுரி இளவரசனுக்கு மனைவியாக்கப்பட்டார். எல்லையற்ற பக்திமயக்கம் காரணத்தால் இவளது மைத்துனியினாலும் மற்றவர்களாலும் அதிக துன்பத்துக்குள்ளானாள். அவளது நாயகன் மீராபாய் மீது அன்பாகவும் இரக்கமாகவும் நடந்துவந்தார். ஒருநாள் தமது மனைவியைப் பார்த்து மேல்வருமாறு சொன்னார். "யான் உமது முறையாக விவாகம் செய்த நாயகன், ஆகவே உமது அன்பையும் பாசத்தையும் முற்றாகப் பெறும் உரித்துடையவன். ஆனால் நான் உம்மிடம் வரும்போதெல்லாம் வெறிகொண்ட தெய்வீகமான பரவச நிலையில் காணப்படுகின்றீர். என்னுடன் ஒரு சிறு நேரமாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாட நேரமில்லாது இருக்கின்றீர். நான் மிகவும் ஆவலோடு விரும்புவது, உமது அன்பில் ஒரு பகுதியையாவது என்னுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே! இதற்கு என்ன பதில் கூறப்போகின்றீர்?''

மீராபாய் பதில் கூறுகின்றார்:- "எனது நாயகரே! தாங்கள் கூறியது முற்றிலும் உண்மையானது. கடமை உணர்ச்சியுள்ள மனைவி எப்போதும் நாயகனுக்கு சேவை செய்வதோடு அன்பையும் சொரிய வேண்டும். ஆனால் யான் என்ன செய்வது? நான் சிறுமியாக இருந்த நாள்தொட்டே ஸ்ரீ கிருஷ்ணனிடம் என்னை அர்ப்பணித்துவிட்டேன். எனது இருதய அறை அவனால் நிரம்பிவிட்டது. உமக்கு அங்கு தங்குவதற்கு இடம் இல்லை. யான் செயலற்றவளாக இருக்கின்றேன். யான் உம்மிடம் அன்பு செலுத்த வேண்டுமென த் தீர்மானித்தாலும் அதுதான் முடிவதில்லை. ஆகவே எனது நிலையை முற்றாக உணர்ந்த தாங்கள் என்னை முற்றாக மறந்துவிடுவது எவ்வாறான உயர்ந்த அனுக்கிரகச் செயலாகும்''

---

**எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

எந்தப் பொருளைப் பற்றியும், எவரிடமிருந்து கேட்பதானாலும், அப்பொருளினது மெய்யான தன்மைகளைக் காண்பதுதான் அறிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 கருவமும் கருணையும்

ஸ்ரீ ஏகநாத் மகராஜ் ஒரு இல்லறவாசி. அவருக்கு மனைவியும் ஒரு மகனும் உண்டு. இவர்கள் மிகவும் வறுமையில் வாடினார்கள். இருந்தும் இறை அன்பில் மிகவும் செல்வர்களாக வாழ்ந்தார்கள். மிகவும் எளிமையான ஜீவியம் நடாத்தி வந்தனர். ஸ்ரீ ஏகநாத் மகராஜ் தினமும் ஸ்ரீமத் பகவத் கீதையிலிருந்தோ வேறு இதிகாச புராண நூல்களிலிருந்தோ, கிராம மக்களுக்கு வாசித்து வியாக்கியானம் செய்து வருவார். இதனால் ஊர்மக்கள் இவரது பேருரையில் ஈர்க்கப்பட்டனர். இவ்வாறு பல வருடங்கள் உருண்டோடிவிட்டன. இதே வேளை ஸ்ரீ ஏகநாத் மகராஜின் மகன் வேதாகம நூல்களைக் கற்பதற்காக காசி நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டு படிப்பைப் பூர்த்தி செய்து வீடுதிரும்பியிருந்தார்.

ஒருநாள் ஸ்ரீ ஏகநாத் மகராஜ் சமஸ்கிருத மூலத்தில் உள்ள சுலோகத்தை வாசித்து மாரதி பாஷையில் மக்களுக்கு விளக்கினார். இதனைக் கண்ணுற்ற மைந்தன், தந்தையை நோக்கி, மாரதியில் விளக்குவது நல்லதல்ல. அத்தோடு சரியான முறையுமல்ல. சமஸ்கிருதத்திலேயே விளக்க வேண்டுமென்றான். இதற்கு விடையாக, "இதுவரை காலமும் யான் மாரதி பாஷையிலேயே விளக்கி வந்துள்ளேன். கிராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிகளுக்குப் புரிந்த பாஷை. அவர்களும் வெகுவாகப் பாராட்டிக் கேட்டு வருகின்றனர். எல்லோருக்கும் சமஸ்கிருதம் வராது. அத்தோடு எம்மாலும் அப்பாஷையில் இலாவகமாக விளக்க இயலாது'' என்ருர். அடுத்த நாள் மகன் மூலத்தை வாசித்துப் பயனையும் சமஸ்கிருதத்தில் சொல்லலானுன். முதல்நாள் கிராமவாசிகள் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனுல் இவருடைய வியாக்கியானத்தில் முந்திப் பெற்ற பக்தி பரவசம், மெய்ப்பாடு முதலியன இல்லாதிருந்ததைக் கண்டனர். மகனுடைய ஆழ்ந்த கல்வி— அவனுடைய தந்தையாருடைய எளிமை மிகுந்த பக்திக்கு ஈடாகாதெனக் கண்டனர். மெல்ல மெல்ல மக்கள் கூட்டம் குறைந்து வரலாயினர். இறுதியாக மக்கள் ஒருவருமே வராததிஞல் வியாக்கியானம் விடப்பட்டது. மக்கள் ஒன்றுகூடி ஏகநாத் மகராஜ் அவர்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு வேண்டினர். படித்த மேதையாகிய மகன் தடுத்து விட்டான். அவ்வாறு செய்வதாகில் சமஸ்கிருதத்திலே செய்யலாம் என்று பணித்தான்.

இது இவ்வாருக முடியவும், படித்த மேதை — மகனுடைய அகங்காரம் அடங்குவதற்கான ஒரு நிகழ்ச்சி திருவருளினுல் நிகழலாயின. இவர்கள் வாழும் கிராமத்தில் உள்ள வறிய கிழவி ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம் கொடுக்க வேண்டுமென்று ஒரு அரிய பிரார்த்தனை செய்திருந்தாள். ஆனுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது எண்ணத்தை நடைமுறைப்படுத்தும் வழிவகை அவளிடம் இல்லை. ஒரு சாதுவிடம் தனது நிறைவேறாத பெருவிருப்பத்தைப்பற்றி எடுத்துரைத்து ஆலோசனை கேட்டாள். ஏகநாத் மகராஜ் அவர்களுக்கு அன்னதானம் செய்தால் ஓராயிரம் பிராமணர்களுக்கு அன்னதானமிட்ட அரிய செயலுக்குச் சமானமாகும் என்று எடுத்துரைத்தார். கிழவி மிகவும் குதூகலித்து, உடனே ஏகநாத் மகராஜ் அவர்களிடம் சென்று தனது உள்ளக்கிடக்கையை உரைத்து, தானத்துக்கான தினத்தை நிர்ணயித்து அதனை ஏற்குமாறு விநயமாகக் கேட்டுக் கொண்டாள். ஆனால் தனது மகன் இந்த ஒழுங்குகளுக்கு ஒரு தடைக்கல்லாக நின்றான். ஈற்றில் மகனுடைய கேள்விகளுக்கு இணங்கி, தானத்துக்குரிய உணவைச் சமைத்து ஸ்ரீ ஏகநாத் மகராஜ் அவர்களுடைய இல்லத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்பதாக இணக்கம் கொண்டுவரப்பட்டது.

இதன் பிரகாரம் மூதாட்டி உணவை தமது புக்ககத்தில் சரி செய்து ஸ்ரீ ஏகநாத் அவர்கள் வீட்டுக்குக் கொண்டுசென்று மிகவும் பக்திசிரத்தையுடன் பரிமாறினாள். உணவு உண்டு முடியவும், இலையில் எஞ்சியிருந்த பிரசாதத்தை மூதாட்டி தாம் அருந்துவதற்கு எடுக்கப்போகும் தருணத்தில் அதனை விரும்பாத படித்தமேதையான மகன் இலையைப் பிடுங்கி வெறுப்புணர்ச்சியோடு வீசிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை இருந்து சாப்பிட்ட இடத்தை துப்பரவு செய்ய மீண்டும் அந்த இடத்துக்கு மகன் வந்தபோது பேரதிசயம் காத்திருந்தது. வீசிய இலைபோன்று வேருெரு இலை அதேயிடத்தில் காணப்பட்டது. அதனையும் வெறுப்புடன் கல்விச்செருக்குள்ள மகன் வீசினுன். இவ்வாறு ஓராயிரம் இலைகள் தோன்றின.

இந்த அதியற்புதச் செயல் மகனுடைய அகக்கண்களைத் திறக்கச் செய்தது. உண்மை ஞானம் கல்வியினுல் அன்று! கடவுள்மீது வைக்கும் பக்தியும் அன்புமே உண்மை ஞானத்தைத் தரும் என்பதனை அறிந்து கொண்டான் தனது தந்தையின் திருவடிகளில் வீழ்ந்தான். கண்ணீர் மல்க அழுதான். தமது பேதமைக்கு இரங்கினுன். மன்னிக்கும் வண்ணம் மன்ருடி நின்ருன்.

இக்கதையின் படிப்பினை! ஒன்றும் தெரியாது என இருப்பதுவே உண்மை அறிவு. கடவுளை அறிவதற்கு முன்பு நீ படித்தவற்றை மறந்துவிடு! எல்லாம் தெரியும் என்று கூறுபவர்களுக்கு அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. நீ உள்ளத்தில் மிகவும் எளிமையாக உள்ளாயானுல், பிரபஞ்சம் யாவையும் ஆளலாம்.

---

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

உயர்ந்தோர் எவ்வாறு வாழ்கின்ருர்களோ, அவ்வாறே அந்த உயர்ந்தவர்களோடு தானும் அங்ஙனமே வாழ்வது தான் அறிவுடைமை ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 33 விடுதலையே இலக்கு

ஐரோப்பாவில் ஒரு யுத்தம் நடைபெற்ற போது ஒரு மாலுமி பகைவரினால் கைப்பற்றப் பட்டு மறியலில் வைக்கப்பட்டான். யுத்தத்தி லீடுபட்ட இரு பகுதியினரும் பதினைந்து ஆண் டுகட்குப் பின்பு செய்து கொண்ட உடன்படிக்கை காரணமாக மறியலில் வைக்கப்பட்ட மாலுமி விடுதலை பெற்றான். விடுதலை கிடைத்த தினத் தன்று ஒரு நண்பன் 50 பவுண் அடங்கிய ஒரு உறையை இவனுக்குக் கொடுத்தான். நடைசாலை ஓரமாக இவன் நடந்து செல்லும்போது ஒரு கடையில் பல வர்ணங்கள் கொண்ட பறவை களைக் கூடுகளில் விற்பனைக்காக இருப்பதனைப் பார்த்தான். இவன் அக்கடைக்குச் சென்று கூடு களில் அடைபட்டுக்கிடந்த அத்தனை பறவை களையும் தன்னிடமிருந்த ஐம்பது பவுணையும் கொடுத்துப் பெற்று அவைகளைச் சுவாதீனமாகச் செல்லும்படி ஒவ்வொன்ருகப் பறந்துபோகச் செய்தான். கடைக்காரன் இவனது செயலைக் கண்டு பேரதிர்ச்சியடைந்தான். கடைக்காரன் இவனை நோக்கி "அதிக பணம் செலவு செய்து இப்பறவைகளைப் பெற்று இவ்வாறு பறக்க விட்டதில் நீர் கண்ட பலன் என்ன?" என்று வின விஞன். மாலுமி அவனை விழித்து "ஓ! அதுவா! நீர் பாரும்! சிறைச்சாலை வாழ்வு என்பதின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தம் அதனை அனுபவித்தவனுக்குத்தான் தெரியும். விடுதலையை மறுக்கப்பட்ட வகையில் வாழ்ந்தபடியினுல், பதினைந்து ஆண்டுகள் சிறைச்சாலையில் துன்பம் அனுபவித்த காரணத்தினுல், இப் பறவைகளும் கூடுகளில் துன்பங்களை அனுபவிக்கக்கூடாது'' என்று கூறினுன்.

இதே போன்றுதான் ஆன்மீக ஞானம்பெற்ற ஞானி ஒருவர், அறியாமைச் சங்கிலியினுல் பிணைக்கப்பட்டோரை விடுவிப்பதில் அதிக விருப்பம் உள்ளவராகக் காணப்படுகிருர்.

---

**இவற்லும் மாண்பு இறந்த மானமும் மாணு**
**உவகையும் ஏதம் இறைக்கு.**

ஈயாத உலோபமும், மாட்சியில்லாத மான வுணர்வும் தகுதியில்லாத உவகையும் தலைவனுக இருப்பவனுக்குக் கேடு தரும் குற்றங்கள் ஆகும்.

**அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியா ரைப்**
**பேணித் தமராக் கொல்**

பெரியோரையே விரும்பித் தமக்குரிய சுற்றத்தினராகப் பெற்றுக் கொள்ளுதல், பெறுதற்கரிய பேறுகளுள் எல்லாம் அரிதான பெரும்பேறு ஆகும்.

**பல்லார் பகை கொளலின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர் கைவிடல்.**

பலரோடும் பகைத்துக் கொள்வதைவிட, நல்லோருடன் கொண்ட தொடர்பைக் கைவிட்டு விடுதல், அதனினும் பதின்மடங்குதீமை தருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34 அரசனும் அடிமையும்

அரசன் ஒருவருக்கு ஒரு அடிமை மிகவும் விசுவாசமாகவும் நேசமாகவும் சேவை செய்துவந்தான். தனது அரசனை எப்போதும் போற்றியும். எந்தநேரமும் சேவைபுரிய ஆயத்தமாகவும் இருந்தான். அடிமையின் உண்மைத்தன்மையை நன்ருக உணர்ந்து அவனைத் தனது முதல் அமைச்சராக நியமித்தார். இவ்வாறு அடிமையாக இருந்த ஒருவன் முதல் அமைச்சராக இரவோடிரவாக மாறியதைக் கண்ட மற்ற அமைச்சர்கள் தங்களுக்குள் முணுமுணுக்க ஆரம்பித்தனர். அடிமையான முதல் அமைச்சர் மீது பொருமை கொண்டனர். எல்லா அமைச்சர்களும் இது காரணமாக ஒன்று கூடி தங்களுடைய மனக்குறையை எடுத்துக் கூறினர். இவர்களுடைய மனச் சஞ்சலத்தை மிகவும் அமைதியாகக் கேட்டுவிட்டு, "இன்றிலிருந்து ஒரு கிழமை முடிய நீங்களும் முதல் அமைச்சரும் எம்மை இதிலிருந்து ஐந்து கல் தொலைவில் உள்ள பூஞ்சோலையில் உள்ள விடுதியில் சரியாக மாலை 4-00 மணிக்கு என்னை வந்து சந்திக்க வேண்டும். எவர் ஒருவர் என்னை வந்து முதலாவதாகச் சந்திக்கிருரோ அவரே எம்மீது உண்மையான அன்பும் மரியாதையும் உள்ளவர் எனத்தீர்மானிப்பேன் என அரசன் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில நிமிடத்தின் பின்பு, முதல் அமைச்சரை வரவழைத்து அமைச்சர்களுக்குத் தான் கூறியதைச் சொல்லிவிட்டு, அமைச்சர்கள் தம்மை வந்து காண இருக்கும் பூஞ்சோலைக்கு இட்டுச் செல்லும் சாலை இரு மருங்கும் வீடுகளும் விடுதிகளும் கூடாரங்களும் அமைக்கும்படியும், அங்கு மனதைக் கவரும் சிற்றுண்டிச்சாலைகளும் பொருட்களும் வைக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டார். அவ்வாறு வருபவர்கள் கால்நடை மூலமே வரவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

குறித்த நாளும் வந்துவிட்டது. முதல் அமைச்சரும் மற்றும் அமைச்சர்களும் பிரயாணம் செய்ய ஆயத்தமானார்கள். இவ்வாறு இவர்கள் நடந்து செல்லும் போது முதல் அமைச்சரைத் தவிர்ந்த ஏனையோர்கள் வீதியருகே உள்ள காட்சி சாலைகளுக்கும் விநோதங்களுக்கும் சிற்றுண்டிச் சாலைகளுக்கும் சென்று களித்து ஆனந்தித்தனர். இவை யாவும் இலவசமாகக் கிடைத்த படியினால் நன்றாகச் சுவைத்தனர். அரசனைச் சந்திக்க அதிக நேரம் இருப்பதாக அவர்கள் எண்ணிய காரணத்தினால் களியாட்டங்களில் கழித்தனர். ஒவ்வொரு இடத்திலும் தாமதித்து தாமதித்து நின்று அங்குள்ள வைகளைக் கண்டு களித்தனர். இவ்வாறாக நேரம் ஓடிவிட்டது. பிரதம அமைச்சர் இரு மருங்கையும் பாராது கூட்டம் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்த பூஞ்சோலைக்குத் தீர்மானிக்கப்பட்ட நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றடைந்துவிட்டார். சில அமைச்சர்கள் அரை மணித்தியாலம், சில அமைச்சர்கள் ஒரு மணித்தியாலம் பிந்தியே வந்தனர். சிலர் வராது நின்று விட்டனர்.

அடுத்த நாள் எல்லா அமைச்சர்களையும் அழைத்து பின்வருமாறு கூறினர். இந்த அடிமையை (சுட்டிக் காட்டி) ஏன் முதல் அமைச்சராக்கினேன் என்று இப்போது உங்களுக்கு விளங்கி இருக்குமென எண்ணுகின்றேன். இந்த உயர்ந்த பதவிக்குத் தகுந்த அதி உத்தம குணங்கள் பொருந்தியவர் இவர் என்பதனை அறிந்தே முதல் அமைச்சர் பதவியை இவருக்கு அளித்தேன். அமைச்சர்கள் வெட்கத்தில் தலையைத் தொங்கப் போட்ட படி அரசனுடைய முடிவை வரவேற்றனர்.

இது போன்றே, இறைவனின் அதி உயர்ந்த உண்மை ஊழியர்கள் ஆண்டவனையேயன்றி வேறு ஒருவரையும் மனதில் சிந்திக்கவே மாட்டார்கள். ஆண்டவனை அடையும் நேர்வழியை நோக்கிச் செல்வார்கள். வீதி ஓரங்களிலுள்ள கவர்ச்சிகளை கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். உலக பந்த பாசங்களிலும் உழல மாட்டார்கள். உயிருக்கு உறுதுணையான இறைவனையே நாடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35 சமாதி என்பது என்ன?

சிவபெருமானுக்கும் பார்வதி தேவியாருக்கும் இடையில் ஒருபோது சுவையான சம்பாசனை ஒன்று நடந்தது.

மும் மூர்த்திகளில் ஒருவரான சிவபெருமான் எவ் வேளையிலும் சமாதி நிலையிலே காணப்படுவார். அவர் அதிகமாகக் காணப்படும் இடம் சுடுகாடாகவே இருக்கும். பிரபஞ்சத்தை விட்டுப் பிரியாதவராகச் சுதந்திரமாகத் திரிவார். இவ்வாறு திரியுங் காலங்களில் பார்வதி தேவியை கைலயங்கிரியில் இருக்கும்படி விட்டுவிடுவார். "தனக்கும் சமாதி நிலையைக் கற்றுத் தந்தால் இறைவனைப் பிரிந்திருக்கும் நிலையைத் தான் மறந்தவண்ணம் இருக்கலாம்" என இறைவனிடம் கேட்டார்.

உடனே பார்வதி தேவியை பத்மாசனத்தில் அமரும் வண்ணம் பணித்தார். கண்களை மூடச் சொன்னார். மனத்தை உள்நோக்கிச் செலுத்தித் தியானிக்கும் வண்ணம் கூறினார்.

அதன் பின்பு மேலே உள்ளவாறு சம்பாசனை நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்: இப்போது நீ எதைக்காண்கின்றாய்?

பார்வதி: எனது மனத்திரையில் தங்களின் விம்பம் தெரிகின்றது.

சிவன்: அதற்கும் அப்பாற் சென்று பார்க்கவும். என்ன தெரிகின்றது?

பார்வதி: ஒரு பிரகாசமான ஒளி தெரிகின்றது.

சிவன்: அந்த ஒளிக்கும் அப்பாற் செல்க இப்போது என்ன தெரிகின்றது?

பார்வதி: "ஓம்" என்ற நாத ஒலியின் சப்தம் கேட்கின்றது.

சிவன்: அந்த ஒலிக்கும் அப்பாற் கடந்து செல்க. இப்போது என்ன அனுபவம் அடைகின்றாய்?

பார்வதியிடமிருந்து சிவனார் கேட்ட வினாவுக்குப் பதிலே கிடைக்கவில்லை. பிரபஞ்சத்துடன் இரண்டறக் கலந்த நிலையில் பார்வதிதேவியார் அமர்ந்துவிட்டார். இவருக்கு கேள்விக் குரிய விஷயம் ஒன்றும் இல்லை. பெறுவதற்குரிய ஒரு குறியும் இல்லை. விசாரணையும் இல்லை. விசாரணைக் குரிய விடயமும் இல்லை. இவை யாவும் உண்மையான, என்றும் உள்ள ஒன்றினுடன் சங்கமமாகி விட்டது. இப்போது மாற்றம் இல்லாத, நாமம் இல்லாத உருவம் இல்லாத இரண்டறக் கலந்த காட்சியான பிரமம் ஒன்றே எஞ்சி உள்ளது. இந்நிலையும் ஒரு சில நேரத்தின் பின்பு, பார்வதியார் சடநிலைக்கு மாறிவரும் போது "நான் பிரமம்" என்று மெதுவாகக் கூறும் சப்தம் கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி தேவிக்கும் பரமசிவனுக்குமிடையே நடந்த இச்சம்பாஷணை மெய்யோ பொய்யோ என்பது கேள்விக்குரியதன்று.

தியானத்தின் வளர்ச்சியும் ஈற்றில் வந்து அடையும் பலாபலன்களும் இவ்வித எடுத்துக் காட்டுக்களினுல் விளக்கம் பெறுகின்றது.

---

வாழ்க்கை என்பது நிலேயற்றது. ஒரு நிழல் போன்றது. ஒரு கவளம் உண்ண, ஒரு ஆடை உடுக்க, ஒரு மூலே படுக்க மலே போன்ற துன்பக் குவியலில் ஒரு கடுகளவு இன்பம்; ஒரு மரத்திலுள்ள இலே போன்றது வாழ்க்கை. மரத்துடன் சம்பந்தம் இருக்கும்வரை அதற்குப் பசுமையும் பெருமையும் உண்டு. மரத்திலிருந்து பிரிந்து விட்டாலோ காற்ருல் அலேப்புண்டு, காலால் மிதியுண்டு, மேட்டிலும் பள்ளத்திலும் உருண்டோடி 'செத்தை' என்று ஒதுக்கப்பட்டு மட்கி மடிகிறது. ஆண்டவன் என்ற மரத்துடன் தொடர்பு இருக்கும்வரை அதற்கு அழகுண்டு; ஆற்றலுண்டு. தொடர்பு நீங்கினுல் அழிவுதான்.

---

**நல்லினத்தின் ஊங்கும் துணே இல்லே தீயினத்தின்**
**அல்லற்படுப் பதூஉம் இல்.**

நல்ல இனத்தைக் காட்டிலும் துணேயாவது உலகத்தில் யாது மில்லே. தீய இனத்தை விட அல்லல் படுத்துவதும் உலகத்தில் யாதுமில்லே.

**எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.**

நன்ருக எண்ணிய பின்னரே ஒரு செயலேச் செய்யத் துணிய வேண்டும். ''துணிந்த பின்னர் எண்ணுவோம்'' என்று எதையும் நினேப்பது குற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36**

# பற்றற்ற தன்மையே உண்மையான சுதந்திரம்

மச்சேந்திரநாத் என்பவரும் கோரக் நாத் என்பவரும் ஒரு முறை இடத்துக்கிடம் அலைந்து திரிந்தார்கள். இவர்களில் முந்தியவர் குரு பிந்தியவர் சீடன். சீடனே ஒரு உன்னத சிறந்த புருடன். குரு இன்னும் பூரணம் பெறுதவராக இருந்தார். குருவினது கையில் ஒரு பை இருந்தது. அதனைப் பிறிதொருவரிடமும் கொடுக்க விரும்பார். தமது சீடனிடமும் ஒப்படைக்க மாட்டார். ஒருவரிடமும் நம்பிக்கை இல்லை. அவர் எங்கு சென்றாலும் அந்தப் பையை எடுத்துக் கொண்டே செல்வார்.

இவ்வாறு குரு இந்தப் பையை எடுத்துச் செல்வதைக் கவனித்து வந்த சீடன், இந்தப் பைக்குள் யாதுதான் உளது என்பதனை அறிய வேண்டும் என்ற எண்ணம் தூண்டியது. ஆவல் உதித்தது! ஆனால் அதனை அறிய இலகுவில் தருணம் கிடைக்கவில்லை. ஒரு நாள் அந்தப் பையைத் தனது சீடனிடம் ஒப்படைத்துவிட்டு இயற்கைவழி செய்யச்சென்றுவிட்டார். இப்போது சீடன் அந்தப்பையைத் திறந்து பார்த்தான் தங்கப் பாளம் ஒன்று அதற்குள் இருந்தது. "எனது குருவை இந்தத்தங்கம் அடிமைப்படுத்தி விட்டதே! அவரை இதிலிருந்து விடுதலை பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்க வேண்டும்'' என்று இவ்வாறு சிந்தித்து அருகில் உள்ள கிணற்றுக்குள் அந்தத்தங்கப் பாளத்தை வீசிவிட்டான்.

குரு மீண்டதும் தமது பைக்குள் உள்ளது காணுததைக் கண்டு என்ன நேர்ந்தது என்பதனை வினவ, அதற்குள் இருந்த தங்கத்தைத் தானே எடுத்து வீசினது என்பதனைச் சாசுவதமாகக் கூறினுன். இதனைக் கேட்டதும் குருவுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. பெரிய கோல் ஒன்று எடுத்து ஆத்திரம் தீர கோரக்நாத்தைத் தீர்த்துக் கட்டிஞர். அடி தாங்கமாட்டாது ஓட குருவும் பின் தொடர களைத்து ஒரு பெரிய கற்பாறை அடியில் இருந்து கொண்டான். "எனது குருவினது கைகளினுல் இறப்பது நன்று'' என்று கூறினுன். ஆனல் குரு மீண்டும் மீண்டும் பலமாக அடித்துக் கொண்டே இருந்தார். அடி தாங்கமாட்டாது மயங்கி வீழ்ந்து சிறு நீரையும் இறக்கிவிட்டான். இவ்வாறு வெளி வந்த சிறு நீரைத் தீண்டியதும் சீடன் அமர்ந்த கற்பாறை தங்கமாகவே மாறி விட்டது. ஒரு சிறு தங்கத் துண்டை வீசியதற் காகக் குரு சீடனை இம்சித்தார். ஆனல் இப் போது பெரிய பாருங்கல்லே தங்கமாகிவிட்டது. இச்சம்பவம் குருவினது குருட்டுக் கண்களுக்கு உண்மையான ஒளியைத்தந்தது. தங்கத்தில் உள்ள நாகத்தை முற்ருக நீக்கிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37

## உலகபந்தம் உதவாததொன்று

ஒரு கிராம எல்லையில் ஒரு ஞானியார் வசித்து வந்தார். அவரிடம் ஒரு பக்தன் சென்று வந்தான். தனது பெற்றோர் தன்னை அதிகம் நேசிக்கிறார்கள் என்றும் அதிலும் மேலாக தனது மனைவி நேசிக்கின்றாள் என்றும் பக்தன் ஞானியாருக்குக் கூறிவந்தான். ஞானியாரிடம் இச் செய்திகளை நாளும் பொழுதும் கூறுவான்.

பக்தனுடைய இனத்தவர்களுடைய பாசபந்தங்களின் உண்மைத்தன்மையைக் காட்ட வேண்டும் என்று ஞானியார் மனதில் நினைத்தார். பக்தனைப் பார்த்து 'நீ உடனே உன் வீட்டுக்குச்சென்று வயிற்றில் தாங்க முடியாத வலி கண்டு விட்டது எனப் பாசாங்கு செய்' என்று எச்சரிக்கை செய்துவிட்டு, வாயில் போட்டு விழுங்குதவற்கு ஒரு மாத்திரையையும் தந்தார். இந்த மாத்திரையின் தன்மை என்னவெனில், அதனை வாயிற்போட்டதும் இறந்துபோன மாதிரியான பிரக்ஞை உண்டாகிவிடும் ஆனால் அறிவு தெளிவாகவும் உள்ளுணர்வும் காணப்படும்.

பக்தனும் இதற்கு இணங்கி வீடு சென்று மாத்திரையை மறுபேர் அறியாவண்ணம் வாயிலிட்டு தாங்கமுடியாத குத்துவலியெனப் பாசாங்கு பண்ணிப்படுத்து விட்டான். இதனைக்கண்ட உறவினர்கள், பெற்றோர், மனைவி, மக்கள் யாவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயோ! முறையோ என்று அலறினார்கள். இறந்தவன் போலானான். சில நாடி சென்றதும் முனி புங்கவர் பக்தனுடைய இல்லத்துக்கு வந்தார். கலவரத்தின் காரணத்தைக் கேட்டறிவார் போன்று கேட்டறிந்தார். இறந்து போனவரை எவ்வாருயினும் உயிர் மீட்டுத்தரவேண்டும் என்று எல்லோரும் ஒருமித்தும் தனித்தும் வேண்டி நின்றனர். ஞானியார் தயங்காது இணக்கம் தெரிவித்ததும் யாவரும் பெருமானந்தம் கொண்டனர். உடனே இறந்துபோன இந்த இளைஞனுடைய உயிருக்குப் பதிலாக ஒரு உயிரைத் தந்தால் எனது காரியம் கைகூடும், இல்லையேல் இயலாது என்று கூறினார்.

தனது பக்தனுடைய அன்பு அம்மாவைப் பார்த்து, "தாயே! உமது மகனைக் கண்ணென நேசிக்கின்றீர்! அவருக்காக நீங்கள் உங்கள் உயிரைத் தியாகம் செய்யலாமே? வயதும் தாண்டி விட்டது. இனிப் போக வேண்டிய காலமல்லவா? செயற்கரிய இச்செயலை உங்கள் ஒரே ஒரு மகனுக்காகத் தியாகம் செய்ய ஒரு தருணம் ஆண்டவன் இட்டுள்ளான்! என்று கேட்டார். இவ்வாறு ஞானியார் கூறியதும், அன்புத் தாயார் அலறுவதை நிறுத்தினார். நான் எவ்வாறு உயிரைக் கொடுப்பது! சாமி எனக்கு இன்னும் ஒரு மகன் உள்ளான். உங்கட்கு அதனைப் பற்றி அறிந்திருக்கமாட்டீர்கள். நான் உயிர் விட்டால் இவன் கவலை கொள்வான். ஆகவே உங்கள் விருப்பப்படி என்ன செய்வது" என்று கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்பு பக்தனின் பத்தினியைப் பார்த்து "நீராவது உமது உயிரினும் இனிய கணவனுக்காக உயிரைத் தியாகம் செய்தால் என்ன? கணவனை இழந்து இவ்வுலகில் வாழ்வதில் கண்ட பலன் யாது?" என்று கேட்டார். இதற்கு இல்லாள் கூறுகின்றாள் "நான் விதவையாக மாற வேண்டும் என்று விதி இருந்தால் யாராற்றான் தடுக்க முடியும்? எனது மரணத்தின் செய்தி கிடைத்தால் எனது மாதா பிதா அதிர்ச்சி அடைவார்கள். இதற்கும் மேலாக எனது மக்களைப் பராமரிக்க வேண்டுமே! ஆகவே எனது உயிரைத் தியாகம் செய்ய முடியாது" என்று பதிலளித்து விட்டாள்.

இவை அத்தனையும் மிகவும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டு கிடந்த பக்தன் துள்ளிக் குதித்தெழுந்தான். ஞானியாரை நோக்கிக் கீழ் வருமாறு கூறுனான். "இவர்கள் யாபேரும் என்னை நேசிக்கின்றார்கள் என்று எண்ணினேன். உண்மையை உள்ளபடி பகிரங்கமாக்கி விட்டார்கள். யானே ஏமாற்றப்பட்டுவிட்டேன். இனி இவ்விடம் எமக்கு என்னவேலை உளது? உங்கள் அடிமை. இதோ உங்கள் பின் வருகிறேன்!" எனக் கூறினான்.

உலகில் ஒருவருக்கொருவர் காட்டும் பட்சமும் பாசமும் பந்தமும் இதுபோலவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38

## யாவருக்கும் ஈஸ்வரகடாக்ஷம் சமம்

ஒரு பாதிரியார் ஒரு தேவாலயத்தில் போதனை ஒன்று நிகழ்த்தினார். நூற்றுக் கணக்கானவர் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்திருந்தனர். அவர்களுள் நோயாளிகள், வறியவர்கள், கால், கை ஊனமுள்ளவர்கள் பலர் காணப்பட்டனர்.

"ஆண்டவன் மக்களிடையே வேற்றுமை காட்டாது பணக்காரன், பணமற்றவன், நோயாளி, சுகதேகி என்ற வித்தியாசம் இல்லாது யாவர் மீதும் அவரது கிருபா கடாக்ஷம் சொரியப்படுகின்றது" என்று கூறினார்.

இவ்வாறு பாதிரியார் பேசிக்கொண்டிருக்கும் போது துண்டு துண்டாக விழுந்துகிடந்த ஒரு மெழுகுவர்த்திமீது அவரது கண்கள் பட்டன. மேடையிலிருந்து இறங்கினார். அத்துண்டுகளில் ஒன்றை எடுத்தார். அதனைச் சபையோர் முன் காட்டினார். நெருப்புக் குச்சியினால் பற்றவைத்தார். மெழுகுவர்த்தி உடனே பிரகாசமான வெளிச்சத்தைத் தந்தது. காலால் விளக்குண்டு ஒடிந்து துண்டுகளாக இருந்தாலும் இந்த மெழுகுவர்த்தியில் தீச்சுடர் பட்டதும் பிரகாசிக்கத் தொடங்கியது. மெழுகுவர்த்தி முறிந்து நொண்ட ரடியாகிவிட்டது. முடமாகிவிட்டது என்ற காரணத்தினால் (ஆண்டவன் கிருபை) நெருப்புக்குச்சி தனது தொழிலைச் செய்ய மறுக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையின் கண்ணுள்ள நொந்த நெஞ்சங்கள் பால் நிறைந்து வழிந்தது போன்ற புளகாங்கிதமடைந்தனர்.

உண்மையாக இறைவன் கருணையே வடிவினன். இரக்கம் நிறைந்தவன். எவன் ஒருவன் தனது மனக்கதவைத் திறந்து இறைவனது கிருபா கடாக்ஷத்தை ஏற்க விரும்புகிறானோ அவனுக்கு இறைவன் பாரபட்சமின்றிக் கருணையைப் பொழிகின்றார்.

---

**வினைவலியும் தன் வலியும் மாற்றான் வலியும்**
**துணை வலியும் தூக்கிச் செயல்**

செயலில் வலிமையும், தன் வலிமையும், மாற்றானது வலிமையும், துணை செய்வாரின் வலிமையும் ஆராய்ந்தே செயலைச் செய்யவேண்டும்.

**பகல் வெல்லுங் கூகையைக் காக்கை இகல் வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

தன்னைவிட வலிமையான கூகையைப் பகல் நேரத்தில் காக்கை போரிட்டு வென்றுவிடும்: அவ்வாறே பகைவரை வெல்லும் வேந்தர்க்கும் தகுந்த காலம் வேண்டும்.

**கொக் கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத் தொக்க சீர்த்த இடத்து.**

காலத்தை எதிர்பார்க்க வேண்டிய பருவத்தில், கொக்கைப்போல இருந்து காலம் வாய்த்த போதில் கொக்கு மீனைக் குத்தினாற் போலத் தவறாமல் செய்து முடிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39

# உன் அகக்குகையில் உறையும் ஆண்டவன்

கிருஷ்ணபரமாத்மாவைத் தனது இஷ்ட தெய்வமாகக் கொண்ட பக்தனொருவன் அவரை அடையும் வழியைத் தெளிவுபடுத்துவான் வேண்டி வழிகாட்டியை நாடினார். சில பக்தர்களை நாடி கிருஷ்ணபரமாத்மாவைக் கண்டு தரிசிக்க உதவி செய்வீர்களா என்று வினவினார். தாங்களே இதுவரை கிருஷ்ண பரமாத்மாவை நேரே கண்டு தரிசிக்க முடியவில்லை என்று கூறிவிட்டார்கள். ஆனால் பிருந்தா வனத்துக்குச் சென்றால் அங்குள்ள அடியார்கள் அதற்கான முறைகளை ஒருவேளை சொல்லித்தர முடியும் என்றார்கள். இதனைக் கேட்டதும் பொந்துத்தேன் கிடைத்த மாதிரி, பிருந்தாவனத்தை அடைந்து அங்குள்ள பூசாரிகளிடம் கிருஷ்ண பரமாத்மாவைக் கண்டு தரிசிக்கும் முறையைக் கூறும் வண்ணம் கேட்டார். அவர்கள் எல்லோரும் ஒரு குரலில் தாங்கள் இதுவரை பரமாத்மாவை நேரே கண்டு தரிசிக்காதபடியினால் தங்களால் ஒருவித உதவியும் செய்ய இயலாது எனக் கையைவிரித்து விட்டனர். ஆனால் அவர்கள் இந்தப் பக்தசிகாமணியைப்பார்த்து, கோகுலத்துக்குச் சென்றால் கிருஷ்ணபரமாத்மாவைப் பார்க்கமுடியும் என்றனர். அங்கு உடனே சென்றார். அங்கும் பலன் பூச்சியம். அங்குள்ளவர்கள் கூறியபடி, கோவர்த்தனம், மதுரை, துவாரகை முதலிய புண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தலங்களுக்குச் சென்றார். சொல்லப் போனால் இந்தியாவில் மாயவனின் ஆலயங்கள் எல்லாம் சென்று அடியார்களைக் கண்டு வழிபட்டும் கிருஷ்ணபரமாத்மாவை நேரே கண்டு தரிசிக்க முடியவில்லை.

பக்தன் நம்பிக்கையிழந்தவனாக அடுத்து என்ன செய்யலாம் என்று எண்ணலானான். சுற்றில் ஒரு தனியான இடத்தில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவனாய் தனக்குள், "ஆ! தெய்வமே! உன்னைத் தேடிக் களைத்து விட்டேன். உனது தரிசனத்தை எவ்வாறு காண்பேன்? ஆண்டவா! நான் உனது அடிமை என்பது தெரியுமே! உன்னைக் காண்பதற்குத் துடியாகத் துடிக்கின்றேனே! உமது சுயரூபத்தை எனக்கு ஒருதரம் காட்டியருளுவீராக!" என்று விண்ணப்பித்தான்.

உடனே ஒரு அற்புத நிகழ்ச்சி நடந்தது. மிகவும் கவர்ச்சிகரமான இனிமையான குரல் ஒன்று கேட்பதனைக் கவனிக்கலானான். "ஓ எனது குழந்தாய்! நான் இங்கே உனது அகக்குகைக்குள் தஞ்சம் புகுந்திருக்கின்றேன். இங்கே திரும்பு என்னைப்பற்று. அதியற்புதமான காட்சியை நிரந்தரமாகக் கண்டு ரட்சிக்கப்படுவாய்" என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40

# அகம்பாவம் அழிந்து போக வருவது சுதந்திரம்

காஷ்மீர் நகரத்தில் ஒரு பெரிய வணிகன் இருந்தான். பேர்சியா நகரத்தில் உள்ள பண்டங்களையே விற்பனை செய்தான். ஒவ்வொரு வருடமும் ஏதாவது வியாபாரப் பொருட்களை தூர தேசமாகிய பேர்சியாவுக்குக் கொண்டு சென்று அங்கு அவைகளை விற்பனை செய்துவிட்டு தனது தேசத்துக்கு அங்குள்ள நல்ல பொருட்களை விலை தந்து கொண்டு வருவான். இவ்வாறு பல வருடங்கள் சென்று ஓடுகின்றன.

ஒரு நாள் பேசும் கிளிப்பிள்ளை ஒன்றினை விற்பனைக்கு இருப்பதாகப் பேர்சியாவில் கண்டான். அதனைப் பொருள் கொடுத்து வாங்கிப் பெற்றுத் தனது நகரமாகிய காஷ்மீருக்குக் கொண்டு வந்து தனது வீட்டில் ஒரு முக்கிய இடத்தில் (கூண்டில்) வைத்தான். மக்களைப் போன்று உரையாடும் கிளிப்பிள்ளையாகையால் வணிகனும் அவனது குடும்பத்தினரும் மிகவும் நேயமாக அதனைப் பராமரித்து வந்தனர். வருடா வருடம் பேர்சியாவுக்குப் போகின்ற நாட்களாகிய அத் தினங்களில் ஒரு தினம் வணிகனுக்கு நோய் கண்டுவிட்டது ஆகவே நம்பிக்கைக்குப் பாத்திரமான தமது செயலாளரைத் தனக்காகப் பேர்சியாவுக்குச் சென்று வருமாறு பணித்தான். இதனை அறிந்த கிளிப்பிள்ளை, அக்காரியதரிசியை நோக்கி; "நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தாய் நாடாகிய பேர்சியாவுக்குப் போகின்றீர். எனக்காக ஒரு சகாயம் செய்வீர்களா? உங்களுக்குத் தெரியும் அங்கு அடைபட்டு மறியலில் உள்ளேன். சுதந்திரமாகப் பறந்து சந்தோஷமாக இருப்பதனை மறுக்கப்பட்டுள்ளது. நீர் போகும் பட்டினத்துக்குக் கீழ்த்திசையில் உள்ள காட்டிற்குச் சென்றீரானல் அங்குள்ள மரங்களில் எனது உறவினர்களும் நண்பர்களும் இருப்பார்கள். அவர்களுக்கு எனது இப்போதைய நிலையை விபரமாகக் கூறுங்கள். எத்தனையோ மைல் தூரத்துக்கப்பால் அடைபட்டு வியாகுலத்துடன் இருப்பதாகவும் கூறுங்கள். என்னை விடுவிப்பதற்கு என்ன வழிவகைகளை கையாள வேண்டும் என்பதனை அவர்களிடம் வினவி வரவும். அவர்கள் தரும் விளக்கத்தைக் கேட்டு வந்து எமக்கு அப்படியே கூறுங்கள்'' எனக் கூறியது

பேர்சியாவில் தான் வந்த வியாபார விடயங்களை முடித்து விட்டு காரியதரிசி, கிளிப்பிள்ளை கூறிய காட்டுக்குச் சென்று மரங்களில் அநேகம் கிளிகள் இருப்பதனைக் கண்டு கிளிப்பிள்ளை கூறியவற்றை மும்முறை உரத்துக் கூறினன். மறு உத்தரமாக ஒன்றும் வராததைக் கண்டு திரும்ப முயலும் போது ஒரு கிழக்கிளி பறந்து வந்து காரியதரிசி முன்பாக படார் என வீழ்ந்து இறந்தாற் போன்று கிடந்தது. காரியதரிசி இச்சம்பவத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது, இது முதுமைப்பருவமடைந்த தன்மையினுல் இறந்து விட்டது என்று மனதில் நினைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியதரிசி சில நாட்களுக்குள் காஷ்மீர் நகருக்கு மீண்டு தமது வியாபாரச் செய்திகளை வணிக முதலாளிக்குச் சமர்ப்பித்து விட்டுச் செல்லும்போது அங்கே உள்ள பேசும் கிளி காரியதரிசியைக் கூப்பிட்டுத் தான் கூறிய செய்திகளின் பலன் என்ன என்று வினவிற்று. காட்டில் தான் எவ்வாறு கிளிக் கூட்டங்களை நோக்கிக் கூறியதையும், பின்பு ஒரு முதிய கிளி ஒன்று தன் முன் விழுந்து இறந்தது என்பதனையும் கூறினான், இதனை இவ்வாறு கேட்டதும், கிளிப்பிள்ளை தனது கூட்டில் உள்ள கம்பியிலிருந்து கீழே விழுந்து இறகுகளை நன்ருக விரித்து இறந்து போனதாகக் கிடந்து விட்டது. திடீரெனக் கிளிப்பிள்ளைக்கு ஏதோ மாரடைப்பு நேர்ந்து விட்டதென எண்ணி இந்தத் துக்கச் செய்தியை வணிகனுக்கு அறிவித்தான். வணிகனும் நீட்டி நிமிர்ந்து ஆடாமல் அசையாமல் மரணப்படுக்கையில் இருக்கும் தனது கிளிப்பிள்ளையைக் கண்டான். ஒரு காவலாளியை அழைத்து அப்பறவையைக் கூட்டிலிருந்து அகற்றி அப்பால் வீசும்படி கூறினுன் அவனும் அப்படியே அதனை எடுத்து ஒரு குப்பை மேட்டில் வீசினான். பூமியின் மேல் பறவை பட்டதும் உடனே அது பறந்து சென்று விட்டது

இக்கதை தரும் பாடம், ஆன்மா உண்மைச் சுதந்திரம் பெறுவது அகம்பாவ எண்ணம் அழிந்த பின்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41

# அறிவும் உணர்வும் எதிரும் புதிரும்

ஒரு பிராமணன் தனது இரு மைந்தர்களையும் ஒரு பண்டிதரிடம் வேதம், உபநிஷதம் முதலியவற்றைக் கற்கும்படி அனுப்பியிருந்தார். பன்னிராண்டு கசடறக்கற்ற பின்பு வீடு திரும்பினர். அவர்களுள் ஒருவரைப் பார்த்துத் தகப்பன் "பிரமம் என்றதை அறிந்துக்கொண்டாயா?" என்று கேட்டார். "ஆம்" என்று உடனே பதில் தந்துவிட்டு, வேத உபநிஷதங்களிலிருந்து பந்தி பந்தியாக மேற்கோள்கள், எடுத்துக்காட்டுக்கள் எடுத்தியம்பி 'பிரமம்' என்பதனை விளக்கினன், மிகவும் அமைதியோடு, தனது மைந்தன் ஆற்றிய சிறு சொற்பொழிவைக் கேட்டு வைத்துவிட்டு "பையா! நீ 'பிரம்மத்'தைச் சரியாக அறியவில்லை'! என்று கூறினர்.

அடுத்து மற்ற மகனைப் பார்த்து, "நீயாவது பிரம்மத்தை விளங்கிக் கொண்டாயா?" என்று கேட்டார். இதே கேள்வியை ஒருமுறை இருமுறை, மும்முறை, நான்குமுறை திருப்பித் திருப்பிக் கேட்டார். பையன் மௌனமாகவே இருந்துவிட்டான். இதனை உணர்ந்த தந்தை 'எனது மைந்தா! உன்னைக் கண்டு உளம் மகிழ்ந்தேன். 'பிரம்மத்தை' முற்றுக உணர்ந்து விட்டாய்" என்றார். இதிலிருந்து தெரிவது மௌனத்திலேயே உண்மையை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது மனதில் அங்கும் இங்கும் அலையாது முற்ருகச் செயலிழந்து காணப்படும் சிந்தனை யானது தனக்குள் ஒருவிதமான விளக்கத்துக் கும் இடம் அளிக்க வழி விடாது ஏனெனில்? அந்த விளக்கம் விவரிக்கொணுதது! என்பதனுலன்ரே.

---

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும் புனலின்
நீங்கின் அதனைப் பிற.**

ஆழமான நீரினுள் மற்றைய உயிர்களை முதலை வெற்றி கொள்ளும்: நீரைவிட்டு வெளியே வந்தால் முதலையை மற்றைய விலங்குகள் கொன்று விடும்.

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.**

ஒருவர் தாம் அடையும் பெருமைக்கும் மற்ருெருவர் தாம் அடையும் சிறுமைக்கும் அவரவர்களின் செயல்களே தகுந்த உரைகல் ஆகும்.

**தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.**

தெளிவாக ஆராயாமல் ஒருவனைத் துணையாக நம்பி யவனுக்கு அவனுக்கு மட்டுமன்றி அவன் வழிமுறையில் வருபவர்களுக்கும் தீராத துன்பம் உண்டாகும்.

**இதனை இதனுல் இவன் முடிக்கும் என்ருய்ந்து
அதனை அவன்கண் விடல்.**

இந்தச் செயலை இன்ன காரணத்தால் இவன் செய்து முடிப்பான் என்று ஆராய்ந்து, அந்தச் செயலை அவனிடமே செய்யுமாறு விட்டுவிடுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42

# வீழ்ச்சிக்கு முன்பு பெருமை வழி காட்டுகின்றது

நீண்டு உயர்ந்த நாசியை உடைய ஒருவன் முதுகுப்புறமாகப் படுத்துத் தூங்கியவண்ணம் கிடந்தான். ஒரு கூட்டம் எறும்புகள் ஒன்று கூடி ஆலோசனை நடத்தித் தாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இம் மனிதனின் மீது ஏறி அவனது நாசிக்குள் செல்வது என்பதாகும். அப்படியே மலை ஏறிப் பழகிய எறும்புகள் ஐந்தாறு பகுதியாக தங்கள் யாத்திரையை ஆரம்பித்தன. ஒரே நேரத்தில், நித்திரை செய்து கொண்ட மனிதனின் நாசி நுனியை வந்தடைந்தன. தங்களுக்குள் திடீரென ஒரு வாக்குவாதம் ஆரம்பமாயது. அவர்களுள் எவர் அம்மனிதனின் நாசிக்கு முதலாவது வந்தது என்பதாகும். இவ்வாறாக எறும்புகள் தங்கள் உடம்புகளை அசைத்து ஆர்ப்பரித்த காரணத்தினால் தேவையற்ற எரிச்சலை நித்திரையில் ஆழ்ந்த மனிதனுக்கு உண்டாக்கி விட்டன. திடீரெனத் தனது வலது கரத்தை உயர்த்தி தனது மூக்கு நுனியைத் துடைத்து விட்டான். என்ன நடந்தது. தங்கள் வெற்றிச் செருக்கில் மயங்கிய எறும்புகள் இருந்த இடம் தெரியாது போயின.

இது போன்றே வெற்றிவாகை சூட்டித் திரியும் சிலர் தங்கள் பெருமைகளைக் கொட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளம் கொட்டுவார்கள். சமாதானத்தை விரும்பி வாழும் அப்பாவி மக்கள் மீது தங்கள் அகங்காரத்தை அவிழ்த்துவிடுவார்கள். ஆனால் ஆண்டவன் தனக்கே உரிய விசித்திர முறையில் இவ்விதம் மோசமானவர்களை நிலத்திலிருந்து அகற்றிவிடுகின்றார். இக்கதை தரும்படிப்பினை 'பெருமை அடித்துக்கொண்டு திரியாதே' என்பதாகும்!

---

**அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடின்றி நீர்நிறைந் தற்று.**

சுற்றத் தாரோடு மனங்கலந்து பழகாத ஒருவனுடைய வாழ்வானது, கரை யில்லாத குளப்பரப்பிலே நீர் நிரம்பினாற் போலப் பயனற்றதாகும்.

**அரியவென் றாகாத இல்லை பொச்சாவாக்**
**கருவியாற் போற்றிச் செயின்.**

மறவாமை என்னும் கருவியினாலே எதனையும் பேணிச் செய்தால், செய்வதற்கு அரியன என்று நினைத்துக் கை விடும் செயல்களும் இல்லையாகும்.

**கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனோடு நேர்.**

கொடிய செய்வாரைக் கொலைத் தண்டனையால் தண்டித்தும் மற்றவர்களை அருளோடு காத்தும் முறை செய்தல் பசும் பயிரில் களை யெடுப்பது போன்ற சிறந்த செயலாகும்.

**அல்லற் பட்டாற்றாது அழுத கண்ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை.**

கொடுங்கோல் ஆட்சியால் அல்லல்பட்ட மக்கள், அதைப் பொறுக்கமாட்டாது அழுதகண்ணீரே, ஓர் அரசனின் செல்வத்தை அழிக்கும் படை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43

# எதனையும் தருவது எமது இறைவனே!

உலகில் வாழும் உயிர் உள்ளவற்றுக்கும் உயிர் அற்றவற்றுக்கும், காப்பவராகவும், வளர்ப்பவராகவும் இருப்பவர் இறைவன் ஒருவரே. மனிதனே தனது சுய முயற்சி இல்லாமல் உலகில் ஒன்றும் இயங்காது என எண்ணுகின்றான். இறைவன் ஒன்று உண்டு என்பதனை முற்றாக அகற்றிவிட்டு, யாவும் தமது ஆக்ஞைப்படியே நடக்கின்றன என எண்ணுகின்றான். ஆனால் ஆண்டவனது அளப்பரிய சக்தியினாலேயே அண்ட சராசரங்களும் (மனிதனும், மிருகங்களும், மரங்களும் இன்னும் ஊரும் ஜெந்துக்களும்) இவ்வுலகில் இயங்குகின்றன.

இவ்வித மயக்க சிந்தனையுள்ள ஒருவன் ஒரு பொதியுடன் புகையிரதமொன்றில் ஒரு நாள் பிரயாணம் செய்துகொண்டிருந்தான். பிரயாணம் செய்யும்போது தனது பொதியைத் தலையில் தூக்கி வைத்தான். அவ்வாறு தலையில் வைக்காது விடின் பொதி தன்னுடன் இருக்காதெனை எண்ணினான். இவ்வாறான புத்திசாலி இவன். இம்மானிலத்தில் உள்ள அத்தனை பாரத்தையும் இறைவனே தாங்குகின்றார். அதனை மறந்து, நாங்கள் நினைக்கின்றோம் எங்கள் சுமைகளை நாங்களே சுமக்கவேண்டுமென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44

# இறைநாமத்தை நேசிக்கப்பழகு

ஆண்டவன் நாமத்தில் நம்பிக்கை வைப்ப தென்பது எவருக்கும் எளிதில் கிட்டுவதன்று. ஆண்டவனது ஆசீர்வாதம் பெற்று இறைநாமத் தில் நம்பிக்கை கொண்டவர்கள், ஆத்மீகத்துறை யின் உச்சிக்கு உயர்ந்து இறைவனது அழகில் லயித்துவிடுவார்கள். மகாராஷ்டிரத்தில் உள்ள துக்காராம் என்று அழைக்கப்படும் பெரும் புகழ் படைத்த ஞானியர் இறைநாமத்தில் அசையாத பற்றுடையவராக இருந்தார். இவரது சங்கீர்த் தனம் கேட்போரது மனத்தை ஈர்த்து கசிந்து ருகச் செய்துவிடும். அந்த ஊரிலுள்ள கோவிலில் காதலாகக் கசிந்துருகிப் பாடும் பழக்கம் உடை வராக வாழ்ந்து வந்தார். பல்லாயிரக் கணக் கில் பக்தர்கள் பரவசமாகி இவரது பஜனையில் பங்கு பற்றி பரமசிவனைப் பாடுவார்கள். இவ்வா றுன பெருவிருந்தை விரும்பி வரும் கூட்டம் வளர்ந்து கொண்டே வந்தது.

ஒருமுறை துர்க்காராமுடைய நண்பர் ஒருவர் அவரிடம் வந்து 'இதுவரை பாடிய பாடல்களி லும் பார்க்க மிகவும் பக்தியில் லயிக்கத்தக்க முறையில் பாடுங்கள் பார்ப்போம்'' என்று கேட் டார்.துர்க்காராம் அதற்குச் சம்மதித்தார். அடுத்து வரும் இராப்போதில் தாம் சங்கீர்த்தனம் செய் வதெனத் தெரிவித்தார். இச்செய்தி நாடெங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவி விட்டது. மக்கள் கூட்டம் பெருகிவிட்டது. சமுத்திர அலைபோன்று ஆலய முன்றலில் மக்கள் வெள்ளம்.

சங்கீர்த்தனத்தில் கலந்து பாடவும் பங்கு கொள்ளவும் மக்கள் பரவசத்துடன் நின்றனர். பண்டரிபுரத்தில் எழுந்தருளிக் காட்சிதரும் அருட்சக்தியாகிய **"வித்தால்"** என்ற நாமத்தை துக்காராம் தமது கரங்களில் தாளம் ஏந்திய வண்ணம் நின்று **'வித்தால்! வித்தால்"** என்று பரவச நிலையில் பாடுவாராயினர். கேட்டோர் யாவரும் இந்த இனிமையான நாமத்தினால் ஈர்க்கப்பட்டனர். ஆண்டவன் நாமம் கணீர் என எங்கும் ஒலித்தது. தேனாறு பாய்ந்து வழிந்தது போன்று வித்தால் வித்தால்! என்று துங்காராமின் உதடுகளில் இருந்து உதிர்ந்தன. ஆனந்த மேலீட்டினால் தன்னையே மறந்தார்! பரவசத்தரானார், நெஞ்சு நிரம்பிய இறைபாசத்தரானார். கண்கள் தானாகவே மூடியது. ஆடினார். பாடினார். இறைவனோடு ஒன்றினார். "வித்தால்! வீத்தால்!" என்ற நாமத்தின் இனிய ஓசை தாள ஒலியோடு ஒன்று சேர்ந்து கேட்பாரை மெய்மறக்கச் செய்து விட்டது. இராப்பொழுது எவ்வாறு ஓடி மறைந்ததோ ஒருவரும் அறிந்திலர். விடியும் நேரமாகி விட்டது. சூரிய கிரணத்தின் இளமைக் கதிர்கள் துயிலினின்று எழும் மக்களது மனதுக்கு மங்களத்தைதந்தது. துக்காராம் ஆனந்தத் துயிலிலிருந்து சற்றுக் கண்விழித்தார். பஜனையில் பங்கு பற்றியவர்கள் யாரும் அங்கிலர் என்பதனைக் கண்டார். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் மாத்திரம் காணப்பட்டார். அவரும் தான் நின்று பாடியவண்ணம் இருந்த கம்பளத்தின் மீது இருந்தார். ஒருவனுவது இறைநாமத்தில் லயித்த வண்ணம் இருந்துவிட்டானே என்று மட்டில்லா மகிழ்ச்சி கொண்டார். உடனே அந்த மனிதனைப்பார்த்து 'நண்பா! ஜனசமுத்திரமாக கூடிக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லோ ரும் சென்றுவிடவும் நீர் ஒருவரே இந்த "வித் தால்" என்ற தெய்வீக நாமத்தில் பத்திபரவசத் தராகி இதுவரை மெய்மறந்து இருந்துவிட்டீரே உம்மை இறைவன் ஆட்கொண்டு விட்டார்' என்று பாராட்டினர்.

உம்முடைய பக்திததும்பும் பாட்டோ! அல் லது இறைநாமமோ என்னை இதுவரை உம்மு டன் தங்கச் செய்தது என்று எண்ணி ஏமாந்து விடாதீர்! இந்த நாமத்தால் எனது காது அடைத் துவிட்டது. இதுவரை நின்று பாடிய வண்ணம் இருந்த கம்பளம் எனக்குச் சொந்தம். அது இல் லாமல் யான் எவ்வாறு வீடு செல்வது! அதற் காகவே நிற்கவேண்டிய நிர்ப்பந்தமாகிவிட்டது. என்ருர்.

"ஆகா! அதுவா காரியம்" என்றவாறு துக் காராம் கம்பளத்தைத் தூக்கிக் கொடுத்தார். கம் பளத்தைப் பெற்றதுதான் தாமதம் விரைந்து வீடு சென்று விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 கடவுள் அளிக்க மறுத்ததை அடியார்கள் அளிப்பார்கள்

ஒரு கிராமத்தில் விஷ்ணுபக்தர் ஒருவர் இருந்தார். அவர் விவாகமாகிப் பல்லாண்டாகி விட்டது. பல விரதங்கள் இருந்தும் புத்திர பாக்கிய மற்றவராக இருந்தார். ஒருநாள் இக்கிராமத்தினூடாக நாரத மாமுனிவர் சென்றார். விஷ்ணுபக்தர் முனிபுங்கவரை கண்டதும் அவர் "எங்கு போகின்றீர்?" என வினவினர். தான் வைகுந்தம் போவதாகக் கூறினர். "தயவு செய்து எனக்கு எதற்காக இது வரை புத்திரபாக்கியம் அளிக்க வில்லை" என்பதனையும், "எப்போது அப்பாக்கியம் அளிக்க இருக்கிறார்" என்பதனையும் அறிந்து வரவேண்டும்" என்று நாரதமாமுனியை அப்பக்தன் கேட்டு நின்றார்.

வைகுந்தம் அடைந்ததும் பக்தனுடைய மனக்குறையைப்பற்றி பிரலாபித்தார். இப்பத்தனுக்கு இப்பிறப்பில் பிள்ளைப் பாக்கியம் கிடைப்பதற்கு முறை இல்லை" என்று திருமால் விடையிறுத்தார்.

இச் செய்தியை, விஷ்ணு பக்தனுக்குக் கூற நாரதமாமுனி விரும்பவில்லை. இது அவனுக்கு வருத்தமாக இருக்குமல்லவா! எனவே அவர் அவனிடம் செல்லவில்லை பல வருடங்கள் சென்று விட்டன. விஷ்ணுபக்தனை மீளவும் நாரதமுனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் காண்பதற்கு, பக்தனுடைய வீட்டுக்குச் சென்றதும் மூன்று அழகான குழந்தைகள் வீட்டு முற்றத்தில் நின்று விளையாடிக்கொண்டு நின்றனர். அவர்கள் அந்தப் பக்தனுடைய பாலர் களே எனவும் நாரத முனிவர் அறிந்து அதிசய மானார். பக்தனுக்கு எவ்வாறு புத்திரப்பேறு கிடைத்தது? என்பதனை ஆராய்ந்து அறிவதில் முனையலானார்.

"யான் தங்கள் தரிசனத்தின் பின்பு ஒரு மகா சந்நியாசியைத் தரிசிக்கும் வாய்ப்புப் பெற்று அவருக்குச் சேவைபுரியும் வாய்ப்பினையும் அடைந்தேன். தன்னலமற்ற எனது சேவையை மெச்சி, எனக்கு என்ன வேண்டுமென வினவினார். எனக்கு எனது சந்ததி விளங்க ஒரு புத்திரன் வேண்டும் என நின்றேன்". அதற்கு அவர் "உனக்கு ஒரு மகன் அல்ல, மூவர் தருவேன்' என்றார்.

இச் செய்தியைக் கேட்டதும் தாமதியாது வைகுந்தமடைந்து "எதற்காக இவ்வித பொய் யுரை கூறினீர்!" என்று விஷ்ணுவை வினவினார் நாரதமாமுனி.

விஷ்ணுதேவர் புன்னகை புரிந்துவிட்டு, "அப் படியாயின் உண்மையாக ஒரு மகா தபசியா லன்றி வேறு ஒருவராலும் விதியை மாற்ற இய லாதன்றோ" என விடை பகர்ந்தார்.

கடவுள் அளிக்க மறுத்ததை அடியார்கள் அளிப்பார்கள் என்பது உண்மைப்படுத்தப்பட் டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46

# நல்ல பாடம் புகட்டப்பட்டது

ஒரு கிராமத்தில் ஒரு குடும்பம் – கணவன் மனைவி வாழ்ந்து வந்தனர். கணவன் மனைவியுடன் இடையிடை சண்டை சச்சரவு செய்த வண்ணமாக இருந்தான். இவ்வாறு கணவன் சச்சரவு தொடுக்கும்போது மனைவியைப் பார்த்து "இதோ பார்! நான் இல்லத்தைத் துறந்து சாதுவாகச் சென்று விடுவேன்" என்று பயமுறுத்துவான். இவர்கள் இருந்த கிராம எல்லையருகே ஒரு சாது ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார். மாலை வேளைகளில் தியானம் செய்யப் பழக வேண்டும், ஆத்மீகத்துறையில் போதனை கேட்கவேண்டும் என்று அவாவுவோர் இந்தச் சாதுவிடம் செல்வார்கள். இவர்களுள் இக்கதையின் ஆரம்பத்தில் கூறப்பட்டவரும் ஒருவர். ஒவ்வொருதரமும் மனைவியுடன் சண்டையிடும்போது" நீ எனது சொற்களைக் கேட்கின்றாயில்லை. இதோ உன்னை விட்டு சாதுவிடம் செல்கின்றேன்" என்பான். இப்படியாக இவனுடன் மனைவி படுமோசமான வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது.

ஒருநாள் இவன் அயற்கிராமத்துக்குச் சென்று விட்டான். இத்தருணத்தை சாதகமாகக் கொண்டு – சாதுவிடம் சென்று முறையிடலானாள். மற்ற முறை உன்கணவன் பயமுறுத்தினால், அவனைப்பார்த்து "உன் விருப்பப்படியே

உடனேயே செய்யலாம்'' என்று சொல்லிவிடு என ஆலோசனை கூறினர்.

ஒருசில நாட்கள் சென்றதும், மனைவியுடன் சண்டையிடலாயினன். மனைவியைப் பார்த்து ''எனக்கு இனி சந்நியாசமே வழி வேறு மார்க்கம் இல்லை'' என்று உரக்கக் கத்தினன். மனைவி இவனைப்பார்த்து - ''உனது விருப்பப்படியே ஆண்டியாகிவிடு'' என்ருள். உடனே மூர்க்கத்தனமான வெறித்த பார்வை பார்த்துவிட்டு, சாதுவின் குடிசையை நோக்கி நடந்தான். அங்கு சென்றதும் ''வீடு, வாசல் மனைவி யாவையும் துறந்து தங்களிடம் தஞ்சம் அடைய வந்துள்ளேன்'' என்ருன். சாது இவனை வரவேற்று அமரும்படி வேண்டினர்.

மதிய போசன வேளை அண்மிக்கும் நேரம் சாது ஒரு சீடனை நோக்கி, ஒரு தொகை வேப்பம் குழைகள் கொண்டு வரும்படி வேண்டினர். இந்த இலைகள் மிகவும் கசப்பு வாய்ந்தன. இந்த இலைகளை நன்ருக அரைத்து லட்டு மாதிரிப் பிடித்து வரக் கூறிவிட்டார். சீடனுக்கு லட்டுச் செய்ய அதிகநேரம் பிடிக்கவில்லை. மனைவியுடன் சண்டையிட்ட மனிதன் நடப்பதை உன்னிப்பாகக் கவனித்தபடி இருந்தான்.

இவ்வேளை வேப்பமிலையின் சித்திகளைப் பற்றி சாது சம்பாஷித்துக் கொண்டு இருந்தார், பிரமச்சாரிய விருத்திக்கும் தேக சுகத்தைத் திட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இருந்துவதற்கும் வேப்பிலையில் செய்த லட்டுத்தான் நன்று. இன்று எல்லோருக்கும் இந்த லட்டுத்தான் அளிக்கப்படும் என்று கூறி, முட்டுக்கோபமுள்ள எமது விருந்தாளிக்கும் ஒரு பெரிய லட்டுக்கிடைத்தது. வேறுவழி அறியாத விருந்தாளி முகத்தைச் சுளித்தவாறு வேப்பிலை லட்டை உண்ணவேண்டியதாயிற்று. இதே லட்டுத் தான் அன்று இரவும் மறுகாலையும் அளிக்கப் பட்டது. அடுத்த நாள் மத்தியானப் பொழுது எவரும் அறியாது சாதுவின் குடிசையை விட்டு மறைந்து, நேரே தனது வீட்டுக்குச் சென்று, ஒருவிதமான சச்சரவுகளும் இல்லாமல் தனது மனைவியுடன் வாழ்ந்தான்.

---

**வெரு வந்த செய் தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.**

குடிகள் அச்சம் அடையும் செயல்களைச் செய்கின்ற கொடுங்கோல் அரசன், மிகவும் விரைவாகவே கெட்டுப் போய் அழிவை அடைவான்.

**கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.**

ஒருவரது கண்ணிற்கு அணிகலமாக இருப்பது தன்னோடு பயின்றோரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை அஃதின்றேல் அறிவுடையோரால் அவர் கண்கள் புண்ணென்று கூறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 47

# இறைவனிடம் சரணகதி

முன்ஞெரு காலத்திலே ஒரு செல்வந்த இளைஞன் ஒரு சாலை வழியே நடந்து சென்ருன். அவ்வாறு செல்லும்போது அண்மையில் ஒரு வீட்டில் இருந்து அழுகுரல் கேட்டது. சற்றுத் தரித்து நின்று, அக்குரலைக் கேட்கலானுன். ஒரு சிறுமி, மிகவும் இரங்கிய குரலில் "அப்பா! எவ்வளவு காலம் நாம் உணவு இல்லாது வருந்துவது? இந்த இடத்தை விட்டு பிறிதிடம் செல்வோம். பட்டினப்பக்கம் பிச்சை எடுத்தாவது ஜீவனம் நடத்தலாம்" என்று அழுதவாறு சொன்ஞள்.

"நாங்கள் ஒருமுறை செல்வந்தராக இருந்தோம் என்பது உண்மைதான் மகளே! இப்போது கையில் ஒரு வெண்காசும் இல்லை என்பதும் உண்மைதான் மகளே! ஆனுல் இறைவன் தான் இவ்வாருன தரித்திர நாராயணஞக எமதில்லத்தில் காட்சிதந்துள்ளார் என்றதை நீ நம்பு. நாங்கள் இறைவனிலேயே தஞ்சம் என இருக்க வேண்டும். எங்கள் தேவைகளை அறிந்து ஆவன செய்வார்" எனத் தனது குழந்தையைப் பார்த்து ஆறுதல் வார்த்தைகள் பகர்ந்தான்.

செல்வந்த இளைஞன் வீட்டின் அருகே நின்றபடி மேலே உள்ள சம்பாஷணையைக் கேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி நின்ருன். இவர்கள் மீது இரக்கப்பட்டான். உடனே தனது வீடு நோக்கிச் சென்ருன். தனது திரவிய சாலேயிலிருந்து தங்கப் பாளம் ஒன்றை எடுத்து இரவோடிரவாக, மேலே கூறப்பட்டவரது வீட்டு யன்னலின் ஊடாகப் போட்டுவிட்டான். மகளும் தகப்பனும் தங்கத் துண்டைக் கண்டதும் கடவுளின் கருணை தான் என்னே என்று வியந்தனர். தங்களது பிரார்த்தனையின் பலன் என்றனர். அடுத்த இரவும் இந்தச் செல்வந்த இளைஞன் மீண்டும் ஒரு தங்கத்துண்டைப் போட்டான். மூன்ரும் நாள் இரவு இளைஞன் தங்கத்துண்டினை யன்னல் வழியாகப்போடும் போது வறியவன் பார்த்து விட்டான். உடனே இந்த வறியவன் அவனது கால்களில் வீழ்ந்து "சகோதர! இது என்ன செய்கை" என்று பிரலாபித்தான்.

இளைஞன் வறியவனைப் பார்த்து "இறைவனது அனுக்கிரகத்திஞலேயே இதனை அடைந்துள்ளாய். தேவனே எம்மை உமது இல்லத்தருகே செல்லும்படி பணித்திராவிடில், என்னை – என் மனதுக்குள் இருந்து - ஏழைக்கு உதவு - எனக்கூருதுவிடில் எவ்வாறு உங்களுக்கு யான் இவ்வாறு உதவ முடியும்" என்று கூறினுன்.

இவ்வாறு இந்த இளைஞனை சாந்த நீக்கிலாஸ் கூறி வறியவனை கட்டிக் அணைத்துத் தமது அன்பையும் எளிமையையும் காட்டினுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 48 இறை நாமத்தின் வலிமை

ஒரு பிரசித்தி வாய்ந்த மகாத்மா மகாராஸ்ரர் என்னும் நகரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் பண்டரிபுரத்தில் இருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ள மங்களவேத என்ற இடத்துக்குச் சென்ருர். செல்லும்போது, நூற்றுக்கணக்கான தொழிலாளிகள் வேலை செய்து கொண்டு - அதாவது ஒரு கோட்டையின் உயர்ந்த சுவர் ஒன்றினை எழுப்பியவண்ணம் இருந்தனர். திடீரென இச்சுவர் நொருங்கி அதனுள் இந்த மகாத்மாவும் வேறும் பலரும் மாண்டுவிட்டனர். மகாத்மாவின் பக்தர்கள் இடர்பாடுகளுக்குள் இவரது உடலைத் தேடினர். பல இடர்களின் பின்பும் இவரது உடலைக்காண இயலாது கவன்றனர்.

ஈற்றில் பல பக்தர்களாகக் கூடி சின்னுபின்னமாக உடைந்த சுவற் கற்களை, சாந்தினை அப்புறப்படுத்தலானுர்கள். இவ்வாறு செய்யும்போது பல எலும்புத்துண்டுகளைக் கண்டனர். மகாத்மாவின் எலும்பினை இனங்கண்டு எடுத்து அவைகளை ஒருங்கு சேர்த்து ஒரு நினைவு ஸ்தூபி எழுப்ப வேண்டும் என்று நினைத்தனர். ஆனுல் எலும்புகள் யாவும் கலந்தபடியினுல் மகாத்மாவின் எலும்பினை வேறுபடுத்த இயலாது தெண்டாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டரிபுரத்தில் உள்ள தேவாலயத்தில் எழுந்தருளியுள்ள விதோபா என்ற தெய்வத்தின் ஒரு பக்தன் இந்தச் சரிந்து விழுந்த சுவர் மார்க்கமாகச் செல்லக் காணப்பட்டார். பக்தர்களின் பதற்றநிலை என்ன என்பதனை அறிந்தார். 'மகாத்மாவின் எலும்புகளை இனம் கண்டு எடுக்க என்னால் முடியும்.''என்று கூறியவண்ணம், அங்குமிங்குமாக – குவியலாக இருந்த எலும்புத் துண்டுகளை ஒவ்வொன்ருகப் பிரித்து மகாத்மாவின் எலும்புகளைத் தெரிவு செய்தார். பண்டரிபுரத்தில் வீற்றிருந்தருளும் தெய்வம் விதாலின் நாமஒலி – ஓசை தெரிந்தெடுக்கப்பட்ட எலும்புகளிலிருந்து வெளிவருவதனுலேயே இது முடிந்தது. இடைவிடாது இறைநாமத்தை இம்மகாத்மா உச்சரித்தபடியினுல் எலும்பினுள் காணப்படும் மச்சையில் பதியப்பட்டு விட்டது. இறைநாமத்தின் வலிமையை, மகிமையை இயம்ப இயலாது.

---

**கற்ருர் முன் கற்ற செலச் சொல்லித் தாங்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல்**

பல நூல்களையும் கற்றவரது சபையினிடத்தே தாம் கற்றவற்றை அவர்மனங் கொள்ளும்படி சொல்லித் தாம் கற்றவைகளினும் மிக்கவற்றை அக்கற்றவரிடத்து அதிகமாக அறிந்து கொள்ள வேண்டும்.

**அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு**

அன்பினுல் ஈன்றிடப்பட்ட அருள் என்று கூறப்படும் குழந்தையானது, பொருளென்று உயர்த்திக் கூறப்படும் செல்வத்தையுடைய செவிலித்தாயால் வளர்ந்துவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49

# உண்மை ஞானிதான் கடவுளாவான்

ஒரு தாய் தனது ஒரே ஒரு மகவைத் தவற விட்டு, தாங்கமுடியாத கவலையினால் அனலிற் பட்ட மெழுகு போலானாள். இறந்த மகவை மீளவும் உயிர் பெறச்செய்து தரும்படி வைத்தியர்களிடம் சென்றாள். ஆலயங்களுக்குச் சென்றாள். பக்திமான்களிடம் சென்றாள். அவ்வாறு சென்று தனது மகவின் உயிரைப் பெற்றுத் தரும்படி மன்றாடிக் கதறினாள். ஈற்றில் ஒரு மகாத்மாவின் பக்தனிடம் - ஒரு காட்டுக் கருகில் உள்ளவர் - சென்று தனது துயரத்தைக் கூறினாள்.

அத்தாயாரை நோக்கிப் பக்தன் "நேரே மகாத்மா தங்கும் இடத்துக்குச் சென்று உனது மனக்கிடக்கையை நிறைவேற்றித் தரும்படி வேண்டு" எனக் கூறினார். அவ்வாறே அப்பெண் ஞானியாரிடம் சென்று தனக்காக இறைவனிடம் கேட்டு தனது மகவின் உயிரை மீட்டுத் தர வேண்டும் என்று மன்றாடினாள்.

மகாத்மா - இந்தப் பெண்ணின் இல்லத்துக்கு எழுந்தருளி வருகின்றார், என்ற செய்தி கிராம மக்களிடையே பரவ, அம் மக்களும் அவ்வதிசயத்தை நேரே பார்க்க வேண்டும் என்று கூடி விட்டனர். மகாத்மா மும்முறை வணக்கம் செலுத்தினார். பலன் கிடைக்கவில்லை. மக்கள் அதிச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யித்தனர். தாயார் நம்பிக்கையிழந்தவளாய் கதறத் தொடங்கினள். தாயாரின் பரிதாப நிலையினைக் கண்டு அவள் மீது பரிந்து – இரங்கி – இறந்து கிடந்த மகவை நோக்கி "நீ இதோ எழும்பு, உனக்கு உத்தரவு இடுகின்றேன்" என்று கூறினர். மக்களுடைய அதிசயம் நிறைந்த சந்தோஷம் ஒருபுறம், ஆனந்தக்கண்ணீர் விடும் தாயார் ஒருபுறம், நித்திரை விட்டெழுந்த மாதிரி மகவு எழுந்து தனது தாயாரை நோக்கி ஓடிற்று.

இக் கதையின் படிப்பினை என்னவெனில் ஞானிகள் இறை அம்சம் உடையவர்கள். அவர்களிடம் எங்களுக்காக ஆண்டவனை வேண்டுங்கள் என்று கேட்பதில் ஒரு பலனுமில்லை. அவர்களது ஆசியையும் அருளையும் வேண்டுவது ஒன்றே போதுமானது.

---

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

கண்ட இடத்துமுகம்மட்டுமே மலரும்படியாக நட்புக் கொள்வது நட்பாகாது; உள் அன்புகொண்டு மனமும் மலரும்படியாக நட்புக் கொள்வதே உண்மையான நட்பாம்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

சபையினிடத்து ஆடை நெகிழ்ந்தவனுக்கு அவன் கை தானே விரைந்து சென்று உதவுதல் போல நண்பனுக்குத் துன்பம் வந்தால் அப்பொழுதே சென்றுஅதனை விரைந்து நீக்குவதே சினேகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 மௌன சந்திப்பு

அமெரிக்காவின் உயர்ந்த தத்துவ ஞானி எமேர்சன் (EMERSON) தொமாஸ் கார்லைல் (Thomas Carlyle) என்ற ஆங்கிலப் பெரியாரைச் சந்திக்க விருப்பங் கொண்டார். எமேர்சன் - கடல் மார்க்கமாக சவுதாம்ரன் என்ற இடத்துக்கு ஒரு மாதம் பிரயாணம் செய்து இறங்கினார்.

இறங்கியதும் கார்லைல் வசிக்கும் லண்டன் மாநகருக்குச் சென்றார். அவர் அந்நேரம் வீட்டில் இல்லாதிருந்ததை அறிந்தார். வழக்கமாக தரிசிக்கும் வாசிகசாலைக்குச் சென்றால் காணலாம் என அறிவிக்கப்பட்டது. வாசிக சாலைக்குப் பொறுப்பானவர் கார்லைலைக் குறிப்புக் காட்டினார் எமேர்சனும் உடனே அவர் அருகில் உள்ள கதிரை மீது அமர்ந்தார். ஒருவருக்கொருவர் அருகே அமர்ந்து இருந்து இரண்டு மணித்தியாலமாகி விட்டது. பேச்சே இல்லை. அதன் பின்பு எமேர்சன் அவ்விடத்தை விட்டகன்று ஒரு கப்பல் மூலமாகத் தமது இல்லத்துக்குச் சென்றார்.

எமேர்சனின் நண்பர்களுள் ஒருவன் இவரை நோக்கி - கார்லைலைச் சந்தித்து அவருடன் என்ன உரையாடினீர்கள் என்று கேட்டார். கார்லைலின் "அண்மையில் எல்லையில்லாத ஒரு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தேன்" இதுவே அவரது கூற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51

# இறைவன் ஒரு பரம ரகசியம்
# GOD IS A MYSTERY

உலகப் புகழ் பெற்ற சுவாமி ராம்தீர்த்தா அமெரிக்காவில் உரையாற்றும் போது இறைவனைப் பற்றித் தம்மை மறந்தவராகப் பேசிக் கொண்டே சென்றார். இவர் மிகவும் மகிமை வாய்ந்த மகாத்மா. தமது அழியாத ஆன்மாவை யாவிலும் - மனிதனிலும் - மற்றும் வஸ்துவிலும் வியாபகமாக இருக்கச் செய்யும் வல்லமை வாய்ந்தவர். அமெரிக்க மக்களை நோக்கி யானே "ஆணுகவும் பெண்ணுகவும் உள்ளேன்" என்ருர்.

இவ்வாறு ஒரு உரை ஆற்றும் போது இறைவனை "அவன்" என்றும், பிறிது ஒரு முறை "அவள்" என்றும், இன்னும் "அது" என்றும் குறிப்பிட்டார். இவ்வாறு இறைவனை அவன் அவள், அது என்று குறிப்பிடுவது, சபையில் இருந்த ஒருவரினுல் பொறுக்க முடியவில்லை. அவர் உடனே எழுந்து பின்வருமாறு கேட்டார். "சுவாமிஜி-தாங்கள் ஒருகால் இறைவனை "அவன்" என்றும் "அவள்" என்றும், "அது" என்றும் குறிப்பிடுகின்றீர்களே! தயவு செய்து தங்களை ஒரு விஞ கேட்க விரும்புகின்றேன். அது எதுவெனில் உங்கள் கடவுள் ஒரு திரு/ திருமதி/ செல்வியா? என்பதே! உடனே வில்லில் வெளியான அம்பு மாதிரி எனது இறைவன் திருவுமல்ல, திருமதியுமன்று, செல்வியுமன்று, அவர் ஒரு பரம ரகசியம். உண்மையாக இறைவன் ஒரு Mystery தான் என்ருர்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழை திருத்தம்

| பக்கம் | பந்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| iii | 3 | 4 | வெளியீட்டார்கள் | வெளியிட்டார்கள் |
| xii | 1 | 8 | பிரசாரராகவும் | பிரசாரகராகவும் |
| xii | 1 | 13 | செட்டிக் | செட்டித் |
| xii | 3 | 3 | சிதம்பரம்பிள்ளை | சிதம்பர ப்பிள்ளை |
| xiii | 2 | 4 | கிருஷண | கிருஷ்ண |
| xv | 2 | 1 | சர்வம | சர்[illegible] |
| xvi | 2 | 5 | ென்ளியிடுதலின் | வெளியிடுதலின் |
| xvi | 2 | 9 | வகையிலுல் | வகையி லும் |
| xxii | 2 | 4 | படிப்பயை | படிப்பனை யை |
| xxx | 1 | 12 | கிருஷண | கிருஷ்ண |
| xxxi | 1 | 1 | ஆட்சிரமத்தின் | ஆச்சிரமத்தின் |
| xxxi | 1 | 10 | சாட்டிலுள் | காட்டிலுள்ள |
| xxxi | 1 | 21 | வி டுதிகளா | விடுதிகளாகக் |
| xxxii | 1 | 1 | தடைவை | தடவை |
| xxxii | 3 | 1 | ஜயாரம் | ஜயராம் |
| 37 | 3 | 3 | ஆளப் | ஆழப் |
| 39 | 5 | 2 | மற்கொள்பவனின் | மேற்கொள்பவனின் |
| 42 | 1 | 1 | ஒரு | ஒரு |
| 42 | 2 | 4 | உரிசிகளைக் | அரிசிகளைக் |
| 43 | 1 | 6 | ஆழ்ப்பட்டு | ஆட்பட்டு |
| 63 | 3 | 1 | வரமும் | வாழும் |
| 64 | 1 | 6 | சுமாமி | சுவாமி |
| 65 | 1 | 8 | ஓடுகினறுர் | ஓடுகின்றுர் |
| 65 | 3 | 1 | சுவாமிகள் | சுவாமிகள் |
| 65 | 3 | 9 | சொல்லலுந் | சொல்லுந் |
| 66 | 2 | 10 | இதுரை | இதுவரை |
| 68 | 2 | 7 | சிக்கென | சிக்கெனப் |
| 69 | 2 | 1 | ஒரு | ஒரு |
| 70 | 1 | 24 | தாங்கா | தாங்க |
| 71 | 2 | 5 | தெரித்தார் | தெரிவித்தார் |
| 72 | 1 | 11 | ஒரு | ஒரு |
| 73 | 1 | 5 | கிடைந்த | கிடைத்த |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 76 | 4 | 1 | துன்ரமே | துன்பமே |
| 80 | 1 | 9 | சாஸ்தித்தில் | சாஸ்திரத்தில் |
| 81 | 6 | 2 | வைக்கப்டும் | வைக்கப்படும் |
| 83 | 1 | 5 | புதுபிக்க | புதுப்பிக்கப் |
| 86 | 1 | 10 | ஒரு | ஒரு |
| 91 | 2 | 15 | உயரந்த | உயர்ந்த |
| 95 | 2 | 4 | ஞான | ஞானத் |
| 97 | 3 | 1 | இவற்லும் | இவறலும் |
| 109 | 3 | 12 | ரடியாகிவிட்டது | டியாகிவிட்டது |
| 111 | [illegible] | 13 | ததாவனத்தை | தாவனத்தை |
| 116 | 1 | 7 | ஐந்தாறு | ஐந்தாறு |
| 118 | 1 | 14 | ஆற்பரித்த | ஆர்ப்பரித்த |
| 119 | 8 | 1 | படடாற்ருது | பட்டாற்ருது |
| 121 | 2 | 1 | துர்க்காரா | துக்காரா |
| 121 | 3 | 5 | துர்க்காராம் | துக்காராம் |
| 122 | 2 | 11 | துங்காராமின் | துக்காரா மின் |

INTERACT CLUB
OF
MAHAJANA COLLEGE
TELLIPPALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

INTER ... T CLUB
MAHAJANA ... GE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

298
136

ாசிரியர்

... சிதம்பர. ... அவர்கள்

சுவாமிகளுடைய அரிய கருத்துக்களை ...ர்ணுணர்ந்து மொழி பெயர்த்தவர்கள்

சித்தஞான வித்தகர் ஆத்மஜோதி ஆசிரியர்

அவர் தம் பண்பருமை இனிமைகளும் பயில்... இனிமைகளும் பிரசித்தமானவை. பிரக்ஞாபூர்வமாகத் ...மில் தாம் நல்லவராயிருந்து கொண்டு பிறரும் நன்மை பெற விரும்பி முயல்பவர் அவர்.

சித்தாந்தசாகரம்-பண்டிதர்-வித்துவான் மு. கந்தையா, B.A.

சான்றோர்கள் பலரை ஈன்றெடுத்த பெருமை தெல்லிப் பழைக் கிராமத்துக்கு உண்டு. அத்தகைய சான்றோர் வரிசையில் இன்று எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.

ஆத்மஜோதி இதழ் என்னைத் தேடிவரும். நான் முன்னுரிமையுடன் முதலாவதாக வாசித்து ரசிப்பது இக்கட்டுரையே. இது ஒரு மொழிபெயர்ப்புக் கட்டுரைதான் என்று எவராலும் எளிதில் எண்ணிக் கண்டு கொள்ள முடியாது.

இவர் கொழும்பு செட்டித்தெரு ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தானத்தில் சிலகாலம் முகாமைப் பணிப்பாளராகக் கடமை புரிந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

தில்லைநாதன் மாணிக்கவாசகர்,
B. A., P. G. T., Dip, Ed. S. L. E. S.

மஹாத்மா அச்சகம், ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org